உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருக்கோட்டூர்ப் புராணம்

2932

இஃது

காரைக்குடி

ஆ. அ. குமாரசுவாமி பிள்ளையவர்களால்

சீர்திருத்தி

திருக்களர்

தி. மு. சுவாமிநாத உபாத்தியாயரால்

கதைச்சுருக்கம், குறிப்பு முதலியன

எழுதி

திருக்கோட்டூர்க் கோவிற் பஞ்சாயத்து

ஸ்ரீமாந்-K. ஸ்ரீநிவாஸ முதலியாரவர்களால்

சென்னை :

" கார்டியன் அச்சுக்கூடத்தில் "

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச ஹு 1913 வைகாசி மீ

MAHAMAHOPADHYAYA
Dr U.V. SWAMINATHA IYER LIBRAR

PRINTED AT THE GUARDIAN PRESS
MOUNT ROAD, MADRAS

# அட்டவணை


| பக்கம் | விஷயம் | செய்யுட்டொகை |
|---|---|---|
| 3 | தேவாரப்பதிகம் ... ... ... | 11 |
| 5 | திருக்ஷேத்திரக்கோவை ... ... ... | 2 |
| 6 | ஊர்த்தொகை ... ... ... | 1 |
| ,, | திருப்பதிகக்கோவை ... ... ... | 1 |
| ,, | திருப்பதிக்கோவை ... ... ... | 1 |
| ,, | திருத்தொண்டர் புராணம் ... ... ... | 1 |
| 7 | திருக்களர்ப்புராணம் ... ... ... | 5 |
| 8 | திருவிசைப்பாப்பதிகம் ... ... ... | 11 |
| 12 | கடவுள்வாழ்த்து ... ... ... | 13 |
| 15 | வரலாற்றுச்சருக்கம் ... ... ... | 7 |
| 17 | வன்னிவனச்சருக்கம் ... ... ... | 15 |
| 21 | இலிங்கோற்பவச்சருக்கம் ... ... ... | 52 |
| 33 | இந்திரபுரச்சருக்கம் ... ... ... | 36 |
| 41 | ஐராபதேசச்சருக்கம் ... ... ... | 120 |
| 64 | இந்திரசேனச்சருக்கம் ... ... ... | 46 |
| 75 | சாலிகச்சருக்கம் ... ... ... | 39 |
| 83 | சோமசருமச்சருக்கம் ... ... ... | 17 |
| 87 | தீர்த்தச்சருக்கம் ... ... ... | 22 |

# முகவுரை

திருக்கோட்டூரென்பது சோழவள நாட்டிலே, காவிரிநதிக்குத் தெற்கிலே, தேவாரம் பெற்று விளங்காநின்ற சிவஸ்தலங்கள் நூற்றிருபத்தேழனுளொன்று. திருத்துறைப்பூண்டியிலிருந்து வடமேற்கே (சாலை மார்க்கம்) எழேமுக்கால் மைல் தூரம் போனாலும், மன்னார்குடியிலிருந்து தென்கிழக்கே (சாலை மார்க்கம்) ஒன்பதேகால் மைல் தூரஞ் சென்றாலும், திருக்களரிலிருந்து வடக்கே (சாலை மார்க்கம்) மூன்றரை மைல் தூரம் போனாலும் அதனை யடையலாம்.

அத்தலபுராணம் (செய்யுள்) பழைய எட்டுப்பிரதி யொன்று எனக்குக் கிடைத்தது; அதனைக் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் முதல் தமிழ்ப் பண்டிதர் (பின்னத்தூர்) ப்ரஹ்மஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்களிடங் கொடுத்து பெயர்த்தெழுதித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன்; அவர் அங்ஙனமே செய்தார். அதனுள் நூலாசிரியர் பெயர் காலம் முதலியன காணப்படவில்லை; சில செய்யுட்களில் பூர்த்தியின்மை காணப்பட்டன. இவற்றை யெவ்வாறு நிவர்த்திப்பதெனக் கவலைகொண்டிருக்கையில் அவ்வூர்க் கோவிற் பூசகராகிய நடேசக் குருக்களவர்களிடம் (வடமொழி) பிரதி யொன்றிருப்பதாகக் கேள்விப்பட்டு அவரிடம் பன்முறை போய் அதனைக் கொடுத்துதவ வேண்டுமெனக் கேட்டேன். அவர் கொடுத்துதவுவதாகப் பலதரஞ் சொல்லிப் பின்பு சாட்டியக்குடி சுப்பிரமணியக் குருக்களவர்களிடமிருப்பதாகவும், அஃது வராதெனவுஞ் சொல்லிவிட்டார்.

நீடாமங்கலம் சப்ரிஜிஸ்தரார் ஆபீஸ் கிளார்க்கு கோட்டூர், ம-ள-ள-ஸ்ரீ, அப்பாக்குட்டி முதலியாரவர்களிடம் (செய்யுள்) பழைய பிரதி யொன்றிருப்பதாகக் கேள்வியுற்று அவருக்குக் கடிதமெழுதிக் கேட்டேன். அவர் அதனைக் கொடுத்துதவினார். அஃது வெகுதா

ளிய வருஷமெழுதியது. அதனுள் செய்யுட் குறைவின்மையுஞ் சில பாடபேதங்களுங் காணப்பட்டன. நூலாசிரியர் பெயர் காலம் முதலியன காணப்படவில்லை. இதனையும் முற்கூறிய பிரதியையும் கரம்பக்குடியிலிருக்கும் (மருதவனம்) ஸ்ரீமத் ஆ. அ. குமாரசுவாமி பிள்ளை யவர்களிடங் கொடுத்து சீர்திருத்தித் தரும்படி கேட்டுக் கொண்டேன். அவர் அந்தப்படியே செய்தார்.

இப்புராணத்துள் சொல்லப்படும் ஐந்து சிவாலயங்களுள் ஒன்று பிரமன், இந்திரன், அரம்பை, ஐராவதம் இவர்கள் முறையே பூசித்தது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந் தருளிய திருப்பதிகம் பெற்றது. தஞ்சாவூர் சர்க்கிள் தேவ தானங்களு ளொன்றாகியது. சற்றேறக்குறைய நாற்பது வேலி நிலத்தையும், நாற்பதினாயிரம் ரூபாயையும், புதுக்கவேண்டியதற்குரிய (கணக்கற்ற) கருங்கற்களையு முடையது. புதுக்கவேண்டிய தலங்களு ளொன்றும். இதனைப் பரிபாலிப்பவர் (கோட்டூர்) ஸ்ரீமாந் கி. ஸ்ரீநிவாச முதலியாரவர்கள்.

மற்றொன்று ஐராவதத்தின் மணிவிழுந்த தானம். மணியம்பல மென்னும் பெயரையுடையது. ஐராவதங் கைலாசத்திலிருந்து சிவ லிங்கங் கொணர்ந்து தாபித்துப் பூசித்தது. சிவபெருமான் றிருநடன மாடியது. கருவூர்த்தேவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிசைப்பாப் பதிகம் பெற்றது. புதுப்பிக்குந் தலங்களு ளொன்றும். இதனைப் பரிபாலிப்பவர் (கோட்டூர்) ஸ்ரீமத் இரங்கசுவாமி முதலியாரவர்கள்.

இந்திரன், அரம்பை, விசுவகம்மியன் இவர்கள் தங்கள் தங்கள் பெயரால் தனித்தனி பூசித்த ஆலயங்கள் (மூன்றும்) இருந்தவிடந் தெரியாமற் சிதைந்துவிட்டன.

தீர்த்தங்களுள் அகத்தியருண்டுபண்ணிய முனிநதி, இந்திர னுண்டாக்கிய இந்திர தீர்த்தம், ஐராவத முண்டுபண்ணிய சிவகங்கை தீர்த்தம், ஐராவதத்தின் மண்டைவிழுந்த தானமாகிய மண்டைத் தீர்த் தம் இந்நான்கும் நன்னிலைமையி லிருக்கின்றன. பிரமனுண்டாக்கிய பிரமதீர்த்தம், ஐராவதங் கோட்டாற் கல்லியதாலுண்டாகிய சிவ தீர்த்தம், இந்திரன் அமுதகடம் வைத்ததாலுண்டாகிய அமுத

கூபம், விசுவகம்மிய னுண்டாக்கிய விசுவகம்மிய தீர்த்தம், அரம்பை யுண்டுபண்ணிய அரம்பா தீர்த்தம் இவ்வைந்தும் இருக்குமிட மறியக் கூடாத நிலைமையிலிருக்கின்றன.

கற்றோரல்லாருக்கும் பயன்படுமாறு புராணத்தின் முதலில் தேவாரம், திருவிசைப்பா வகையராவையும், ஒவ்வொரு சருக்கத்தி னிறுதியில் கதைச்சுருக்கக் குறிப்புகளையும், இறுதியில் சைவசமயி களுக்கு இன்றியமையாதனவாகிய பசுமகிமை, விபூதிமகிமை, உருத்தி ராக்க மகிமை, பஞ்சாக்கர மகிமைகளையுஞ் சேர்த்துளேன். வட மொழி பிரதியின்மையால் பெரும்பாலும் சொற்குற்றம் பொருட்குற்ற மிருக்கலாம். கற்றுணர்ந்த பேரறிவாளர்கள் அக்குற்றத்தை என்பால் தெரிவித்து மறுபதிப்பில் களைந்துவிடச்செய்வார்களென்பது திண் ணமேயாம்.

முற்புகன்ற அப்பாக்குட்டி முதலியாரவர்களுடைய பேருதவியை யென்றும் மறவேன். இப்புராணம் வெளிவரும் பொருட்டு பொரு ளுதவி புரிந்த முற்கூறிய ஸ்ரீமாந் கி. ஸ்ரீநிவாச முதலியாரவர்களுக்கு: அநேக வந்தனமளிக்கின்றேன்.

திருக்களர்
10-7-1913

இங்ஙனம்
தி. மு. சுவாமிநாத உபாத்தியாயன்.

# திருக்கோட்டூர்

---

**தலத்தின் பெயர்.**—*சமீவனம், வன்னிவனம், வன்னிகானம், பிரமேச்சுரம், பிரமபுரம், இந்திரேச்சுரம், இந்திரபுரம், அரம்பேச்சுரம், அயிராபதேச்சுரம், அயிராபதபுரம், திருக்கோட்டூர், புஷ்பநகர் என்பன.*

**சுவாமி பெயர்.**—*சமீவனேசர், வன்னிவனேசர், பிரமேசுவரர், கொழுந்தீசுவரர், இந்திரேசுவரர், அரம்பேசுவரர், ஐராபதேசுவரர், தருமேசுவரர் என்பன.*

**அம்மன் பெயர்.**—*தேன்மொழியம்மை, மதுரவசனியம்மை, மதுரபாஷிணியம்மை, மதுராம்பிகை, தருமவல்லி, தருமாம்பிகை என்பன.*

**குறிப்பு.**—*இத்தலம் பிரமன், இந்திரன், அரம்பை, அயிராவதம் இவர்கள் முறையே பூசித்தது; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகம் பெற்றது; இதை மேலக்கோயிலென்பர்.*

**மற்றொரு தலத்தின் பெயர்.**—*ஐராபதேச்சுரம், ஐராபதபுரம், நாகநாதேச்சுரம், நாகநாதபுரம், மணியம்பலம், திருக்கீழ்க்கோட்டூர் என்பன.*

**சுவாமி பெயர்.**—*அமுதலிங்கேசுவரர், அமுதேசுவரர், ஐராபதேசுவரர், நாகேசுவரர், நாகநாதேசுவரர், மணியம்பலேசுவரர், மணியம்பலநாதர் என்பன.*

**அம்மன் பெயர்.**—*மதுரவசனாம்பிகை, நாகேசுவரி, மணியம்பலநாயகி, அமுதவல்லி, அமுதேசுவரி, அமுதாம்பிகை என்பன.*

**குறிப்பு**—*இத்தலம் ஐராவதத்தின் மணி விழுந்த விடம்; அயிராவதம் பூசித்தது; சபாநாயகர் திருநடனம் புரிந்தருளியது; கரூர்த்*

தேவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிசைப்பாப் பதிகம் பெற்றது; இதைக் கீழக்கோயிலென்பர்.

**தீர்த்தங்களின் பெயர்.**—முனிநதி, பிரமதீர்த்தம், விசுவகன்ம தீர்த்தம், அமுதகூபம், இந்திர தீர்த்தம், சிவதீர்த்தம், மண்டைத்தீர்த்தம், சிவகங்கை, அரம்பா தீர்த்த மென்பன.

**குறிப்பு.**—சிவகங்கையின் ஈசான மூலையில் பிரமதீர்த்தத்தின் வடபுறம் நீலகண்ட வோமடமென ஒரு தீர்த்தமும், மணியம்பலத்தின் கீழ்ப்பக்கம் மணியம்பல தீர்த்தமென ஒரு தீர்த்தமும், அதன் அக்கினி மூலையில் ஓமகுண்டமென ஒரு தீர்த்தமு மிருக்கின்றன. இவை இன்ன வகையாக வுண்டாயின வென்று புலப்படவில்லை.

இந்திரன், விசுவகன்மன், அரம்பை இம்மூவருந் தனித்தனி தங்கள் தங்கள் பெயரால் பூசித்த இலிங்கங்கள் மூன்றும் ஆலயமின்றி யிருந்தமையால் அப்பாணங்களை யெடுத்து வந்து கொழுந்தீசர் கோவிலுள் வன்னி விருக்ஷத்தினடியில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றோடு மற்றொரு பாணமும், அவ்வன்னியின் மேல்புறம் மண்டபத்தில் ஒரு இலிங்கமும், கோவிலின் வடபுறம் வயல்மத்தியிலுள்ள திட்டில் ஒரு பாணமுமிருக்கின்றன. இம்மூன்றும் எவ்வாறுண்டாயினவோ தெரியவில்லை. இந்த ஆறு பாணங்களையும் ஓரிடத்தில் பிரதிட்டை செய்வது பெரும் புண்ணியமாகும்.

# திருக்கோட்டூர்

## தேவாரம்

---

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரருளியது

பண் நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீலமார்தருகண்டனே நெற்றியோர்கண்ணனே யொற்றைவிடைச்
சூலமார்தருகையனே துன்றுபைம்பொழில்கள்சூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலநீடலமதனிடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே*. (1)

பங்கயம்மலர்ச்சீறடிபஞ்சுறுமெல்விரலரவல்குல்
மங்கைமார்பலர்மயில்குயில்கிளியெனமிழற்றியமொழியார்மென், கொங்
கையார்குழாங்குணலைசெய்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சங்கையொன்றிலராகிச்சங்கரன் † திருவருள்பெறலெளிதாமே. (2)

நம்பனார்நலமலர்கொடுதொழுதெழுமடியவர்தமக்கெல்லாம்
செம்பொனார்தருமெழிறிகழ்முலையவர்செல்வமல்கியநல்ல
கொம்பனார்தொழுதாடியகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
அம்பொனார்தருமுலகினிலமரரோடமர்ந்தினிதிருப்பாரே. (3)

பலவுநீள்பொழிற்றீங்கனிதேன்பலாமாங்கனிபயில்வாய
கலவமஞ்ஞைகணிலவுசொற்கிள்ளைகளன்னஞ்சேர்ந்தழகாய

---

* சாலநீளகலத்திடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காவே என்றும் பாடம். † சங்கையொன்றிலராகி நற்சங்கரன் என்றும் பாடம்; சங்கையொன்றிலராகின்ற சங்கரன் என்று பாடமோதுவாருமுளர்.

குலவுநீள்வயற்கயலுகள்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நிலவுசெல்வத்தராகிநீணிலத்திடைநீடியபுகழாரே. (4)

உருகுவாருள்ளத்தொண்சுடர்தனக்கென்றுமன்பராமடியார்கள்
பருகுமாரமுதெனநின்றுபரிவொடுபத்திசெய்தெத்திசையும்
குருகுவாழ்வயல்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
அருகுசேர்தருவினைகளுமகலும்போயவனருள்பெறலாமே. (5)

துன்றுவார்சடைத்தூமதிமத்தமுந்துன்னெருக்கார்வன்னி
பொன்றிணர்தலைக்கலனொடு‡பரிகலம்புலியுரியுடையாடை [வாரை
கொன்றைபொன்னெனமலர்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழு
என்றுமேத்துவார்க்கிடரிலைகேடிலையேதம்வந்தடையாவே. (6)

மாடமாளிகைகோபுரங்கூடங்கண்மணியரங்கணிசாலை
பாடுசூழ்மதிற்பைம்பொன்செய்மண்டபம்பரிசொடுபயில்வாய
கூடுபூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள
கேடதொன்றிலராகிநல்லுலகினிற்கெழுவுவர்புகழாலே. (7)

ஒளிகொள்வாளெயிற்றரக்கனவ்வுயர்வரையெடுத்தலுமுமையஞ்சிச்
சுளியவூன்றலுஞ்சோர்ந்திடவாளொடுநாளவர்க்கருள்செய்த [கள்
குளிர்கொள்பூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தினைத்தொழுவார்
தளிர்கொடாமரைப்பாதங்களருள்பெறுந்தவமுடையவர்தாமே. (8)

பாடியாடுமெய்ப்பத்தர்கட்கருள்செயுமுத்தினைப்பவளத்தைத்
தேடியாலயன்காணவொண்ணாதவத்திருவினைத்தெரிவைமார்
கூடியாடவர்கைதொழுகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நீடுசெல்வத்தராகியிவ்வுலகினினிகழ்தருபுகழாரே. (9)

[திரளைப்
கோணல்வெண்பிறைச்சடையனைக்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழுந்
பூணல்செய்தடிபோற்றுமின்பொய்யிலாமெய்யனல்லருளென்றும்
காணலொன்றிலாக்காரமண்டேரர்குண்டாக்கர்சொற்கருதாதே
பேணல்செய்தரனைத்தொழுமடியவர்பெருமையைப்பெறுவாரே. (10)

---

‡ தலைகலனொடு என்றும் பாடம்.

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாரும்
கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழும்பவளம்
வந்துலாவியகாழியுண் ஞானசம்பந்தன்வாய்ந்துரைசெய்த
சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர் தாங்குவர்புகழாலே,

திருச்சிற்றம்பலம்

---

## திருஞான சம்பந்த மூர்த்திநாயனார்

## திருக்ஷேத்திரக் கோவை

### பண் இந்தளம்

மாட்டூர்மடப் பாச்சி லாச்சிராம
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டுங்
கடலொற்றியூர் மற்றுறையூ ரவையுங்
கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமுங்
கொடுங் கோவலூர் திருக்குணவாயில்

## திருநாவுக்கரசு நாயனார்

## திருக்ஷேத்திரக்கோவை

### திருத்தாண்டகம்

ஆரூர் மூலட்டான மானைக்காவ
மாக்கூரிற் றான்றோன்றி மாடமாவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கை வீரட்டானமுங்
கோட்டூர் குடமூக்குக் கோழம்பமுங்
காரார் கழுக்குன்றுங் கானப்பேருங்
கயிலாய நாதனையே காணலாமே.

## திருக்கோட்டூர் புராணம்

### சுந்தரமூர்த்திநாயனார்

### ஊர்த்தொகை

**பண்-பழம்பஞ்சுரம்**

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூ ரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப பாடப் பணியாயே.

## திருப்பதிகக்கோவை

கடைமுடியே யோணகாந் தன்றளிகோட் டூர்வை கன்மாடக் கோயிலிடை யாறுபழை யாறை, வடதளிநற் றினைநகரங் கோணமா மலைசீர் வன்னியூர் கருவிலிய மேனகதவகா வதநல், விடமேவு கடிக்குளநற் றிருக்களரென்றி வைகட் கிரும்பதிக மொவ்வொன்றென் றிசைத் திடுக விப்பாற், குடவாயில் புனவாயி றூங்கானை மாடங் கோழம்ப மவ ளிவணல் லூர்கோலக் காவே

## திருப்பதிக்கோவை

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்டுறைமேயா டழகே தருகொள் ளம் பூதூர்மேப ரெயில்கொள்ளிக் காடு, கண்டருதெங் கூர்நெல்லிக்கா காட்டியத்தான் குடியே காறுயில கன்றுப்பூர் வலிவலங்கச் சினத்தோ, டண்டர்பிரான் கோளிலிதென் றிருவாய்மூர் மறைக்கா டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந்தென் சுரையி, லெண்டருநூற் றிருபத்தே ழிப்பாலீழத்தி லிசைகோண மாமலைகே தீச்சரமென் றிரண்டே.

## திருத்தொண்டர் புராணம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து
நலங்கொடிருக் காறுயி னண்ணி யேத்திப்

## திருக்கோட்டூர் புராணம்

பைம்புனன்மென் பணைத்தேவூ ரணைந்து போற்றிப்
பரமர்திரு நெல்லிக்காப் பணிந்து பாடி
யம்பர்பிரான் கைச்சினமும் பரவித் தெங்கூ
ரோங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும் போற்றிச்
செம்பொன்மதிற் கோட்டூரும் வணங்கி யேத்தித்
திருமலிவெண் டுறைதொழுவான் சென்று சேர்ந்தார்.

## திருக்களர்ப் புராணம்

பொன்னிலங் காவல் பூண்ட புரந்தரன் முதலா மற்றை
வின்மணி மவுலி வானோ ரனைவரும் வியாத னாதி
நன்முனி வரரு மேனோ ரற்றந வனத்தி னண்ணி
நன்மலன் றிருத்தாள் போற்றி நித்தலும் பணிந்து பின்னர்.

### வேறு

மண்டி வான்றட வும்பணைக் கற்பக வனநன்
கெண்டி சைக்கட்கு சோசமைந் துட்பட விலகும்
பண்ட நீகம புரமயி ராபத புர * மட்
டண்டர் மாதவர் யாவரு மேவின ரதன்பால்.
அங்கண் மேவியே யரன்றிரு வாலய மணைந்த
மங்கு லெய்திய மயன்புனைந் தாலென வகுத்துச்
செங்கண் மாலயன் றேடருஞ் சிவன்றிரு விலிங்கந்
தங்க ளமைத்தா லியற்றினர் தனித்தனி தவத்தோர்.
அவ்வி லிங்கங்க ளனைத்தையு மாலயந் தோறுஞ்
சைவ நூன்முறை பதிட்டைசெய் தவரவர் தகவாற்
சைவ்வி நாண்மலர் தூய்த்தொழு தாங்கவர் தீய
வெவ்வி னைப்பவம் வீட்டினர் வீடுபெற் றுய்ந்தார்.

---

அயிராபதபுரம் - திருக்கோட்டூர்.

## வேறு

முனிநதிக் கரையி லெய்தியந் நதியின் முறைமையான் மூழ்கி யாங் கியைந்த, பனிமதிச் சடையோன் மகிழயிராப தேச்சுர † நகரினைப் பரவித், தனிமுதற் பரனோ டுமையையும் விதியாற் றக்கபூ சனைபுரிந் தரசன் ‡, மனமுறத் தொழுது பாரிசாதவன மாநகர் மருவினன் வணங்கி.

---

# திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்

---

## திருவிசைப்பா

## கருவூர்த்தேவரருளியது

### பண் பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தளரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச்
சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்
திருமுக மலர்ந்துசொட் டட்டச்
கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனங்கலந் தானே. (1)

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்புஞ்
சுழியமுஞ் சூலமு நீல

---

† அயிராபதேச்சுரம்—திருக்கோட்டூர்.

‡ அரசன் - மஹாரத பாண்டியன்.

கண்டமுங் குழையும் பவளவா யிதழுங்
கண்ணுதற் றிலகமுங் காட்டிக்
கெண்டையுங் கயலு முகளுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனங்கலந் தானே.

திருநுதல் விழியும் பவளவா யிதழுந்
திலகமு முடையவன் சடைமேற்
புரிதரு மலரின் றாதுநின் றூதப்
போய்வருந் தும்பிகா ளிங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறன் மணியம் பலவனைக் கண்டென்
மனத்தையுங் கொண்டுபோ துமினே. (3)

தெள்ளுநீ றவனீ றென்னுடல் விரும்புஞ்
செவியவ னறிவுநூல் கேட்கு
மெள்ளவே யவன்பேர் விளம்புமாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்குங்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியும் பலத்துணின் றாடு
மைந்தனே யென்னுமென் மனனே. (4)

தோழியாஞ் செய்த தொழிலெனப் பெருமான்
றுணைமலர்ச் சேவடி காண்பா
னூழிதோ றூழி யுணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்குங்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்

வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவு மாலொழி யோமே. (5)

என்செய்கோந் தோழி தோழிநீ துணையா
யிரவுபோம் பகல்வரு மாகி
லஞ்சலோ வென்ற ஞெழியுந் திரையு
மலமரு மாறுகண் டயர்வன்
கிஞ்சுக மணிவா யரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவவோ வென்று
மயங்குவன் மாலையம் பொழுதே. (6)

தழைதவழ் மொழுப்புந் தவளநீற் றொளியுஞ்
சங்கமுஞ் சகடையின் முழக்குங்
குழைதவழ் செவியுங் குளிர்சடைத் தெண்டுங்
குண்டையுங் குழாங்கொடு தோன்றுங்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துணின் றாடு
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. (7)

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகந் திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைகோங் கிதழி
யிளம்பிறை குழைவள ரிளமான்
கின்னர முழவ மழலையாழ் வீணை
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனத்துள்வைத் தனனே. (8)

யாதுநீ நினைவ தெவரையா முடைய
தெவர்களும் யாவையுந் தானாய்ப்

பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பணிமலர்க் கண்ணுணின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனம்புகுந் தானே. (9)

அந்திபோ லுருவு மந்தியிற் பிறைசே
ரழகிய சடையும்வெண் ணீறுஞ்
சிந்தையா னினையிற் சிந்தையுங் காணேன்
செய்வதென் றெரிபுன லலங்கற்
கொந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீகங்
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாண் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனை யறியுமென் மனமே. (10)

கித்திநின் றாடு மரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனை யாரணம் பிதற்றும்
பித்தனென் மொழிந்த மணிசெய்மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே யுலகமோத் துவரேன்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. (11)

திருச்சிற்றம்பலம்.

---

குறிப்பு—மேலக்கோவில் தெற்கு வீதி கீழ்க்கடைசியிலிருந்து மண்டைத் தீர்த்தத்தின் தென்கரையோடு கிழக்கே சென்று மேற்படி தீர்த்தத்தின் கீழ்க்கரையோடு வடக்கே போய்க் கிழக்கே திரும்பினால் கீழக்கோவிலை யடையலாம்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருக்கோட்டூர்ப் புராணம்

---

## கடவுள் வாழ்த்து

### விநாயகர் †

கார்மேவு மதில்புடைசூழ் கோட்டூர்வாழ் கொழுந்தீசர் கதையைச் சூத, னோர்மேவு வடமொழியான் மொழிந்தபடி தமிழ்மொழியா லிசைக் கத் தெய்வப், பார்மேவு திருக்கோட்டு மணிக்கோட்டுப் பொற்றோட் டிற் பிணைமே லெழுவர், போர்மேவு கதையெழுது புங்கவன்பங் கயத் திருத்தாள் போற்றல் செய்வாம். (1)

### கொழுந்தீசர்

முருந்தனைய நகைக்கொடிபங் ககலாத கொழுந்தைமது முளரிப் பூமே, லிருந்தவனு மாயவனு முணராத சுடர்க்கொழுந்தை யெளியே னுள்ளம், பொருந்துமுது மறைக்கொழுந்தைப் •பிறைக்கொழுந்தைப்

---

† இவ்விநாயகர் - ஆதியில் பிரமன் மணலினால் சிவலிங்கத் திருவுருவம் அமைத்துப் பூசிக்க ஆரம்பித்த காலத்தில், அப்பூசைக்கு விக்கினம் வராதிருக்கும் பொருட்டு, முதன் முதல் பூசித்த தலவிநாயகர். இவரைச் சபாநாயகருக் கெதிரில் (தெற்கு மதிலில்) மாடத்துள் வடக்கு முகமாக வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விநாயகரை முதலில் பூசை செய்து அதன்பின் சிவலிங்கப் பெருமான் முதலிய மூர்த்திகளைப் பூசை செய்தல் வேண்டும்

புனைகொழுந்தைப் பூகப் பாளை, செருந்தியுடன் கமழ்கோட்டூர்த் தெய் வீகத் தனிக்கொழுந்தைச் சிந்தை செய்வாம். (2)

## தேன்மொழியம்மை

நலந்திகழ வருந்தரள நகையணங்கை நீலநிகர் நயனத் தாயை, வலந்தமறை நிறைதுவர்வாய் பதுமுறா கங்கொடுக்கும் வதன மாதைப், பொலஞ்சிலையா லடல்கடந்து மாணிக்க வொளிபரப்பும் புருடராகங், கலந்தமரகதமேனிப் பவளவாய்த் தேன்மொழியைக் கருத்துள் வைப் பாம். (3)

## ஐராபதவிநாயகர்

பரவுபல ஞிமிறுஞிமி றியகடமும் பாலாழி பருங மீளச், சுரர் புகல விடுத்தபெருந் துதிக்கையுமிழ் விலாழியுஞ்செசந் துகிரற சோதி, விரவுமொரு பொருப்பிடத்து யமுனையெனும் பெருநதியும் விமல நன்னீர், வரநதியுந் தவழ்ந்தனபோ லுயராயிரா பதக்களிற்றை வணக் கஞ் செய்வாம். (4)

## குமாரக்கடவுள்

புரநாகம் புனைந்தானைப் பொன்னுகத் தடனுகம் பூட்டி னானைத், திரனுக நெறியறிவித் துரைத்தானை நிரைத்தானை செறியச் சேர்ந்த, வரநாக முகந்தானைக் கருத்தானைத் தழைத்தானை வல்லி வாழ்வைக், கரனுகங் கவர்ந்தபிரான் மருகனைமா முருகனைநங் கருத்துள் வைப் பாம். (5)

## திருநந்திதேவர்

செருநந்தி முதலாய விபுதரைவா யிலினிறுவிச் செயல்கூர் தொண்டர்
கருநந்தி யரியபவங் கடக்கும்வகை திருச்சரணங் காண வீறு
மொருநந்தி யுடனூரு முயர்நந்தி யருள்காட்டி யுவப்பச் செய்ய
வருநந்தி பதப்போது மறவாம லெப்போதும் வணக்கஞ் செய்வாம் (6)

## இலக்குமி சரசுவதி

பொருந்தவளந் தருகமலப் பூவைதமிழ்ப் பாவைவரப் புணர்க்கும் பாவை, யருந்தவள வனப்பமைந்த வாரணங்கா ரணங்களெலா மமைத்

தோ ணுவி, விருந்தவளம் புவிமுழுதும் படைத்தாள்பொற் றிருத்தாளு மிகன்மேற் றெவ்வர், வருந்தவளந் தவன்மருமத் திருந்தாள்பொற் றிருத்தாளு மனத்துள் வைப்பாம். (7)

## ஆளுடைய பிள்ளையார்

பண்ணுதமிழ்த் திருப்புகலி யுதித்துமனந் திருப்புகலிப் பரிசு மாற்றி, மன்னுபல மடற்பெண்ணை யதன்பெண்ணை யுற்றுருவா வயக்கிக் கூட, லென்னுநகர் வருவணிகன் றன்னுகத் தந்நாகத் திக ணோய் தீர்த்துத், தென்னன்முது கூன்படைத்த முதுகூனீக் கியசுத னைச் சிந்தை செய்வாம். (8)

## ஆளுடைய வரசு

உருளாழி யொன்றுடைத்தே ரிரவியொரு கோடியொப்பா யொளி ரத் தெவ்வர், மருளாழி யரிக்களித்த வள்ளறரும் படிக்காசு வரப் பெற்றானை, யருளாழி நிலவாழி யிசைத்தொண்டா னிறைத்தானை யம்பி கல்லாக், கருளாழி கடந்தானைப் பொருளாழித் தமிழ்க்கரசைக் கருத்துள் வைப்பாம். (9)

## ஆளுடைய நம்பி

விஞ்சவருங் காவணத்திற் காவணங்கொண் டணைந்தானை விருப் புற் றானைச், செஞ்சொலுறு மறைத்தம்பிரான் முதலவாய் மதலைதரச் செப்பி னானை, யஞ்சநிறை நதியிலிடும் பொருள்பாரு ரூர்த்தடத்தி லழைப்பித் தானை, மஞ்சரிமே வியசடிலன் றனைத்தூது கொண்டானை வணக்கஞ் செய்வாம். (10)

## ஆளுடைய வடிகள்

இருகோவை நிகர்வழுதிக் கெனவரசு புரிந்துலக மேழு மேழுந், தருகோவை நறைத்துவர்வா யன்னைமறைப் பேரருளாந் தையல் பாகத், தொருகோவை யுயர்கோவை யடையசுர ரறியாத வொளியைப் போற்ற, வருகோவை மொழிந்துபெருங் கொடியபவ மொழித்தானை வணக்கஞ் செய்வாம். (11)

## வாழ்த்து

வந்தனை யடியார் மல்க வையக முழுதும் வாழ்க
சந்தத முமையாள் பாகன் சமீவனப் புராண மோங்க
செந்தமிழ் விளங்க நாளுந் திங்கண்மும் மாரி பெய்க
வந்தமில் கருமம் வெல்க வஞ்செழுத் திலங்க வன்றே. (12)

## அவையடக்கம்

பூமகன் புரிந்து நின்ற பூசையே முதலாந் தெய்வ
மாமறை புகழ்ந்த வன்னி வனத்திருக் கதையைச் சூத
ஞமவ னறிந்து கூற மவையினை யெனயான் கூற
ரூமனை நாள நூலாற் றந்தியைப் பிணித்தல் போலாம். (13)

திருச்சிற்றம்பலம்

---

# முதலாவது

## வரலாற்றுச்சருக்கம்

திருச்சிற்றம்பலம்

மன்னிய பரம ஞானம் வருவித்து மறைக்கு மெட்டா
நன்னெறி பயக்குந் தூய நைமிச வனத்திற் கூடி
முன்னிய சூத ஞானி முனிவர்க ளெவரும் வைகிய
பன்னிய தரும காதை பகர்ந்தினி திருந்த வேலை (1)

பொன்னியின் பெருமை கூறிப் பூந்துருத் தியின்க ணின்றே
யந்நதி பிரித்துக் கோடிக் ககத்தியன் கொணர்ந்தா னென்று
முன்னுமந் நதியின் பேர்தான் முனிநதி யான தென்று
மன்னுமந் நதியின் மூழ்கின் வரமெலா முதவு மென்றும் (2)

இருகரை களிலு மெங்கோ னிமயமா துடனே நாளு
மருவிய தலமுண் டென்று மற்றதன் பெயரைக் கூறிற்

பருவா லகற்றுந் தெய்வப் பசுபதீச் சரம தென்றுந்
தருவளர் சோலை சூழ்ந்த சத்தமங் கலம தென்றும் (3)

## வேறு

இந்தி ரேச்சுரங் கௌதமேச் சுரமுல கேத்த
வந்த பார்க்கவா ரணியமே காசிகா வனமே
விந்த வில்வவா ரணியமே வேத்திரா ரணிய
முந்து வாய்மைகூர் திருவிரா மேச்சுர முதலாம் (4)

தூய கன்னிகா சுரமுடன் றிருவெண்டு துறையே
நேய மாமயி லேசுரஞ் சமீவன நீடுஞ்
சேய சில்லிகா வனந்திரு மறைவன மளவும்
போய தென்றுமப் புண்ணிய கதையெலாம் புகன்றாய். (5)

இத்த லங்களிற் சமீவனம் விசிட்டமா மென்று
மத்த லந்தனை நினைக்கிலு முரைக்கிலு மவர்க்கு
மெத்து பாவங்க டீர்ந்திடும் பாக்கியம் விளைக்கு
மொத்த வான்சிவ லோகமுங் கொடுக்குமென் றுரைத்தாய். (6)

அன்ன தாகிய தலத்தினற் பெருமையா மறிய
வின்ன மும்விரித் துள்ளவா றனைத்தையு மெமக்குப்
பன்னு வாயெனச் சவுனக னன்பொடு பரவிச்
சொன்ன காலையிற் சூதனச் சரிதையே சொல்வான். (7)

முன்னொரு காலத்திலே, நைமிசாரணியத்திலே, சூதாதி முனிவர்கள் ஒன்றுகூடி பலவகைப்பட்ட தரும காதைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் சௌனக முனிவரெழுந்து சூதமுனிவரை வணங்கி ஹே முனிபுங்கவ ! வளங்குன்றாத சோழநாட்டிலே, திருப்பூந்துருத்தியினின்று தென்கோடிவரையில், காவிரிநதிக் கிளையாகப் பிரித்து ஓர் நதி அகத்தியமுனிவருண்டாக்கினாரென்றும், அந்நதிக்கு அகத்தியநதி, முனிநதி,முனியாறு† எனப் பெயர் வழங்குகின்றன வென்றும்; அந்நதியில் மூழ்குவோர் விரும்பியவற்றை யடைவார்களென்றும் ; அந்நதியி

† முனியாறு-முள்ளியாறு என வழங்குகின்றது.

னிருகரைகளிலும் பசுபதீச்சரம், சத்தமங்கலம், இந்திரேச்சரம், கௌதமேச்சரம், பார்க்கவாரணியம், காசிகாவனம், வில்வாரணியம், வேத்திராரணியம், திருவிராமேச்சரம், கன்னிகாசுரம், திருவெண்டுறை, அமரேசுரம், சமீவனம், கில்விகாவனம், வேதாரணியம் முதலிய தலங்களுண்டென்றும்; அவற்றுள் சமீவனத்தலம் விசேடம் பொருந்தியதென்றும்; அத்தலத்தை நினைத்தாலும், சொன்னாலும் சர்வ பாவங்களுந் நீங்கி எல்லாவிதப் பேறுகளு முண்டாகுமென்றுஞ் சொன்னீர்கள். அத்தலத்தின் பெருமைகளனைத்தையும் உள்ளவாறு விரித்து இன்னமுஞ் சொல்லியருள வேண்டுமென்றார். சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களை நோக்கிச் சொல்கின்றார்.

திருச்சிற்றம்பலம்.

---

# இரண்டாவது

## வன்னிவனச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

கமல றெறிபாய் வீதிகளுந் தானகற் பத்தி
னமரர் தானவ ரனைவரு மரியருட் படியே
விமல வாரிதி வாசுகி வெற்பிடைப் பூட்டி
தமது மொய்ம்புடன் கடைந்தனர் மிடைந்தன தரங்கம். (1)

வளமை கூர்சுதை வரப்பதி னாயிர வருடத்
தளவை வாரிதி கடைதலு மரவர சனல்வா
யிளகி வெவ்விட முமிழ்தலும் புகலிட மின்றித்
துளவ மாலுடன் விண்ணவர் பரமனைத் துதித்தார் (2)

அஞ்ச லஞ்சலென் றவரவர்க் கபயமே யருளி
யெஞ்ச வந்தவல் விடத்தினை யருந்தின னிறைவனை
விஞ்சு மன்பொடு பின்னருங் கடைந்தனர் வேலை
தஞ்ச மென்பன வித்தெலாம் பிறந்தன தரைமேல். (3)

தவள வாரணம் பாய்பரி கற்பகத் தாருத்
துவளு நுண்ணிடை யரம்பையர் நிரம்புமான் சுரபி
பவள மாநிறத் துவரிதழ்க் கமலமென் பாவை
இவளம் யாவையும் வந்தன சிந்துவி னிடத்தில். (4)

மேய வண்சுதை பிறந்தது மகிழ்ந்துபின் வெவ்வே
றுய கும்பத்தி னெடுத்தலுந் ததும்பியங் கங்கே
தூய தாந்தலத் தாயிரத் தெண்டுளி துளிப்ப
நேய மாகிய தருக்களாய் மருக்கொள நிறைந்த. (5)

மருது நெல்லிமாப் பாதிரி புன்னைமா வருக்கை
யரசு சண்பகங் கருங்காலி வில்லுவ மமையே
விரவு மால்கமு கெனும்பல தருக்களாய் மேவிப்
பருகு வண்டிமிர் நறைமலர் கனியொடும் படைத்த. (6)

இத்த லத்தினும் வன்னியொன் றமுதத்தி னெழுந்து
மெத்து யோசனை யுயரமும் பாதியாம் விரிவு
மொத்த நீழலும் படைத்ததாங் கதனிடத் துண்டாம்
வித்தி னாற்சமீ வனமது நிறைந்தது மேன்மேல். (7)

இந்த வன்னியி னீழலிற் றபோதன ரெவரும்
வந்து தந்தம தருந்தவ முடித்துள மகிழ்ந்தார்
முந்து யோகத்தா லட்டமா சித்தியு முடித்தே
யந்த மாகிய சித்தர்வந் துறைந்தன ரனேகர். (8)

அடரும் வெம்புலி மானினத் தொடும்விளை யாடுங்
கொடிய சிங்கமும் யானையு மோருழைக் கூடும்
நெடிய கின்னர ரியக்கர்கந் தருவரெந் நிலத்தும்
படரும் வானவ ரரம்பைய ருறைபவர் பலரால். (9)

ஆகை யாலிந்தச் சமீவனம் பாவங்க ளனைத்தும்
போக வீறுமெய்ஞ் ஞானமே கொடுக்குமெப் பொழுது
மேக மாய்மன மாநந்த வெள்ளத்து ளிருத்து
மோக மாகிய மும்மலத் துரிசெலா முரிக்கும். (10)

உவமை யொப்பிலச் சமீவனத் தொருகணை முன்றந்தா
லவனி மேற்பல தலங்களி லாயிர வருட
நவம தாந்தவம் புரிந்தபுண் ணியங்களை நல்கும்
பவமெ லாந்துடைத் திருத்துமன் புடன்சிவன் பதியில். (11)

மந்தி ரத்தினை மகிழ்ந்தொரு காலிந்த வன்னி
தந்த | நீழலி லிருந்தனர் செபிப்பரேற் றவமே
யுந்து நல்லுருக் கோடிதாஞ் செபித்ததை யொக்கு
மெந்தை நற்கரு மங்களுங் கோடிவந் தெய்தும். (12)

புண்ட ரீகனப் புரத்திடைப் பூசனை புரிந்து
மண்டு மன்புடன் சிவத்துரோ கங்களு மாற்றி
விண்டு போயதன் விசிட்டிபெற் றகன்றனன் மேரு
ருண்டவ் வோர்தலன் பெருமைகண் டுரைப்பது மரிதால். (13)

என்று கூறினன் சூதமா முனியரு கெங்குந்
துன்று மாதவ ரனைவருஞ் சடைமுடி துளங்கி
நன்று நன்றிந்த மான்மிய முரைத்தது நாங்க
ளொன்று வேண்டுவ தின்னமு முளதென வுரைத்தார். (14)

முளரி நாயகன் வந்ததும் பூசனை முடித்தே
யளவி னல்வர மமைந்ததும் விரித்தெமக் கருளா
லுளம கிழ்ந்திட வுரையென ‡ முனிவ ருரைப்பப்
புளக மாய்விழி புனறாச் சூதனும் புகல்வான். (15)

தானகற்பத்திலே, விஷ்ணுவின் அருட்படி பிரமேந்திராதி தேவர்களும் இராக்கதர்களும் ஒன்றுசேர்ந்து, மந்தரகிரியை மத்தாக நாட்டி, வாசுகியைத் தாம்பாகப் பூட்டி, அமுதமெழும்படி திருப்பாற்கடலைப் பதினாயிர வருடம் கடைந்தார்கள். இங்ஙனங் கடையுங்காலத்திலே, வாசுகி சகிக்காது விஷத்தை யுமிழ்ந்தனன். அரிப்பிரம்மாதியர்கள் அவ்விஷாக்கினிக்குப் பயந்து பரமபதியைத் துதித்தார்கள். பரமபதி

| நீழலிலிருந்தினி என்றும் பாடம்.

‡ சவுனகருரைப்பப் என்றும் பாடம்.

அஞ்சேல் அஞ்சேல் என அபயமீந்து அக்கொடிய விஷத்தை யுண்டு கண்டத்தில் நிறுத்தியருளினர். பின்னர் வானவர்களும் தானவர்களும் கடலைக் கடைந்தார்கள். அக்கடலினின்று வித்துக்கள், மூதேவி, இலக்குமி, தன்வந்திரி, (அறுபதுகோடி) அரம்பாஸ்திரீகள் (வெள்ளைக் குதிரையாகிய) சுவேதாசுவம், (பதுமராகமாகிய) கௌஸ்துவமணி, (சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பனவாகிய) விருக்ஷங்கள், காமதேனு, சிந்தாமணி, சந்திரன், (வெள்ளையானையாகிய) ஐராவதம், (சங்குவடிவாகிய) சங்கநிதி, (தாமரைப்பூவுருவாகிய) பதுமநிதி, இந்திராணி, (கபிலநிறமுடைய நந்தை, கருநிறமுடைய பத்திரை, வெண்ணிறமுடைய சுரபி, புகைநிறமுடைய சுசீலை, செந்நிறமுடைய சுமனை என்பனவாகிய) பசுக்கள் முதலியன பிறந்தன. அதன்பின் அமுதமுதித்தது. அவ்வமுதத்தைப் பல குடங்களில் நிறைத்தார்கள். அப்போதவ்வமுதந் ததும்பி ஆயிரத் தெட்டு துளிகளாய்ப் பல தலங்களில் விழுந்து மருது, நெல்லி, பாதிரி, புன்னை, மா, பலா, அரசு, சண்பகம், கருங்காலி, வில்வம், ஆல், கமுகு முதலிய பல தருக்களாய் முளைத்து மணம் பொருந்திய மலர்களோடு செழித்தோங்கின. இத்தலத்தில் விழுந்த அமுதத்துளி ஒரு யோசனை யுயரமும் அரையோசனை யகலமு முடைய வன்னி விருக்ஷமாயிற்று. அதிலிருந்துண்டாய வித்துக்கள் நாலுபக்கங்களிலும் விழுந்து அநேக விருக்ஷங்களானமையான் சமீவனமெனப் பெயராயிற்று. இவ்வனத்தில் பல முனிவர்கள் தவமுடித்துக் களித்தார்கள். அநேகஞ் சித்தர்கள் (அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும்) அஷ்டமா சித்திகளையு மடைந்தார்கள்; பல் கோடி சித்தர், கின்னரர், இயக்கர், கந்தருவர், வானவர், அரம்பையர் முதலிய யாவரும் வசிப்பர்; மான், புலி, சிங்கம், யானை முதலிய மிருகங்கள் பகையின்றி வசிக்கும்; பாவங்களெல்லாம் போம், ஞானமுண்டாம்; ஒரு விநாடி நேரம் இதில் தங்கினவர் மற்றைய தலங்களில் ஆயிர வருடந் தங்கிய பலனை யடைவர்; வன்னியி னடியிலிருந்து ஒருரு பஞ்சாக்கரஞ் செபித்தவர் கோடியுருச் செபித்த பலனை யடைவர்

வன்னி விருக்ஷத்தினடியில் பிரமன் பூசித்து வரம்பெற்ற தலமொன் றுளது, அஃது என்றுஞ்சொல்லத்தக்க தன்றென்றார். சவுனக முனி வரெழுந்து சூதமுனிவரை வணங்கி வன்னிவன மான்மியங் கேட்டுப் புனிதமடைந்தோம்; பிரமன் பூசித்து வரம்பெற்ற காதையைச் சொல்லி யருள வேண்டுமெனத் துதித்தனர். சூதமுனிவர் சவுனகாதி மக ருஷிகளை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

திருச்சிற்றம்பலம்

---

# மூன்றாவது
## இலிங்கோற்பவச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

முன்னமோர் காலத் திராசத குணத்தான் முண்டகன் றன்னையே மதித்து, மன்னிய கயிலை வள்ளலை மதியான் வானவ ரெவரினு நாமே நன்னிலை யுலகஞ் சிருட்டிசெய் தமைத்தோ மாதலா னொருவனு மில்லை, தன்னிக ரில்லாப் பரமனைப் போலத் தலையுடைந் நிண்மடனத் தருக்கி. (1)

பண்ணவர் யாரு மருவினு நோக்கான் பகரினு மறுத்துரை பக ரான், நண்ணருங் கமலன் பெருமிதம் வீணைத் தவமுனி நாரதனோக் கிக், கண்ணுதன் முன்னங் கயிலைபுக் கிறைஞ்சிக் கமலன்மெய் பாட்டினை யுரைக்க, வண்ணனும் வெகுண்டு காரிகை யேவி யவன்றலை யைந்தி லொன் றறுத்தான். (2)

அவனதுங் காரத் தழிந்தது மேம்பா டாகையாற் கமலனும் வெருவிச், சிவனுழிச் செய்த துரோகநா னீக்கத் திருவுள மென் கொலோ வென்ன, வெவரினு முயர்ந்த விமலனே வலினு லெழுந்ததா கீரயமேல் வாணி, புவனியிற் புகுந்தோர் தலத்துழிச் சிவனைப் பூசனை செயச்செலுந் துரோகம். (3)

என்னவே மொழிந்த தம்புயன் கேட்ப விருசெவி மனமுடன் குளிர்ந்து, கன்னிபா கனையே யருச்சனை புரியக் கடவதென் றாணங்

குடனே, யன்னமீ தேறிப் பாரத வருடத் தானுறை தலமெலாம் பணிந்து, பொன்னியின் மூழ்கிப் பூந்துருத் தியின்கட் போந்தனர் காந் தையுந் தானும். (4)

அத்தலத் திருந்த காசிப னெதிர்வந் தன்னையைத் தந்தையைப் பணிந்து, பத்திசெய் திருத்தி நீரிவட் போதும் பாண்மையா னோர்ந்த தன் கருணை, யுத்தமர் முனிவு நன்மையே பயக்கு முண்மையைங் கரும் பினை வாங்கி, முத்துக நருக்கிச் சாறுகொண் டனன்மேன் மூட்டினுஞ் சுவைகொடுப் பதுபோல். (5)

எனவுரைத் தனேகந் † தலங்களுண் டவற்று ளீசனைப் பூசனை புரியக், கனவிலே நினைக்க வேண்டிய தளிக்குங் கமலைக்கு நிருதிமூ லையின்கண், மனமகி ழெல்லை யோசனை குறிய வரமுனி நதிக்குமோர் கீழ்பா, லனதுறை வன்னி வனமென வொன்றுண் டதன்புக ழாரறிந் துரைப்பார். (6)

இதனையே நிகராந் தலங்கள்வே றில்லை யித்தலத் தருச்சனை புரிந்தான், மதலையஞ் சடையோன் வந்துநீர் வேண்டும் வரமெலாங் கொடுப்பனென் றுரைப்பச், சதவிதழ்க் கமலன் மகிழ்ந்துமா துடனே தானுமத் தலத்தினி லெய்திப், புதுமலர் வன்னி வனமெலா நோக்கிப் புளகமு மன்புமீ தூர. (7)

நன்னிழல் பரப்பும் வன்னியை யடைந்து ஞானவா னந்தமே யாகி, யிந்நில நிகரா யிந்தலோ கத்தி லெந்தலோ கத்தினு மில்லை, மன்னிய தருமம் பலமுடித் ததனால் வந்தடைந் தனமென மகிழ்ந்து, பன்னக மவுலிப் பரமனைப் பூசை பரிவுறவைத் தியற்றுதற் கிசைந் தான். (8)

## வேறு

தனதுகைத் தலத்தால் வேதன் றடமொன்று தொட்டு வேத
மனுவினாற் சுத்தி செய்து மன்னுமூ வுலகத் துள்ளே

† தலங்களுண்டதனுள் என்றும் பாடம்.

வினவிய தீர்த்த மெல்லாம் வீறுமத் தடத்து வைக
வனுமதஞ் செய்து பின்ன ராடினா னதனிற் றீர்த்தம். (9)

ஆரமே கலந்த வாவி யதனிடை மணலை யேந்திப்
பாரமா மிலிங்க மொன்று பச்சிம முகமாய்ச் செய்து
சேரவே விதியாற் பூசை செலுத்திச்சந் தனங்கற் பூரங்
காரகில் புழுகே யாதி கமழவே முழுதுஞ் சாத்தி (10)

அஞ்செழுத் தோதிக் கண்ணீ ரருவிசெய் நனைப்பச் சோதி
நெஞ்சினி லழுத்தி வைக நிருமலன் மகிழ்ந்தி லிங்கம்
விஞ்சுபா தலங்க ளெங்கும் வெற்பெனக் கலந்து மீதே
வஞ்சமி லொளியே வீசு மரகத மணிபோ லாக. (11)

அருளிவர்ந் தயனை நோக்கி யருச்சனை மகிழ்ந்தோ நீயே
மருளினாற் றுரோகஞ் செய்த வஞ்சமும் பொறுத்தோ நாளுந்
தெருளினா லமைக்குந் தெய்வச் சிருட்டியுங் கொடுத்தோம் வேண்டும்
பொருளெலாம் படைத்தி யென்றான் புண்ணியப் பொருளாய்நின்றான்.

இப்பரி சமலன் கூற விதயமே குளிர்ந்து மேன்மே
லொப்பரும் புளக மெய்தி யுனதரு ளாலே யுய்ந்தே
னப்பனே யமுதே பொன்னே யையனே யரனே வாழ்வே
செப்பருங் கனியே தேனே செல்வமே போற்றி போற்றி. (13)

ஆதியாய் நடுவா யீறா யகண்டமாய்க் கண்ட மாகிச்
சோதியாய் நாத மாகிச் சுருதியாய்த் தரும வல்லி
பாதியா யெவையு மாகிப் பராபர மாகி ஞான
வேதியாய் வெளியாய் நின்ற விமலனே போற்றி போற்றி. (14)

ஐயனே போற்றி யன்பர்க் கன்பனே போற்றி ஞான
மெய்யனே போற்றி யென்னால் வெளிநின்ற கொழுந்தே போற்றி
துய்யனே போற்றி யார்க்குந் துணைவனே போற்றி யெங்கள்
செய்யனே போற்றி விண்ணோர் திலகனே போற்றி போற்றி. (15)

ஆரண முதலே போற்றி யன்பரா ரமுதே போற்றி
காரண நிதியே போற்றி கருணையங் கடலே போற்றி

பூரண வொளியே போற்றி புண்ணியப் பொருளே போற்றி
நாரணன் முதலோர்க் கெல்லாம் நாதனே போற்றி போற்றி. (16)

இவ்வகை புகழ்ந்து வாழ்த்தி யிணையடி யிறைஞ்சி முக்காற்
செய்விதி வலம்வந் தைந்து திருவெழுத் தினையு மோதி
வெவ்வினை கடந்தோ மென்றே விசுவகம் மியனைக் கூவ
வவ்வகை யறிந்து நாதற் காலய மவனுஞ் செய்தான். (17)

மண்டபம் பலவைந் தான மணிமதில் சிகர மெங்குங்
கொண்டலி னளவு புக்க கோபுரங் களிற்றின் கையாய்க்
கண்டசோ பான மெங்கள் கடவுளுக் காய வெல்லா
முண்டகன் மகிழும் வண்ண முடித்தனன் றெழிலின் மிக்கான். (18)

தந்திமா முகவன் செவ்வேற் சண்முக னந்தி வானோர்
சிந்தைசெய் வடுகன் சூரன் றெக்கனு மூர்த்தி நாளு
மந்தமி லுலகம் பெற்ற வன்னைத னீச னாதி
முந்திய விழாவுக் கேற்ற மூர்த்திகள் பலவுந் தந்தான். (19)

நந்தன வனமும் புன்னை நாகிள மகிழுந் தாழை
சந்தகில் கலந்த சோலைச் சாலையும் பெரிதுண் டாக்கி
யந்தணர் வீதி வெற்றி யரசர்தம் வீதி வாய்மைச்
சுந்தர வணிகர் வீதி தூயவே ளாளர் வீதி. (20)

## வேறு

இலகவே கம்மிய ரிருக்கும் வீதியு
மலகிலாப் பரிசனத் தவர்கள் வீதியு
மலர்மக ளிகர்விலை மாதர் வீதியு
நிலவவே திசைதிசை நிறையச் செய்தனன் (21)

வேதமே யங்கமே மிகவும் வல்லரா
யாதியந் தணர்களா யிரத்தெட் டெட்டுடன்
வீதியி னடுவுற விளங்க வைத்தவ
ரோதிய விருத்தியா யூரு நல்கினான். (22)

ஆகமம் வல்லவ ராதி சைவரா
யேகனைப் பூசனை யியற்றும் பூசக
ரோகைகூர் பதின்மர்தா முறைய நாதன்முன்
மேகமே தொடுமொரு வீதி நல்கினான். (23)

அன்னசா லையுநிறை யறத்தின் சாலையு
மின்னிய வெதிரெதிர் யாக சாலையும்
பன்னரும் பலபல பண்ட சாலையு
முன்னிய பரிசெலா முழுதுண் டாக்கினான். (24)

வேறு

அன்புறு பரமன் வைகு மாலயந் தனக்குத் தெற்கே
தன்பெய ரதனா லிங்கந் தாபித்துக் கோயில் கண்டு
மன்பதை யுய்ய வேறோர் வாவியுந் தொட்டுக் கிட்டா
வின்பமும் விழாவும் பேறு மெய்தினான் றெய்வத் தச்சன். (25)

வேறு

நலமிகு திருவிழா நடத்த நாடியே
குலவிய பசும்பொனாற் கொடிஞ்சிற் கும்பமொன்
றிலகவே யமைத்துநல் லெழின்மிக் காயதோர்
சலந்தி முத்தினாற் சதுர நாற்றினான். (26)

மாதவர் பலருடன் மாசித் திங்களி
னோதமி லசுவதி யெனுநன் னாளிலே
மோதுவிண் மழையென முழங்க வின்னிய
மோதிய விடைக்கொடி யுயர்த்தி னானரோ. (27)

அரம்பைய ராடலு மமுத கீதமே
நிரம்பிய கின்னரர் நிகழ்த்து பாடலும்
பரம்பிய துந்துபிப் பணையின் சும்மையும்
விரும்பிய சுரர்பதி மேன்மை போற்றவே. (28)

கற்பக மலரினாற் கவரிக் கொத்தினா
லற்புதத் தேரினை யலங்க ரித்ததிற்

றற்பறை யுடனெங்க டரும நாயகன்
பொற்புறுந் திருவிழாப் பொலியச் செய்தனன். (29)

விருப்புக மகமென விளங்கு நாளிலே
பொருப்பணங் குடனுறை புங்க வன்றனை
மருப்பயின் மஞ்சன மாட்டி வைத்தவன்
றிருப்பதத் துணையினைத் தெரிசித் தானரோ. (30)

இன்னமும் பலபுரிந் தீரைந் தானநா
ணன்னெறி விழாவினை நடத்திப் பின்னரு
மன்னவர் பூசனைக் காகநூற் றெட்டுத்
தொன்னகர் கொடுத்தனன் சுருதி நாயகன். (31)

பானலந் துணைவிழிப் பாவை தன்னொடும்
வானவர் தம்மொடும் வலங்கொண் டன்பினன்
ஞானநா யகனையே நாடி முன்னர்நின்
ரூனதோர் வரமெனக் கருடி யென்றனன். (32)

இத்தலத் தெய்தியே யெனது தீர்த்தத்திற்
பத்தியாய் மூழ்கிநின் பாதம் போற்றினோர்
கைத்தல நெல்லிபோற் காண நின்பத
முத்தியே யருள்கென மொழிந்து பின்னுமே. (33)

பொருந்திய விழிகளிப் புறவி லிங்கத்து
ளிருந்தொரு பசுஞ்சுட ரெழுந்த தாற்பெயர்
திருந்துல கினிற்கொழுந் தெனவுந் தேன்மொழி
வருஞ்சிலை மகட்குமே வழங்க வாழ்த்தியே (34)

நாதனை விடைகொடு நளின நாயகன்
ேறதிம மீதுகொண் டுலகெ லாந்தரு
மாதொடு தன்பதி மருவின னுடன்
போதுமப் புலவர்தம் புரம்புக் காரரோ (35)

மூவரி லொருவனு முளரி வானவன்
பூவிரி சடிலனைப் பூசை செய்தலா

ளுவலந் தீவிலந் நகரி லேபல
தேவரு மனிதராய்ச் செனிக்க வேண்டினர். (36)

## வேறு

உயரு மிப்பதி சமீவன முன்யுகத் துரைக்கு
மியலு றப்பிர மேச்சுரம் பின்னுகத் திசைக்குந்
துயர றுக்குமிந் திரபுரந் துவாபரத் திசைக்கும்
பயில்க லிக்கயி ராபதேச் சுரமெனப் பகரும். (37)

எந்தப் பாவமும் பிரமகத் திக்கிணை யில்லை
அந்தப் பாவத்திற் சிவத்துரோ கங்களே யதிகம்
பந்தப் பாவமும் பிரமருண் டத்துநீர் படிந்தான்
முந்தப் போம்வருஞ் சிவபுரத் திடையறா முத்தி. (38)

விண்ணிற் றேடியும் பறந்துமுன் னறிவுறா விதிதான்
மண்ணிற் கண்டடி வணங்கிய கொழுந்தைமற் றெருகாற்
கண்ணிற் காணினுஞ் சிவனுருப் பெறுவர்மெய்க் கனவா
லெண்ணிற் காணினுஞ் சிவபுரத் திடையறா திருத்தும். (39)

இரத மூர்தினத் திலிங்கத்திற் கிருகலப் பாலை
விரவ வேயினி தாட்டினு லதனுரு மீதே
கரவி லர்த்தனு ரீச்சுர மாகவே காணு
முரமு டன்றெழு வுண்மைசா யுச்சிய முண்டாம் (40)

அந்த நல்லுருக் கண்டவர் தமையெதி ராக
வந்து கண்டவர் சுவர்க்கமீ தினிதென்றும் வாழ்வார
முந்த வேபல கோடிநாட் புண்ணிய முயன்ற
சிந்தை யாளருக் கெளிதிலத் தரிசனஞ் சேரும். (41)

விரிஞ்சன் செங்கையாற் றோண்டலாற் றீர்த்தமும் விசிட்டம்
விரிஞ்ச னெங்கும்விட் டெய்தலாற் றலமுமே விசிட்டம்
விரிஞ்சன் வாழ்வரங் கொடுத்தலா லிலிங்கமும் விசிட்டம்
விரிஞ்ச னல்லதிச் சமீவனப் பெருமையார் விரிப்பார். (42)

தூய தாகிய முனிநதித் தீர்த்தமுஞ் சுருதி
மேய புங்கவன் றீர்த்தமும் படிந்துபின் விண்ணோர்
நாய னார்தமை வலங்கொண்டு பணிவரே னவினன்
சேய நாளெலாஞ் சிவபுரத் திருப்பது திண்ணம். (43)

இத்த லந்தனில் விசிட்டம்பஞ் சாக்கர மிசைத்தல்
சித்த மன்புற வேயொரு காலிங்ஙன் செபித்தா
லொத்த தாமிரு பத்தஞ்சு பேதமென் றுரைக்கு
நித்த னல்லுரு வம்பஞ்சாக் கரமனு நிலையும். (44)

இருப தும்மிரு மூன்றுமாம் பேதத்தி விசைக்க
மருவு மூலபஞ் சாக்கர மாந்தெய்வ மனுவு
மருமை யாமறைத் தலத்திடை யைம்பது கோடி
யுருவெ லாஞ்செபித் தெய்திய பலனையு மொக்கும். (45)

பன்னு கங்கையின் கரையுடன் பதரியாச் சிரம
மன்ன வேகுருக் கேத்திர மற்றுள தலத்தி
லுன்னு வேதங்க ளன்னையு மொவ்வொரு வருட
மன்ன வாறிருந் தோதிய பலனெலா மளிக்கும். (46)

பரிவு கூர்தரு மசுவமே தசத்துள பலனும்
பெருகு மைம்பொனூற் றுலாபுரு டஞ்செய்த பேறு
மரிய கங்கைநீ ராடிய பலன்களு மனைத்து
மொருத ரம்பஞ்ச வக்கர முரைத்தபே றொக்கும். (47)

பிரம தீர்த்தத்து முனிநதி யினும்பிற பூறுகு
புரவு கோமயம் பூசியே மூழ்கிப்புங் கவனைப்
பரவித் தெக்கணா மூர்த்திமு னெழுத்தஞ்சும் பகர்ந்தா
லரன்முன் காட்சிதந் தவரவர் விருப்பெலா மளிப்பான். (48)

தொல்லை வாவியாம் பிரமகுண் டத்திடைத் தோய்ந்து
வல்லி பாகன்மு னெழுத்தைந்தும் வாய்மையா லுரைத்தாற்
பில்லி சூனியம் பேய்குட்ட நோய்முதற் பிணிக
ளொல்லை யின்முய லகன்முதற் பதைபதைத் தோடும். (49)

கன்னி கைக்குநற் கணவராம் விதவைக்குக் கணவன்
மன்னு நற்கதி யாந்துறந் தோர்க்குமுன் மனுவாற்
பன்னு மோக்கமு * மலடிக்குப் பாலனு முண்டா
முன்னு நல்குர வொழித்துப்பின் பெருஞ்செல்வ முதவும். (50)

ஆத லாலிதன் பெருமையை விரித்தெளி தாக
வோத வேயரி துணர்ந்தவா றுரைத்தன மெனவே
வேத புங்கவன் விளம்பலும் முனிவரர் தொழுதெந்
நாத னேபிழைத் தோம்பிழைத் தோமென நவின்றே. (51)

போற்றி யாவரும் புகலுதற் கரியவித் தலத்துக்
காற்று மிந்திர புரமென வறைவதை விரித்துச்
சாற்று வாயெனக் கேட்டலுஞ் சவுனக முனிவ
னேற்றி நங்கொழுந் தீசனைச் சூதனு மிசைப்பான். (52)

ஒரு காலத்திலே, பிரமதேவன் இராசதகுணத்தால் பரமபதியை மதியாது தன்னையே மதித்து நமக்கும் (பரமனைப்போல்) ஐந்து தலைக ளிருக்கின்றன, நாமே யுலகத்தைச் சிருஷ்டிசெய்தமைத்தோமெனச் செருக்கடைந்து தன்னிடம் வருந் தேவர்களைப் பாராமலும் அவர்க ளோடு பேசாமலு மிருந்தான். அதனை நாரதரறிந்து திருக்கயிலை சென்று சிவபெருமான் றிருமுன்னிலையில் விண்ணப்பஞ் செய்தார். சிவபிரான் அப்பிரமனுடைய சிரங்களிலொன்றை கொய்யும்பொருட்டு (தன் அமிசமாகிய) பைரவரையனுப்பினார். பைரவர் நான்முகனிடஞ் சென்று அதட்டி அவனுடைய சிரங்களிலொன்றை யறுத்துத்தள்ளினார் சதுமுகன் பயந்து படைத்தற்றொழிலையுஞ் செருக்கையுமிழந்து சிவபெருமானை மதியாத குற்றமாகிய சிவத்துரோகம் நீங்கும் வழி யாதென? வருந்தி நிற்கையில், "பூலோகஞ் சென்று சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்தால் சிவத்துரோகம் நீங்குமென்று ஓர் வாக்கெழுந் தது," அவ்வாக்கைப் பிரமன் கேட்டு ஆநந்த பரவசமடைந்து, சரசு வதியோடு அன்ன வாகனத்திலேறிப் பூலோகம் வந்து, சிவதலங்களெங்

* மலடிக்குண்டாகுமே பாலன் என்றும் பாடம்.

குஞ் சென்று தரிசித்துக்கொண்டு, காவிரி நதியை யடைந்து அதில் மூழ்கித் திருப்பூந்துருத்தியை யடைந்தான்; அந்தலத்திலிருந்த காசி பர் எதிர்வந்து, அன்னை தந்தையரை வணங்கி அழைத்து வந்து, ஆசனத்திலிருத்தி நிகழ்ந்தன வுணர்ந்து, திருவாரூருக்கு நிருதி திசையிலே, ஒரு யோசனை தூரத்திலே, அகத்திய நதிக் கீழ்கரையிலே, வன்னிவன மென்றொரு தலமுண்டு; அத்தலத்திற் கொப்பாகிய தலமில்லை; அங்கு ஈசனைப் பூசனை புரிந்தால் சிவத்துரோகம் நீங்கும்; விரும்பியவற்றைப் பெறலாமென்றார். உடனே பிரமன் அத்தலமடைந்து, ஒரு தடாக முண்டுபண்ணி, அதை வேத மந்திரத்தால் சுத்தி செய்து, மூன்று லோகங்களிலுமுள்ள தீர்த்தங்களை யெல்லாம் அதில் மந்திர பூர்வமாக வருவித்து, அத்தீர்த்தத்தில் மூழ்கி, மத்தியிலிருந்த மணலை யெடுத்து வந்து, சிவலிங்கத்திருவுருவம் அமைத்து, மேற்கு முகமாக வைத்து சந்தனம், அகில், பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, அத்தர், புழுகு, சவ்வாது முதலிய வாசனை திரவியங்களைக் குழைத்துச் சாத்தி, விதிப்படி பூசித்துப் பஞ்சாக்கரஞ் செபித்து, தனது இதய கமலத்தில் சிவபரஞ் சோதியைத் தியானித்தனன். சிவபெருமான் அவ்விலிங்கத்தினின்று பசிய சுடர்க்கொழுந்து போலத் தோன்றி நீ செய்த பூசைக்கு மகிழ்ந்தோம்; உன் குற்றத்தைப் பொறுத்தோம்; உனக்குச் சிருஷ்டித் தொழிலையுங் கொடுத்தோம் என்றருள் செய்தார். பிரமன் பரமனைப் பலவிதமாகத் தோத்திரஞ் செய்து, பஞ்சாக்கரஞ் செபித்து, ஆலயமமைக்கக் கருதி விசுவகம்மியனை வரவழைத்தான். அவன் பிரம்மாவின் குறிப்புப்படி விமானங்கள், மண்டபங்கள், ஐந்து மதில்கள், கோபுரங்கள், விநாயகர், சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, தேவியார், சண்முகர், நந்திதேவர், பைரவர், வீரபத்திரர், சந்திர சூரியர், திக்குப்பாலகர், உத்ஸவர்கள், மஹாரதம், துஜத்தம்பம், நந்தனவனம், சோலை, சாலை, அந்தணர்வீதி, அரசர்வீதி, வணிகர்வீதி, வேளாளர் வீதி, கம்மியர்வீதி, ஏவல்கேட்போர்வீதி, விலைமாதர்வீதி, அன்ன சத்திரம், தருமசத்திரம், யாகசாலை, பண்டசாலை, முதலியன அமைத்தான். பிரமன் அம்மூர்த்திகளை அவ்வத் தானங்களில் பிரதிஷ்டை

செய்து ; ஆயிரத்தெட்டுப்பேர் வேதோத்தமர்களை நடுவீதியில் குடிவை த்து அவர்களுடைய ஜீவனத்திற்கு வேண்டிய கிராமங்கள் கொடுத்து, பத்துப்பேர் பூசகரை சிவசந்நிதானத்திற் கெதிரில் குடிவைத்தனன். விசுவகம்மியன் கோவிலுக்குத் தெற்கே தன் பெயரால் ஒரு தீர்த்த முண்டுபண்ணி அதின் கரையில் தன் பெயரால் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்துபூசித்து, பிரமதேவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப் பிடஞ் சென்றான். பிரமன் மாசிமாசம் அசுவனி நட்சத்திரத்தில் இடபக் கொடியேற்றி, மகாரதம் முதலிய திருவிழா வெல்லாம் நடத்தி, பத்தா நாள் மக நட்சத்திரத்தில் (பிரம) தீர்த்தோத்ஸவஞ்செய்து, பூசைக்காக நூற்றெட்டு நகரங்கொடுத்து, சந்நிதியில் நின்று யாரேனும் எனது தீர்த்தத்தில் மூழ்கி தம்மைத் தரிசித்தால் முத்தி யடையவும், தாம் சுடர்க்கொழுந்தாய் நின்று அநுக்கிரகஞ் செய்தபடியால் தமக்குக் கொ ழுந்தீசரென்னுந் திருநாமம் விளங்கவும், தேவியாருக்குத் தேன்மொழி யம்மை யென்னுந் திருப்பெயர் விளங்கவும் வேண்டுமெனப் பிரார்த் தித்து ; விடைபெற்றுக்கொண்டு, கலைமகளோடு அன்ன வாகனத்தி லேறி சத்தியலோகம் போனான். இத்தலங் கிரேதாயுகத்தில் சமீவன மெனவும், திரேதா யுகத்தில் பிரமேச்சுர மெனவும், துவாபர யுகத்தில் இந்திரபுர மெனவும், கலியுகத்தில் ஐராபதேச்சுர மெனவும் பெயர் பெறும். இத்தலத்தைக் கனவில் நினைத்தாலுஞ் சிவலோக மடைவர். இரதோத்ஸவ தினத்தில் சிவலிங்கப் பெருமானுக்கு இரண்டு கலம் பால் அபிஷேகஞ் செய்தால், அவ்விலிங்கம் அர்த்தநாரீசுவர முகூர்த்த மாய்த் தோன்றும் ; அம்மூர்த்தியைத் தரிசிப்போர் சாயுச்சிய மடை வர் ; அத்திருவுருவைத் தரிசித்தோரைத் தரிசிப்போர் சிவலோகமடை வர். முனிநதியிலும் பிரமதீர்த்தத்திலும் மூழ்கிக் கொழுந்தீசரைத் தரிசிப்போர் ஒரு பிரமகற்பஞ் சிவலோகத்தி லிருப்பர். இருபத் தைந்து இருபத்தாறு பேதமாகச் சொல்லப்படும் பஞ்சாக்கரத்தை இத்தலத்தில் ஒருருச் செபித்தால் ஐம்பது கோடி யுருச் செபித்த பலனுண்டாம். பஞ்சாக்கரத்தை இங்கு ஒரு தரஞ் செபித்தால் கங்கா நதிக்கரை, பதரிகாச்சிரமம், குருக்ஷேத்திரம் முதலிய தலங் களில் நான்கு வேதங்களையும் ஒவ்வொரு வருஷம் ஓதிய பலனும் ;

அசுவமேதஞ் செய்த பலனும்; துலா புருடதானஞ் செய்த பலனும்; கங்கா தீர்த்தமாடிய பலனுமுண்டாம். முனிநதியிலும் பிரமதீர்த்தத்திலும பசுவின் சாணத்தைப் பூசிக்கொண்டு, அறுகினல் தீர்த்தத்தையெடுத்து சிரசில் புரோக்ஷித்துக்கொண்டு மூழ்கி, கொழுந்தீசரைத் தரிசித்து, தக்ஷிணாமூர்த்திமுன் னிருந்து, பஞ்சாக்கரஞ் செபிப்போர் முன் சிவபெருமான் தோன்றி வேண்டியதளிப்பார். பிரம தீர்த்தத்தில் மூழ்கி, கொழுந்தீசர் முன்னிருந்து, பஞ்சாக்கரஞ் செபித்தால் பில்லி, சூனியம், பேய், குட்டம், முயலகன் முதலியன நீங்கும். பிரம்ம தீர்த்தத்தில் மூழ்கி கொழுந்தீசர்முன்—கன்னிகை பஞ்சாக்கரஞ் செபித்தால் நல்ல கணவனை யடைவள், விதவை பஞ்சாக்கரஞ் செபித்தால் அவள் கணவனை நற்கதி யடைவன், துறவிகள் பஞ்சாக்கரஞ் செபித்தால் மோக்ஷமடைவர், மலடி பஞ்சாக்கரஞ் செபித்தால் புத்திரப் பேற்றை யடைவள், வறுமை நீங்கிச் செல்வமுண்டாகும். இத்தலப் பெருமையைச் சொல்ல எவராலும் முடியாதென்று சூதமுனிவர் சொல்லி யருளினர். சவுனகமுனிவரெழுந்து சூதமுனிவரை வணங்கி இத்தலத்திற்கு இந்திரபுரமென்று பெயர் வந்த காரணத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனலும் சூதமுனிவர் சொல்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

---

குறிப்பு.—மாசிமாசம் அசுவனி நக்ஷத்திரத்தில் இடபக்கொடியேற்றி இரதோத்ஸவ முதலியவற்றை விதிப்படி நடத்தி பத்தா நாள் மகநக்ஷத்திரத்தில் பிரமதீர்த்தோத்ஸவம் நடத்துவது மிக்க விசேடமாம்.

இரதோத்ஸவ தினத்திலே கொழுந்தீசருக்கு (இரண்டு கலம்) பால் முதலிய அபிஷேக திரவியங்களால் விதிப்படி அபிஷேகாதிகள் செய்விப்பது உத்தமோத்தமமாம்; சிவபெருமான் அர்த்தநாரீசுவர மூர்த்தியாய்த் தரிசனங் கொடுப்பார்; எல்லாப் பேற்றையு மெளிதிலடையலாம்.

---

## நாலகாவது
## இந்திரபுரச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

விருத்தி ராசுர னெனுமொரு தானவன் விபுதர்
கருத்த னாகிய வாசவன் றனைப்புறங் கண்டு
முருத்து நன்னகை யரம்பைய ருடன்முது பதியி
லருத்தம் யாவையு மழித்தனன் றிசையெலா மடர்த்தான் (1)

இயக்கர் கின்னரர் நாகர்கந் தருவர்நா டெவரும்
வியக்குந் திக்குறை விண்ணவர் நாடெலா மேன்மேன்
மயக்கும் பூசலில் வளமெலாங் கவர்ந்தவர் வாழ்வை
யயர்க்க வேதுரந் தநேகநா ளுலகினை யாண்டான் (2)

அந்த ணாளர்த மறிவுபோ யினரவ ரறிநூன்
மந்தி ரங்களும் வேதமும் பொய்த்தன வானோர்
முந்து மொய்ம்பொடு செருத்தொழில் குறைந்தன முழுதுஞ்
சிந்தை நொந்தனர் செய்வதொன் றறிகிலர் திகைத்தார் (3)

வேறு

இந்திரன் முதலா வுள்ள விமையவ ரெவருங் கூடி
வந்தடி வணங்கிப் பூமேல் வரதனே யவய மென்ன
வந்தண னவரை நோக்கி யஞ்சலென் றருளி யுங்கள்
சிந்தனை முழுது நீரே செப்புதிர் தெரிய வென்றான். (4)

விருத்திரா சுரனு லுள்ளம் வெதும்பினேம் பதியை நீங்கி
வருத்துமுட் கானம் புக்கோம் மகத்தொழில் மறந்தோ நீயே
கருத்தினு லெம்மைக் காக்கக் கருதிமுன் போல வெம்மூர்
பொருத்துநீ யலது வேறு புகலிட மில்லை யென்றார். (5)

விரிஞ்சன்வா னவனை நோக்கி விருத்தனைத் ததீசி யென்பா
லருஞ்சம முடிக்க லாகு மாகையாற் றதீசி பாற்போய்
வருஞ்செயல் கூறி யென்பை வாங்கிவச் சிரம தாக்கிப்
பொருஞ்சிலைக் கிரியன் றனைப் புரட்டுதிர் போதி ரென்றான். (6)

என்றுரை கூற வானோ ரிறைவனை யிறைஞ்சி வாழ்த்திச்
சென்றனர் ததீசி யென்னுந் திருமுனி தன்பான் முன்போய்
நின்றன ராசி கூறி நீர்வந்த தென்னோ வென்ன
வென்றிகூர் விருத்த னாலே விளைந்தவா றனைத்துஞ் சொன்னார். (7)

எங்களான் முடிவ தில்லை யினியுன்றன் முதுகி லொன்றாய்த்
தங்கிய வென்பை வாங்கித் தருதியே லேதி யாக்கி
யங்கவன் றன்னை வெல்ல லாகுமென் றுரைப்ப நேர்ந்து
புங்கவ னென்பை வாங்கிப் பொருக்கெனக் கொடுத்தான் மன்னோ. (8)

கொடுப்பவர்க் கில்லை யென்னுங் குணம்வரா ததவும் போதிற்
றடுப்பவ ருரையுங் கொள்ளார் தரணியுண் டான காறும்
வடுப்படாப் புகழே நிற்கு மென்பதே மதிப்ப ராவி
விடுப்பது முணரார் நல்கும் வேட்கையே பொருளாய்க் கொள்வார். (9)

என்னவே புகழ்ந்து வாழ்த்தி யிருடியை விடைகொண் டேகி
மன்னிய சுனசி கையில் வச்சிர மாக வேந்தித்
துன்னுமும் மதவெற் பேறிச் சுரர்சுற்றத் தொடர்ந்து தேவர்
மன்னவன் விருத்தன் வாழும் வளம்பதி வளைந்தார் மன்னோ. (10)

ஒற்றர்போ யுரைப்பக் கேட்டே யுருமெனச் செங்கை கொட்டிப்
பொற்றவி சிழிந்து வானோர் புறத்தினிற் போகா வண்ணஞ்
சுற்றுமி னென்றே நின்ற சுற்றமும் படையு மேவி
வெற்றியந் தடந்தே ரேறி விருத்திரன் வெளியிற் புக்கான் (11)

கண்டன ரிமையோர் வாளுங் கணிச்சியும் வில்லும் வேலும்
கொண்டெதிர் நடந்து தெவ்வர் குழுவெலாங் குலையக் கொன்று
திண்டிறல் விருத்த னோடு செருச்செய்து வெருவக் கண்டே
அண்டர்கோன் களிற்றை யேவி யவுணனோ டமர்செய் தானால். (12)

இருவருஞ் சிலையை யேந்தி யெதிரெதிர் வாளி தூவிப்
பொருதலு மவுண னெஞ்சம் புகைந்தொரு வடிவேல் வாங்கி
வெருவரச் சுனசி மீதே விடுத்தலும் விலக்கிப் பின்னும்
பருவமா முகில்போ லம்பாற் பல்பகற் செருச்செய் தாரால். (13)

இனியொரு கணத்தில் வெல்வ னிவனென வெண்ணி வேதன்
மனுவினுந் ததீசி தந்த வச்சிரத் தினுநாம் வென்றி
புனைவதே கரும மென்று பொருபெருங் குலிசம் வாங்கி
நினைவதன் முன்னே யந்த நிசாசரன் மீது விட்டான். (14)

வச்சிரந் ததீசி யென்பா மதனைகயி னாலு நான்கா
மெய்ச்சிர முடையோன் கூறும் வீறுமந் திரத்தி னாலுங்
கைச்சிலை யவுண னாவி கவர்ந்தது கண்டு வானோர்
மெச்சினர் புதுப்பூ மாரி மேகவா கனன்மேற் பெய்தார். (15)

துந்துமி முழவ மார்த்த சுருதிநூ லார்த்த வானிற்
சந்திரன் பருதி மற்றைத் தாரகைக் குழாவு மார்த்த
விந்திரன் முதலோர் தத்த மிருக்கைபுக் கமர்ந்தார் பின்னை
வந்தது சுனாசி தன்னை வளைந்தது பிரம கத்தி. (16)

பொருப்புற முலகை யாலே புந்திநொந் திருப்ப நோக்கி
விருப்புறு குரவன் கூற மேதினி புகுந்து சாரற்
பருப்பதம் பலவு நீங்கிப் பாரத வருடம் புக்குத்
திருப்புனல் பலவுந் தோய்ந்து சிவதலம் வணங்கு நாளில். (17)

நல்லிசை மகதி வீணை நாரதன் விருத்த னாவி
கல்விய நிருபன் றன்னைக் கண்டிவை வினவி நீபோய்ச்
சொல்லிய சுருதி நாதன் றொழுஞ்சமீ வனத்து மூரன்
முல்லையாம் பவள வாய்த்தேன் மொழிபங்க னிருதாள் போற்றி. (18)

பூசனை புரிந்தா னீங்கிப் போங்கொடும் பிரம கத்தி
மாசறு தலத்திற் போதி யென்னலு மகிழ்ந்து வேந்தன்
றேசுள முனிவ ரோடுஞ் சென்றுநன் னதிநீ ராடிப்
பேசிய மனுவி னோடு பிரமதீர்த் தத்து மூழ்கி. (19)

கண்ணினாற் காணப் பாவக் கடற்கரை யேற்று மெங்க
ளண்ணலங் கொழுந்தை வானாட் டமுதினா லபிடே கங்கள்
பண்ணிவின் மலரா மாலை பற்பல சாத்தி ஞானப்
புண்ணிய னெழுத்தோ ரைந்தும் புகன்றுமுன் பணிந்து தாழ்ந்து. (20)

சிலபக லிவ்வா றெங்கள் செல்வனை யருச்சித் தேத்த
நிலவலர் சடையா னுள்ள நெகிழ்ந்தருள் பூத்துச் சற்றும்
விலகரும் பிரம கத்தி மேகவா கனனை நாளும்
பலபல வருத்தஞ் செய்யும் பரிசெலா மெளிதி னீக்கி. (21)

பங்குநான் காக்கி யொன்றைப் பாரிடை யொன்றை நீரின்
மங்கைய ரிடத்தி லொன்றை மரத்துழி யொன்றை நல்க
வங்கவை யுருவம் வெவ்வே றுயுவர் நுரையும் பூப்புந்
தங்கிய பிசினு மாகத் தரித்தது போகத் தீர்த்தான். (22)

புளகமெய் யரும்பிக் கண்ணீர் பொழிந்துப நிடத மோதி
யுளமிக மகிழ்ந்து பல்கா லுடன்பணிந் தெழுந்து வாழ்த்தி
விளரிள மதியம் பூத்த வேணியா யய்ந்தே னுய்ந்தே
னுளவறு துயரங் காட்டு மலகைநோய் தீர்ந்தே னென்றான். (23)

## வேறு

வரும்பகலிற் கொணர்ந்தொருதம் விமானம் பொன்னு
மணியுமொன்றாய்க் குயிற்றியது வயங்க மேல்பாற்
பெரும்புயலைத் தொடநிறுவி யதற்கு நாப்பண்
பெயர்தனதா லிலிங்கமொன்று பதிட்டை செய்து
விரும்பியதன் பெயராற்றீர்த் தமுமுண் டாக்கி
விமலனைப்பூ சனைசெய்து மெலிந்தோர்க் கன்பு
தரும்பிரமேச் சுரனுடனிந் திரேசன் றன்னைத்
தனதுமனத் தகலாமற் றரித்தான் மன்னோ. (24)

அண்ணல்சின கரத்திலொரு பிரகா ரத்தி
லமுதகும்பம் வைத்ததுவே யமுத கூப
மெண்ணரிய மஹாதீர்த்த மெனவே பேரா
மிம்மையினு மறுமையினு மெவரும் வாழ
நண்ணியபா வங்களெலாந் தீர்க்கும் வேண்டும்
நல்வரங்க டமையளிக்கும் நனிநா ளாடும்
புண்ணியதீர்த் தப்பலனு மிதனைக் காணப்
புதுப்புனலின் றுளிதெறிக்கப் பொருந்து மன்னோ. (25)

இவ்வகைபூ சனைபுரிந்து முதிர்நோய் தீர்ந்தே
யீசனையே விடைகொடுபோ யிமையோ ரேத்த
மௌவன்முலை யரம்பைமட வார்கள் வாழ்த்த
வாசவன்றன் வளநகர மகிழ்ந்தே புக்கா
னவ்வகையே யிந்த்ரபுர மென்றி தன்பே
ராகியன்று தொட்டுநடந் ததில மெல்லாஞ்
செவ்விதரு தலங்களினித் தலமே யெங்க
டிகம்பரனு முமையுமன்பு செழித்து வாழ்வார். (26)

புரந்தரனிந் திரேசனுக்குப் பொன்னாற் செய்த
புதுச்சிகரந் தனைத்தூரந் தெரிசித் தாலு
மரந்தைதரு பாவமெல்லா மகற்று மெங்க
ளரன்கயிலை யிடத்திருத்து மமுத கூபஞ்
சிரந்தபுனற் றிவலைசற்றே படினுஞ் செய்த
தீமையெலா மகற்றுமொரு துளியுட் சென்டாற்
பரந்தபெருங் குட்டமுதற் பிணிபோம் வந்து
பற்றியபேய்ப் பில்லிமுதற் பலவுந் தீரும். (27)

வேறு

ஓங்கிய வமுத கூபத் தொருகுடம் புனலை யம்மை
பாங்குறை கொழுந்துக் கன்பு பரிந்தினி தாட்டி னோருந்
தாங்கிய பாவ மெல்லாந் தரணிமுன் பனிபோ னீங்கித்
தீங்கிலா வசுவ மேதஞ் செயும்பல மொக்கு மொக்கும். (28)

தெளியுமிப் புனலை யேழு தினந்திர வியத்தைக் கூட்டிக்
குளிரவே சிவனுக் காட்டிற் கோளின்வக் கிரமு நீங்கு
நளிகடன் முகத்த மேக நாடெலாம் பெய்யு நெஞ்சி
லெளிவரு துன்ப மெல்லா மிப்புன லாட்டத் தீரும். (29)

வளங்கெழு மாசித் திங்கண் மகத்துநா ளலாங் காவில்
விளங்குபூ ரணையி லெங்கள் விமலனுங் கொழுந்துக் கன்பாய்க்
களங்கமில் கறுப்பஞ் சாறு கடத்திரு கலஞ்சேர்த் தாட்டி
யுளங்களி கொளவே காட்டு முறைசிவ னென்றுங் கோலம். (30)

அந்தலிங் கத்திற் ரேற்று மருத்தனு ரீசன் றன்னைச்
சிந்தையன் புடனே காணிற் சிவனுருப் பெறுவர் திண்ண
மூந்திய சனன மேழின் முடித்தபுண் ணியத்தோர்க் கல்லால்
வந்தனை புரியும் பேறு வராதொரு போது மாதோ. (31)

இந்திர புரமென் றோர்கா லிசைத்தன ரேனு மவ்வூர்
முந்துறப் பணிவோ மென்று மூன்றடி நடந்தா ரேனும்
வந்தொரு கணமவ் வூரில் வைகினு ரேனுந் தீராச்
சிந்தனை முழுதுந் தீரு ஞ்சிவபத மடைவர் திண்ணம். (32)

சுதைக்கிணை யூறு நீரிற் றெழுஞ்சுவ ணத்தின் மோங்கே
யிதைப்பிர மேசனன்றி யிந்திரேச் சுரனுக் கேனும்
விதிப்படி குளிர வாட்டின் மேதினி வாழ்வு பெற்றே
யுதற்கிணி யொப்பி லாத வானசா யுச்ய ராவார். (33)

திரானுறு மமுத கூப தீர்த்தத்தின் மூழ்கி யாரும்
வரமருள் பரமன் கோயில் வலம்வரக் கிடைக்கு மாறு
லரனூறுப் பெறுவர் திண்ண மமரர்கோன் விமானங் கண்டான்
முரணுறு பிரம கத்தி முதலவாந் தோடந் தீரும். (34)

பன்னிரு சனன மெங்கள் பரமனுக் கடிமை பூண்டு
துன்னுமைந் தெழுத்தை யோதிச் சுத்தரா யிருப்பார்க் கல்லான்
மன்னுமிந் நகரந் தன்னில் வாசமே கிடையா திந்த
நன்னகர் வாசம் பெற்ற ருதனூ ரடைவர் திண்ணம் (35)

தாருவின் வேந்தன் செய்த சரிதையிவ் வாறு சூதன்
பேருரை விரிப்ப நெஞ்சம் பெருமித மெய்தி நீத்தோ
ராருமன் பாகி யெங்கோ னயிராப தேச னூக
வூருமப் பெயரே யான வுயர்கதை யுரைத்தி யென்றார். (36)

ஒரு காலத்திலே விருத்திராசுர னென்பவன் ஒருவனிருந்தான். அவன் செய்த துன்பத்திற் காற்றாத இந்திராதி தேவர்கள் பிரம தேவ ரிடஞ் சென்று விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். பிரமதேவர் நீங்கள் ததீசி முனிவரிட ஞ்சென்று அவருடைய முதுகென்பை

வாங்கி வச்சிராயுதமாக்கி, அவ்வாயுதத்தினால் விருத்திராசுரனைக் கொல்லுங்களென, விடை கொடுத்தனுப்பினார். இந்திராதியர் ததீசி முனிவரிடஞ் சென்று வணங்கி, தாங்கள் விருத்திராசுரனால் படுந்துன்பத்தையும், அஃது நீங்கும்பொருட்டு பிரமதேவர் சொல்லிய உபாயத்தையுந் தெரிவித்தார்கள். ததீசி முனிவர் சந்தோஷமடைந்து தனது முதுகென்பைக் கொடுத்தருளினார். இந்திராதியர் அவ்வென்பை வாங்கிக்கொண்டு போய் வச்சிராயுதமாக்கிக்கொண்டு விருத்திராசுரனோடு யுத்தஞ் செய்து கடைசியாக இந்திரன் அவ்வச்சிராயுதத்தினால் விருத்திராசுரனைக் கொன்றான். பிரமஹத்தி இந்திரனைப் பிடித்துக் கொண்டது. அஃதைப் பிரகஸ்பதி பகவானறிந்து இந்திரனைப் பூலோகத்தில் சிவதல யாத்திரை செய்யும்படி கட்டளையிட்டருளினார். இந்திரன் அங்ஙனமே பூலோகஞ் சென்று சிவதலங்களை வணங்கும் நாளிலே நாரதரைக் கண்டான். நாரதர் இந்திரனை நோக்கி நீ சமீவனஞ் சென்று கொழுந்தீசனைப் பூசிப்பையாகில் பிரமஹத்தி நீங்குமென்றார். இந்திரன் வன்னி வனஞ் சென்று கொழுந்தீசனை விதிப்படி பூசனை புரிந்துகொண்டு சில காலமிருந்தான். இங்ஙனமிருக்கு நாளிலே பரமபதி இந்திரனைப் பிடித்திருந்த பிரமஹத்தியை நீக்கி நான்கு பங்காக்கி ஒன்றை மண்ணினிடத்திலும், ஒன்றை நீரினிடத்திலும், ஒன்றை மரத்தினிடத்திலும், ஒன்றை மாதரிடத்திலுங் கொடுத்து ; மண்ணுக்கு உவராயும், நீருக்கு நுரையாயும், மரத்துக்குப் பிசினும், மங்கையருக்குப் பூப்பாயுங் கழியும்படி திருவருள் செய்தருளினார். இந்திரன் ஆநந்தபரவசமடைந்து, கொழுந்தீசனைப் பல விதமாகத் தோத்திரஞ்செய்து, ஆலயத்தின் மேல்பால் தீர்த்தமொன்றுண்டாக்கி, அதன் வடகரையில் விமானமொன்றமைத்து, தன் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசனை புரிந்தான். கோவிலினுள் ஒரு பிரகாரத்தில் இந்திரன் அமுதகும்பம் வைத்ததானம் அமுதகூபமென்னும் ஒரு தீர்த்தமாயிற்று. அது சகல பாவங்களையும் போக்கும். இந்திரன் சிவபெருமானிடம் விடைபெற்றுத் தேவலோகஞ் சென்றான். அன்றுமுதல் சமீவனத்துக்கு இந்திரபுரமென்னும் பெயருண்டாயிற்று. இந்திரன் பூசித்த விமானத்தைத் தரிசிப்போர் முத்தியடை

வர். அமுதகூப தீர்த்தத்தைக் கண்டாலும், அதை யுட்கொண்டாலும், அத்தீர்த்தந் தேகத்திற் பட்டாலுங் குஷ்டம், பேய், பில்லி முதலியன நீங்கும். அமுதகூப நீரைச் சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்தால் சகல பாவங்களும் போம்; அசுவமேதஞ் செய்த பலனுண்டாம். அந் நீரைத் திரவியத்தோடு சேர்த்து, சிவபெருமானுக்கு ஏழு நாளைக்கு அபிஷேகஞ் செய்தால் கிரகதோஷம் நீங்கும். மாசி மாசம் மக நக்ஷத்திரம் நாலாம் பாதமும் பவுரணைத்திதியுங்கூடிய காலத்தில் சிவபெருமானுக்கு இருகலக் கருப்பஞ்சாற்றை அபிஷேகம் செய்தால் அப்பெருமான் அர்த்தநாரீசுவர மூர்த்தியாய்த் தோன்றுவர். அம்மூர்த்தியைத் தரிசிப்போர் சிவசொரூபம் பெறுவர்; இது சத்தியம். இந்திரபுரமென்று சொன்னவர்களும், அவ்வூரைத் தரிசிக்க மூன்றடி சென்றவர்களும், அவ்வூரில் ஒரு விநாடி நேரம் வசித்தவர்களும் சிவலோகமடைவர்; இது நிச்சயம். பன்னிரு சனனம் சிவபெருமானை வழிபட்டவர்கள்தான் இத்தலத்தில் வசிக்கப் பெறுவர். மற்றவர் வசிக்கப் பெறாரென்று சூதமுனிவர் சொல்லியருளினார். சவுனகாதியர் அயிராபதேச்சுரமெனப் பெயர் வந்த காரணத்தைச் சொல்லவேண்டுமெனத் துதித்தார்கள். சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

திருச்சிற்றம்பலம்

---

குறிப்பு—மாசிமாசம் மகநக்ஷத்திரம் நாலாம் பாதமும் பவுரணையுங் கூடிய காலத்தில், சிவலிங்கப்பெருமானுக்கு, இரண்டு கலம் கருப்பஞ் சாறு முதலிய அபிஷேக திரவியங்களால் விதிப்படி அபிஷேகாதிகள் செய்விப்பது மிக்க விசேடமாம்; சிவபெருமான் அர்த்தநாரீசுவர மூர்த்தியாய்த் தரிசனங்கொடுப்பர்; அப்பெருமானைத் தரிசித்து எல்லாப் பேற்றையுமடையலாம்.

# ஐந்தாவது

## ஐராபதேசச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

தூய செம்பொற் சுதன்மை யெனப்பெய
ராய பேரவை யாங்கட் சுஞெய்
மேய கந்தரு வத்தினர் விண்ணவ
ரேய கின்னரர் யாவருந் தொக்கனர். (1)

அன்ன மன்ன வரம்பைதி லோத்தமை
மன்னு மேனகை மாலையு ருப்பசி
துன்னு கெற்பைசு கேசி பரிமளை
யென்னு மாத ரெழினட நோக்கினன். (2)

வீணை கின்னரர் மேயிசை யாழ்கொடு
பூணு மென்முலைப் பூவையர் பாடமின்
ஞண மாதர் நடித்தலு மிந்திரன்
காண வின்னமுங் கண்பெற வேண்டினன். (3)

வான மேனின்று வந்தய ஞரதன்
கான வீணை கரங்கொடு வண்சுவைப்
பான மேங்கர் பாடலிற் பற்பல
நான மேனியர் நாடக நோக்கினன். (4)

அண்டர் முன்ன ரரம்பை நடித்தலின்
விண்ட சோர்வும் விடாத மயக்கமுங்
கொண்டு வேற்றுழிக் கொம்பெனச் * சோர்ந்தனள்
கண்டு வாயு கலைகுலைத் தானரோ. (5)

நண்ணி நாடக நோக்கிய நாரதன்
கண்ணன் வைகுந்தங் காணவென் றேகலு

---

* துஞ்சுதல் என்றும் பாடம்.

மெண்ண மின்றி † யிருந்துயில் கொள்பவுள்
வண்ணம் யாவையும் வந்துகண் டானரோ. (6)

பந்த மாங்கொடும் பாவமி தாமெனச்
சிந்தை செய்து திருக்கண் புதைத்தரன்
முந்து நாம மொழிந்தவ டன்னைநீ
மைந்தர் நாட்டில் வதியென்று கூறினன். (7)

எழுந்து கூறை யெடுத்துடுத் தேயெதிர்
விழுந்து போற்றியென் மெய்ம்மயக் கத்தினு
லழுந்தி னேன்முனி வாறுதி நீயெனக்
கொழுந்த டங்கட் கொடியிடை கூறினள். (8)

தோகை செய்த துரோகமி தன்றெனு
மோகை யான்முனி யொண்டொடி தன்னைமின்
பாகன் பூசை பலபுரிந் திப்பதிக்
கேகு வாயென் ‡ றிசைத்தன னேகினன். (9)

ஞால மீது நடந்திது நன்றெனப்
பாலி யின்கரைப் பாடல நாதனை
யால நாட்டத் தரம்பையு மர்ச்சனை
சால வாற்றித் தவம்பண்ணி வைகுநாள். (10)

மாத ரார்தமை வாசவன் வீணையி
னோத மேநிறை நாடகம் பார்ப்புழி
காதன் மேய வரம்பையைக் கண்டில
னேது காரண மென்ன வியம்பினன். (11)

கோர மாமுனி கூறிய சாபமு
நாரி பாலி நதிக்கரை புக்கதுந்
தாரு நாயகன் றானுணர்ந் தேமனஞ்
சோரு மோகத் துயர்க்கடன் மூழ்கினன். (12)

---

† இருந்தயர்வுற்றவள் என்றும் பாடம்.

‡ யென்றிசைத்தவனேகினன் என்றும் பாடம்.

காவி நீங்குங் கயுத்தையும் வான்மதி
மேவி நீங்கிய விண்ணையு மொத்தது
தேவர் நாடனுஞ் சித்திர சேனனைக்
கூவி மின்னைக் கொணர்கெனக் கூறினான். (13)

இரத மீதி லெழுங்கந் தருவனும்
வரதன் பாடல மாநகர் புக்கந்த
விரத மாதைநின் வேந்தன் விளித்தனன்
சரத மென்னவத் தையலுங் கூறுவாள். (14)

உள்ள மென்று முவப்ப விடையின்மேல
வள்ளல் வந்து வரந்தந்த பின்னலால்
வெள்ளை வாரண வேந்தன் பதியெதிர்
கொள்ள மீள்கிலென் கூறுதி போவென்றாள். (15)

மையல் வாரண வாசவன் முன்னர்ப்போ
யைய மின்றி யவன்முற்றுங் கூறினான்
றய்ய பாலித் துறைத்தொண்டை நாட்டிடைத்
தையல் பின்னுந் தவம்பெரி தாற்றினாள். (16)

நடித்த நாதனை நாடித் தவம்பல
முடித்து மெம்பரன் முன்வரக் காண்கிலாள்
வடித்த சொல்லி வனம்புக்கு ரோமச
னடித்த லங்களை யன்புற வாழ்த்தினாள். (17)

மாது வானக மாதென நோக்கியே
யேது காரண மெய்தினை யீங்கென
வாதி மாமுனி யன்புடன் கூறலும்
பாத மீது பணிந்திவை செப்பினாள். (18)

பாட லேசனைப் பாலிக் கரையுழி
நாடி நான்பல நாட்டவ மாற்றியும்
வாடி னேனை வலியவந் தாள்பவன்
றேட வந்தருள் செய்திலன் யாதென்றாள். (19)

இந்த வல்லிக் கினியித யப்படி
வந்து நாதன் வரந்தரு மாநகர்
சந்த வாவிச் சமீவன மாமெனச்
சிந்தை செய்து திருமுனி கூறுவான். (20)

தரணி தந்த சதுமுகன் போற்றியே
வரம டைந்தது வாசவன் வல்வினைப்
பிரம கத்தி பெயர்ந்த தியாவரும்
பரவ நின்றது பாவாய் சமீவனம். (21)

வாளை யன்ன வரிவிழி யாயவ
ணுளை யெய்திநன் ளுதனை யர்ச்சனை
வேளை வேளை விளைத்தனை யேலவன்
ருளை நல்குந் தரும்பலம் யாவுமே. (22)

என்று மாமுனி யின்னணங் கூறலு
நன்று நன்றென நாரியும் வாழ்த்தியே
சென்று வன்னித் திருவன மெய்தியே
நின்று நோக்கின ணெஞ்சங் குளிர்ந்ததால். (23)

காட்டிற் புட்பங் கனிகிழங் காதியாக்
கூட்டித் தண்சுனைக் கூபத்து நீரினு
லாட்டிப் பூசனை யண்ணலுக் குய்த்திசைப்
பாட்டிற் கின்னரம் பாடிறப பாடினுள். (24)

அன்ன காலையி லாங்கயி ராவதந்
தன்னை மின்னைத் தலைமிசை வைத்துநீ
பொன்னி நாடு புகுகெனப் போக்கினன்
மன்னு மையலின் மாழ்கிய போகியே. (25)

போந்த வாரணம் பூசனைக் கேற்றவை
யேந்தி யெங்க ளிறைபிர மேசனைக்
காந்தை தன்னைக் கருத்தொரு மித்துமின்
வாய்ந்த வன்பின் வழிபடக் கண்டதே. (26)

வெள்ளை வாரணு மேவிமுன் னின்றெங்கள்
வள்ள லுன்னை வரவுரைத் தாலெனத்
துள்ளு செவ்வழித் தோகையும் பூசையே
யுள்ள முள்ளி யுரைமறுத் தோதினாள். (27)

எண்ணிற் காண்பரு மெந்தையை யிவ்வயின்
கண்ணிற் கண்டு களித்தபி னல்லது
விண்ணிற் பொன்னகர் மேவுத லில்லெனப்
பண்ணிற் சொல்லி பகட்டொடுங் கூறினாள். (28)

அண்ட ரண்டங்கள் காண வரம்பையைக்
கொண்டு போதல் குணமென நாடியே
தொண்ட லங்கொடு சுற்றிப் பிடித்தது
கண்டி லிங்கத்தைக் கைகொடு புல்லினாள். (29)

மீண்டு மும்மத வேழந் தடக்கையாற்
பூண்டு பற்றலும் பொற்கொடி வந்தில
ளாண்டி லிங்க மதனையு மின்னையுங்
கீண்டு கோடல் கிழமையென் றுன்னியே. (30)

முற்றுங் கோபத்து மும்மத வாரணஞ்
சுற்றுங் கல்வித் துதிக்கையிற் சூழ்ந்துடன்
பற்றுங் காலையிற் பண்ணவ னுனையா
லெற்றுங் குன்ற மெனக்கரி வீழ்ந்ததே. (31)

மண்டை யோரிடம் வான்மருப் போரிடங்
கண்டை யாய கலன்மணி யோரிடம்
பண்டை நல்லுருப் பற்பல பின்னமாய்த்
தொண்டை சோரி சொரியக் கிடந்ததே. (32)

வேழ நொந்தயல் வீழ்தலுங் காழளி
தாழும் வார்குழற் றையலு மையனைச்
சூழ வந்து துதித்துநின் னல்லருள்
வாழ்க வாழ்க வளர்கென வாழ்த்தினாள். (33)

வல்லி யீசன் வளர்திரு மேனியைப்
புல்லி நின்றதும் போதகம் வேரொடுங்
கல்லி வீழ்ந்ததுங் கண்டிந்த வாறெலாஞ்
சொல்லி நாரதன் சொல்லுஞ் சுருசிபால். (34)

ஆங்கு நீசென் றரனருள் பெற்றடற்
றூங்க றன்னுடன் றேகையை மீட்டியென்
றோங்கு வாய்மை யுரைத்தலு மெய்விழி
தாங்கும் வேந்தன் சமீவனத் தெய்தினான். (35)

கொண்டல் கண்டுயில் கோபுரத் தூடுதான்
பண்டு கண்ட பசும்பொற் சிகரமும்
வண்டு விண்ட மதுமலர்ச் சோலையுங்
கண்டு கண்டு களிப்பெய்தி னானரோ. (36)

தருதி யன்பெனச் சந்நிதி முன்னர்ப்போய்ச்
சுருதி வாழுஞ் சுடர்க்கொழுந் தீசனைக்
கருதி யாயிரங் கண்ணினு நோக்கினான்
பருதி கண்ட பதுமத்தை மானுவான். (37)

கொழுந்து வாழ்திருக் கோயிலை யைந்தெழுத்
தழுந்து நெஞ்சத் தரிவலங் கொண்டபின்
விழுந்து தாழ்ந்துதன் மெய்குளிர்ந் தன்புட
னெழுந்து நாத னெதிர்நின்று வாழ்த்தினான். (38)

போற்றி போற்றிநின் பொன்னவிர் சேவடி
போற்றி போற்றிநின் புண்டரி கப்பதம்
போற்றி போற்றிநின் பூந்திருத் தாளிணை
போற்றி போற்றிநின் போதுறழ் பாதமே. (39)

அத்த னேயரா னேயருள் வெள்ளமே
பித்த னேயெங்கள் பெய்வளை பாகனே
நித்த னேநிதி யேயன்பர் நேயனே
முத்த னேயென மும்முறை வாழ்த்தினான். (40)

ஆய காலை யமுதுமிழ் வெண்பிறை
மேய செஞ்சடைப் பீதொளி நல்கிட
நேய மாகிய லிங்கத்து ணின்றெங்க
ேயன் வெள்விடை மேல்வந்து தோன்றினன். (41)

அன்னை யெங்க ளாரெனொடு வைகமின்
றன்னை யன்னவர் தம்மொடு சண்முகன்
பொன்னை யன்ன பொறிமயின் மேல்வர
முன்னை மாமுகன் மூடிகத் தெய்தினன். (42)

உளங்க சிந்துள் ளுருகத் தனதுருத்
துளங்க வேந்தன் றொழுதுநின் றேத்தினன்
வளங்கொள் வெம்முலை வல்லியும் வாழ்த்தினள்
விளங்க வேழமு மெய்பெற் றெழுந்ததே. (43)

முழுது மன்புடன் மும்மத வாரணம்
பழுதி லாத படிவக் கொழுந்தினைத்
தொழுது வாழ்த்தித் துதித்தஞ் செழுத்துளத்
தெழுதி யுய்ந்தன மென்றெதிர் நின்றதே. (44)

வெய்ய மாமண்டை வீழ்ந்த விருப்பினல்
வைய முய்ய வருமண்டைத் தீர்த்தமாய்த்
துய்ய வானச் சுரர்வந்து தோய்தலு
மைய மின்றி யளித்தது நல்வரம். (45)

முன்பு வேழ முதல்வனை போற்றலா
லன்பு மிக்க வயிராப தேச்சுர
மென்ப தோர்பெய ராவெய்தி யப்பதி
பின்பு மாங்கதன் பேர்பெற்ற தாலென. (46)

கோல வாரணங் கோட்டினிற் கல்லலாற்
சீல மார்ந்தொரு தீர்த்தமு மானது
ஞால மேன்மை நயந்தகோட் டேரனச்
சால வேயத் தலமும்பேர் பெற்றதே. (47)

அன்ன வேழத் தணிமணி வீழ்தலான்
மன்னு தெய்வ மணியம் பலமெனப்
பின்ன ரோர்தலம் பேர்பெற்ற தத்தலம்
முன்னி னூலு முடிக்குந் துயரெலாம். (48)

வணங்கு மும்மத வாரணந் தன்னையவ்
வணங்கின் பாக னருளுட னோக்கியே
யுணங்கு நின்றுய ரோட்டுதற் கெம்மையே
யிணங்கு பூசை யியற்றுதி யென்றுபின். (49)

தாம மாமணி தான்விழு மவ்விடம்
வாம மேகலை மாதுமை யாளொடு
நாம கிழ்ந்தெந்த நாளு மிருப்பதே
யாம வற்றெம்மை யர்ச்சனை செய்யென்றான். (50)

என்று நாத னிசைத்தலும் வேழமு
நன்று நன்றென நாதனை வாழ்த்தியே
சென்று வெள்ளிச சிகரத்தி லெய்தியே
கொன்றை வேணியன் கூறருள் பெற்றபின். (51)

வடிவ மாகி வளரிலிங் கந்தனை
முடியின் மேல்வைத்து மும்மத வாரணம்
நெடிய வன்புட னீடக் கொணர்ந்துபின்
படியின் மீது பலர்தொழப் புக்கதே. (52)

அன்பு கூரு மமுதத் தெழுந்தது
முன்பு வேதன் முகுந்தன் சுரர்தொழ
வின்ப நல்கி யிருந்தது வெவ்வினை
வன்பு* தீர்த்தது மாச்சிர லிங்கமே. (53)

அவர வர்க்கென் றமைத்தபொற் கோயிலின்
நிவர வைத்திந்த நீணிலம் வாழவே

---

* தீர்த்ததுவாமிந்த லிங்கமே என்றும் பாடம்.

சிவனை நேயந் திகழ்நாக நாதனை
யவனி வாழ்த்து மயிராப தேசனை. (54)

பெருமை கூரப் பிரதிட்டை செய்தபின்
றிரம தாகிய தெள்ளமு தத்தினு
மருவு லாவிய மந்தாரப் போதினு
மருள்பெ றும்படி யர்ச்சனை செய்ததே. (55)

உலக முய்ய வொருதடந் தொட்டதாங்
கலகி லன்புற் றயிராப தேச்சுரன்
மலர் விடாதுமிழ் வாவியை நோக்கியே
சலமு லாவு சடையைத் துளக்கவும். (56)

நாடு கங்கை நதிப்புனல் வீழ்தலுட
தேடு மன்பிற் சிவகங்கை யென்றுபேர்
நீட நின்றது நீணாக தீர்த்தமாம்
பீடு லாவும் பெருமை படைத்ததே. (57)

அருந்தொ ணாவிடத் தன்ன மருந்தினோர்
விரும்பி மாதரை மெய்க்கற்பு நீக்கினோர்
கரந்து கோயிற் கனகங் கவர்ந்தவர்
பொருந்து தெய்வப் புராணம் பழித்தபேர். (58)

பாவ முற்றவும் பண்ணிய பாதக
ராவி நீக்கின ரன்னத்து ரோகிகள்
யாவ ரேனுமித் தீர்த்தத்தி லாடினோர்
தேவ ராகச் சிவன்பதஞ் சேர்வரே. (59)

விருச்சி கத்திங்கண் மேவும் பவரணை
பரித்த நாளிலிப் பைந்தடத் தாடினா
லருத்தி யாங்கங்கைக் காயிரங் காற்சென்று
பெருக்க மூழ்கிய பேற்றையு மொக்குமே. (60)

அரம்பை தன்னுட னாகண்ட லன்மனம்
விரும்பி யிவ்வயின் மேவிக் கருணையே

யரும்பு மெங்க ளயிராப தேசனைப்
பரம்பு மர்ச்சனை பல்பகல் செய்தனர். (61)

தூய்ய ராரும் துதிக்கும் திருவிழாச்
செய்ய வெண்ணித் திகழ்தரு மிந்திரன்
வைய மொப்புறு வைகாசித் திங்களிற்
பொய்யு றுத புணர்பூச நாளிலே. (62)

இலங்கு நல்லிட பக்கொடி யேற்றியே
துலங்கு விண்ணிடைத் துந்துபி யார்ப்புற
வலங்கு வீணை யரம்பையர் பாடநன்
னலங்கொ ளரியர் நாட்டியஞ் செய்தனர். (63)

அத்த நாளி லரதனம் பொானனுடன்
வைத்த தேரின் மதுரவாய்த் தேன்மொழித்
தத்தை தன்னையுஞ் சங்கரன் றன்னையு
மொத்த வீதி யுடன்வலஞ் செய்தனர். (64)

முன்னு மெங்கண் மதுரவாய்த் தேன்மொழி
யன்னை தன்னை யயிராப தேசனைத்
தென்னு லாவு சிவகங்கை நீரினு
லன்ன வாறன் றபிடேகஞ் செய்துபின். (65)

அயனு மாலு மறியாத தாளிணை
வியல நின்ற விசாகத் தினத்திலே
புயலே யூரும் புரந்தர னுதியா
மயிலில் வானவர் வாழ்த்தி வணங்கினர். (66)

இந்த வாறினி தீரைந்து நாளினு
மந்த மில்லவ னன்பர் திருவிழா
விந்த மாம்வகை மேன்மே னடத்தியே
யிந்தி ரன்வந் திறைஞ்சினின் றேத்தினன். (67)

அன்ன மேன்மை யயிரா பதமெங்கள்
கன்னி பாகன் கழலிணை வாழ்த்தியே

முன்னு நந்தன் முனியுத் துரோகங்கள்
பின்னர்ப் போம்படி பேரின்பம் பெற்றதே. (68)

இத்த லத்தி லிமையவர் தாபதர்
சுத்த யோகிக ளேயவர் சித்தர்கள்
பத்தி செய்து பயில்கந் தருவர்கள்
மொய்த்து நின்று முதல்வனை வாழ்த்தினர். (69)

பேரு லாவு பிரதக் கணமிங்கு
மேரு வில்லி விசிட்டமென் றோதினன்
சேரு மைந்து திருமதிள் சூழ்ந்தவ
ராரு மெங்க ளரன்பதஞ் சேர்வரே. (70)

பெய்யு மன்பிற் பிரதக் கணமொன்றே
வைய மேழும் வலம்வந்த தொக்குமாற்
றய்ய மேருவைச் சூழ்ந்தது மொக்குமென்
றைய மின்றி யறைந்தனன் சூதனே. (71)

விண்டு சோதி விளங்குங் கயிலையி
லண்டர் போற்று மழுதலிங் கந்தனைக்
கொண்டு வந்திக் குவலயம் வாழ்வித்த
மண்டு மும்மத வேழத்தை வாழ்த்தினர். (72)

அந்தி வேளை யழுதலிங் கந்தனை
வந்து போற்றுவர் வானவர் யாவரு
மிந்த வேளை யெதிர்நின் றிறைஞ்சினுற்
சிந்தை யன்பிற் சிவலோகங் கிட்டுமே. (73)

என்ன பாவ மியற்றின ராயினு
மன்ன மேன்மை யழுதேசன் றன்னையே
முன்னர் நின்றுநன் மோனத் திறைஞ்சினோர்
பன்னு மெங்கள் பரனுரு வாவரே. (74)

அம்ப லங்க ளறுபத்து நாலுமி
யும்பர் காண வுயர்ந்தோ ணிருத்தமாஞ்

செம்பொ னம்பலஞ் சேர்ந்தினி தாடிய
வெம்பி ரானுக் கிதுமணி யம்பலம். (75)

பொன்னும் வெள்ளியும் பொற்புறு மம்பல
முன்னி நின்று முனிவர்கள் காணவே
மன்னு மெங்கண் மணியம்ப லத்துழி
யன்னை பாக னருநடங் காட்டினன். (76)

வேதம் வல்லவி யாதன் கவுசிக
ளுதி ஞானத் தருண்முனிக் காசிபன்
காதல் கூருங் கௌதமன் ரோமச
னேத நீங்க விலகுபோ தாயனன். (77)

தரணி வாழத் தவங்கூ ரகத்தியன்
விரவ நல்லருண் மேவும் புலத்தியன்
பரவ மேன்மை படைக்குஞ் சனகனே
திரம தாகச் செழிப்புறுங் கார்க்கியன். (78)

சூனற்கு மாரன் றவம்வல்ல மாண்டவன்
சினத்தை நீக்கித் திகழ்வைசம் பாயனன்
கனத்த வேணிக் கருணைகூர் கில்லிய
னனைத்த குஞ்சொ லிருடியர் மேயினார். (79)

சித்தர் கின்னரர் தேவிமி யக்கரே
புத்தி கூரும் புகழ்க்கந் தருவரே
யொத்த மேன்மை யுளவித்தி யாதரர்
பத்தி மேவும் படிபல ரெய்தினார். (80)

பருதி யாகிய பன்னிரு வோருடன்
வருணன் பொற்கலை வாகனன் செல்வமே
திரம தாகச் செழிக்குந் தனதனும்
பரவு ருத்திரர் பல்கணத் தோருமே. (81)

மற்று முள்ளவர் வானவர் தாபதர்
சுற்றுஞ் நின்று துதித்துப் பணிமலர்

முற்று மாக முறைமுறை தூர்ப்பவே
பொற்றை நல்லுருப் பூதருஞ் சூழ்தர. (82)

நந்தி யோர்புற நான்முக னோர்புறம்
வந்து * நின்றயன் மத்தளந் தாக்கவே
சிந்தை கூருந் திருமாலு மம்மையு
முந்து தாள முறைமுறை பற்றவே. (83)

நயந்து கின்னரர் நாரதன் றும்புரு
வியந்து நல்லிசை வீணையிற் பாடவே
யுயர்ந்த மேன்மை யுளமிது னத்திங்க
ளியைந்த பூரணை யென்னுநன் னாளிலே. (84)

நீடு தொண்டர் நிறைந்தெதிர் போற்றமா
றேடுஞ் சோதி திருநடங் காட்டினான்
பீடு மேவிய பேரின்ப ஞானமே
கூடி னார்மெய்யிற் கூர்புள கத்தினார். (85)

ஈண்ட வேநட மெய்துமித் திங்களிற்
றூண்ட வேசன் சரணம் பணிவரேற்
பூண்ட பாவங்கள் போய்ச்சிவ லோகத்தில்
வேண்டும் வேண்டும் வியன்பதஞ் சேர்வரே. (86)

கண்டு கண்டு கடவு ணடமெலாம்
புண்ட ரீக னெனவொரு புங்கவன்
மண்டு மன்புடன் மாதவர் யாரையு
முண்ட ரோவென வோருரை கூறினான். (87)

பூதம் யாவும் புணர்த்திய வேதனு
மாது மார்ப மருவிய மாயனு
மாதி நாளி லடிமுடி தேடிய
சோதி வந்தெந்தத் தொண்டருங் காணவே. (88)

---

* நின்றதிர் மத்தளம் என்றும் பாடம்.

திருத்த குந்திருச் சிற்றம்ப லத்துழி
நிருத்தங் காட்டியு நீங்கரு மன்பிறு
லருத்தி கூர்நட மங்கங்கும் போற்றியே
வருத்தந் தீர்ந்து வரம்பெற வெண்ணியே. (89)

சிவன் விரும்பித் திருவருள் கூர்ந்தினி
தெவரு முய்ய விமையவர் வாழ்த்தவே
யவனி மீதி லறுபத்து நாலுழித்
தவம தாகுஞ் சபைக்கே நடித்தனன். (90)

மணியி னம்பலம் வானுறச் செய்துபாம்
பணியு மெந்தை யருணடங் காட்டலாற்
பணியும் பேர்தம் பவக்கடன் முற்றவுந்
தணியு மெம்பரன் சாரூபங் கிட்டுமே. (91)

தமது நேயங் தருங்கொழுந் தீசரு
மமுத லிங்க மயிராப தேசரு
மெமது நெஞ்சத் திலங்கிந்தி ரேசரும்
விமல மாகும் விசுவகன் மேசரும். (92)

தரும மாகத் தருமரம் பேசரு
முருவ மேன்மை யுளபஞ்ச மூர்த்தியு
மருவு மிந்த வளநக ரொப்பெனத்
திருவு லாவுமெத் தேயத்து மில்லையே. (93)

இந்த வாறென் றிசைத்தலு மாதவன்
சந்த மாதவர் தம்மொடுங் கூடியே
நந்து மேவு நவதீர்த்தந் தோய்ந்துபி
னந்த மில்லவற் கன்புறப் போற்றியே. (94)

பலனு லாவிய பஞ்சக்கு ரோசமும்
வலம தாய்வந்து வான்கொழுந் தேசனைத்
தலனு றும்படி தாழ்ந்து வணங்கிப்பி
னிலகு மாமணி யம்பலத் தெய்தியே. (95)

சங்க ராதற் பராதையல் வாழ்திருப்
பங்க ராபர மாபிதூ மப்பிரான்
கங்க ராவெண் கயிலைச் சினகரா
பொங்க ராவணிப் புண்ணிய மூர்த்தியே. (96)

நாத னேமுது நான்மறை போற்றிய
பாத னேதொண்டர் பண்புகண் டன்புசெய்
நீத னேநிதி யேநிறை நாவலன்
றாத னேதொடை சூழ்சடை யாயென. (97)

கந்த ரத்தனைக் கற்கியொப் பாய்க்கொரு
கந்த ரத்தனைக் காப்போனை வெவ்விடக்
கந்த ரத்தனைக் காண்டிடபந் தோளிலங்
கந்த ரத்தனைக் காட்டுங் கடவுளை. (98)

தான நாகந் தரத்திரு மேனிமீ
தான நாகச் சருமனை வீறுசந்
தான நாகத் தவர்க டொழத்திருந்
தான நாகச் சவுந்தரன் றன்னையே. (99)

அண்ண றன்னை யயிராப தேசனை
வண்ண மாதர் வந்தெதி ரிவ்வகை
தண்ணு லாவு சதுர்மறை நூலினு
லெண்ணணி வாழ்த்தி யிறைஞ்சி யின்புற்றனர். (100)

மெய்த ருந்தவ மேவுஞ் சமீவனம்
பொய்த காதின்று போற்றிப் புகழ்வரேற்
கைத வங்கள் கடந்து கருணைபெற்
றெய்து வார்க ளிருஞ்சிவ லோகமே. (101)

தும்பி கோட்டிற் றொடுநெடு வாவியை
யும்ப ரேசிவ தீர்த்தமென் றோதினார்
தம்ப மாமத் தடத்தெவர் மூழ்கினு
மெம்பி ரான்கயி லாயத் திருத்துமே. (102)

கருட வாகனன் காண்பறி யான்முகில்
வருமெங் கோயின் மதிலுக்குத் தென்புறம்
புருட ராகத்திற் பொற்புறு லிங்கமொன்
றருட ரும்படி யாங்கமைத் தாளரோ. (103)

தூய செங்கையிற் றொட்டன ளர்த்தமொன்
றூய லிங்க மரம்பேச னென்னவு
மேய நீரரம் பாதீர்த்த மென்னவு
நேய மாம்பெயர் நின்றது பூவின்மேல் (104)

போற்றி ளுள்சிவ பூசைபண் ணுமகிழ்ந்
தாற்றி னுள்பெரி தைந்தெழுத் துண்மையைத்
தேற்றி னுடவுஞ் செய்தாள் சிலபகன்
மாற்றி லாவரம் வள்ளலு நல்கினன். (105)

கொற்ற மேவியி ராவதங் கோடிமாப்
பெற்ற மொய்ம்பினைப் பெற்றது பெற்றியாற்
சுற்றி நின்ற துரோகமு நீத்தது
முற்ற ரம்பை முனிசாபந் தீர்ந்ததே. (106)

வசையில் கார்த்திகை மாதத்து ரோணியில்
விசைய மாமந்தி வேளையி னெஞ்சிலன்
பிசைய வேயரம் பேசனைப் போற்றினு
லசுவ மேதமோ ராயிர மொக்குமே. (107)

செய்க ளுஞ்சிவ தீர்த்தத்துக் கார்த்திகை
யாய திங்களி லாதித்த வாரநாட்
டோய வேமெய்யிற் றோன்றும் பிணிகள் போம்
தீய பாவமுந் தேய்ந்தறுந் திண்ணமே. (108)

புவன முய்ய வருமிப் புரத்திடைச்
சிவனை யையனைத் தெய்வக் கொழுந்தினைப்
பவன மன்னப் பகரு மரம்பையுங்
கவினும் வேந்தனுங் கைதொழு தேத்தியே. (109)

நின்று நின்று நினைந்திந்த வூர்வர
வென்று கிட்டு மெனைவிடை பெற்றுயர்
வென்றி வாரண மேற்கொண்டு பொன்னகர்
 சென்றி டத்திருப் பூமழை சிந்தினர். (110)

மலரும் புட்ப மழைபல பெய்தலால்
நலரும் புட்ப நகரியென் றேபெயர்
பலக ணத்தவர் பாராட்டப பெற்றதாங்
கொலரும் பாவ முரைக்கினும போக்குமே (111)

ஆதி யாங்கணப் பாதியப் பாதியிற்
பாதி தாளிப் பதியிடை வைகினன்
மாது பாகன் வளர்சிவ லோகமே
யேது வாக விருப்பமொர் நாளுமே. (112)

பிரம தீர்த்தம பெருஞ்சிவ தீர்த்தமே
விரவு மிந்திர தீர்த்தம் விபுதரோ
பரவு வெணசுதைக் கூபம் பலபலஞ்
சரத மாகத் தருஞ்சிவ கஙகையே. (113)

† திகழ்ந்த மண்டையின் றீர்த்தம்பொற் செங்கையா
லகழ்ந்த வல்லி யரம்பைதன் றீர்த்தநா
மகிழ்ந்து வாழ்த்த வருஞ்சத்த தீர்த்தமும்
புகழ்ந்து கூறமெய்ப பொற்பதங் கூடுமே. (114)

சத்த தீர்த்தமு மூழ்கித் தடம்புனல்
வைத்த செஞ்சடை வானவன் றாளிணைப

---

* சென்று புக்கனர் தேவ ரெதிர்கொள என்றும் பாடம்.

† திகழ்ந்த நாகத்தின் றீர்த்த மகத்திய
ரகழ்ந் தழைத்த நதிமுதற தீர்த்தங்கண்
மகிழ்ந்து வாழ்த்த வருஞ்சத்த தீர்த்தமும்
புகழ்ந்து கூறமெய்ப பொற்பதங் கிட்டுமே. என்றும் பாடம்.

பத்த ராகிப் பணிந்த னரேற்சிவ
முத்த ராகுவர் மும்முறை யாணையே. (115)

நிரதி னைந்திந்திர சேனனென் பானவன்
பிரம ராக்கது போகும் பலபல
வரம ளித்ததிவ் வான்பதி மற்றிந்தப்
புரநி னைக்கினும் போஞ்செய்த பாதகம் (116)

பில்லி சூனியம் பேய்பிரே தஞ்சமர்
வல்ல*பூதம் வலிநோய் முயலக
னல்ல தாங்குட்ட மாதிப் பிணியெலாஞ்
செல்லு மேசத்த தீர்த்தத்தை நோக்கினும். (117)

இந்த வாறென் றிசைத்தலுஞ் சூதனை
யந்த ணாள ரனைவரும் போற்றியே
பந்த மாயப் புவக்கட னீந்தினோம்
வந்த தாற்பெரு வாழ்வென வாழ்த்தினார். (118)

நஞ்ச மார்ந்து நமைப்புல வோர்களை
யஞ்ச றீர்த்த வரன்றிரு மான்மிய
நெஞ்ச மார நிகழ்த்திய நீயலாற்
றஞ்ச மாரிந்தத் தாபதர் யார்க்குமே. (119)

ஆன தாலின்ன மன்புவைத் திந்திர
சேன னெஞ்சந் தியக்கிய ராக்கதம்
போன காதை புகலுதி யென்னலு
மூன நீங்க வுரைத்தனன் சூதனே. (120)

ஒருகாலத்திலே இந்திர சபையில் அரம்பை, திலோத்தமை, மேனகை, உருப்பசி, கெற்பை, சுகேசி, பரிமளை என்னும் மாதர்கள் நட்னம் புரிந்தார்கள். இவர்களுள் அரம்பை களைத்துச் சோர்ந்துவிழுந்தனள். வாயுபகவான் அரம்பையின் ஆடையைக் குலைத்தனன். அச்சமயம் அம்மார்க்கம் வைகுந்தம் போகவந்த நாரதர் அரம்பை ஆடைகுலைந்து கிடப்பதைக் கண்டு, சிவ சிவவென்று கண்களை மூடிக்கொண்டு,

நீ பூலோகத்தில் வசிக்கக்கடவை யென்று சாபங்கொடுத்தார். உடனே அரம்பை யெழுந்து வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு, நாரதருடைய திருவடிகளில் வணங்கி என்னுடைய மதிமயக்கத்தினால் நேர்ந்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள். நாரதர் அரம்பையின் குற்றமன்றென் றுணர்ந்து, நீ சில காலம் சிவபெருமானைப் பூசனை புரிந்துகொண்டிருந்து, இவ்வுலகம் வரக்கடவை யென்று பிரதி சாபங் கொடுத்து, வைகுந்த ஞ்சென்றார். அரம்பை பூலோகம் வந்து, பாலீ நதிக்கரையில் விளங்காநின்ற பாடலமாநகரில் பாடலநாதனைப் பூசனை புரிந்து தவம் பண்ணிக்கொண்டிருந்தாள். இங்ஙனமிருக்கு நாளில் இந்திரசபையில் முற்கூறிய மாதர்கள் நடனம் புரிந்தார்கள். இந்திரன் அந்நாடகம் பார்க்குங்கால் அரம்பையைக் காணாமையால் எங்கேயெனக் கேட்டு, நிகழ்ந்தனவுணர்ந்து, கந்தருவருளொருவனாகிய சித்திரசேனனைக் கூப்பிட்டு அரம்பையை அழைத்துவா வென்றான். சித்திரசேனன் பாடலமாநகர் சென்று, அரம்பையைக் கண்டு நின்னைத்தேவேந்திரன் அழைத்துவரச் சொன்னானென்றான். அரம்பை பரமபதி யிடபவாகனத்தின்மீது பார்வதி சமேதராய்த் தோன்றி வரந்தந்தாலன்றித் தேவலோகத்திற்கு வரமாட்டேன் போ வென்றாள். சித்திரசேனன் இந்திரனிடம் போய்த் தெரிவித்தான். அரம்பை பாடலேசனைப் பூசனை புரிந்து பலவிதத் தவங்களை முடித்தும் பரமபதி தோன்றி யருளாமையால், உரோமச முனிவர் வனஞ்சென்று அவருடைய திருவடிகளில் வணங்கினாள். உரோமச முனிவர் அரம்பையை ஆசீர்வதித்து நீ இங்கு வந்த காரணம் யாதென்றார். அரம்பை யான் பாலி நதிக் கரையில் பாடலநாதனைப் பலநாள் பூசனை புரிந்து தவம் பண்ணினேன், அப்பெருமான் வந்து வரந் தந்திலர். யாது காரணமென்றாள். உரோமச முனிவர் வன்னிவன மென்றொரு தலமுண்டு, அஃது பிரமன் பூசித்து வரம் பெற்றது. இந்திரன் பிரமஹத்தி தீர்த்தது, நீ அங்கு சென்று கொழுந்தீசனைப் பூசிப்பையாகில் அப்பெருமான் வந்து வேண்டுவன கொடுப்பரென்றார். அரம்பை வன்னிவனஞ் சென்று கொழுந்தீசனைப் பூசனை புரிந்துகொண்டிருந்தாள். அந் நாளில் இந்திரன் அரம்பையைத் தூக்கிக்கொண்டு வரும்படி வெள்

ளானையை அனுப்பினன். அந்த யானை வன்னிவனம் வந்து அரம்பையைக் கண்டு நின்னை இந்திரன் அழைத்துவரச் சொன்னனென்றது. அரம்பை கைலாசபதி வந்து வரந்தாலனறித் தேவலோகத்திற்கு வருதலில்லை யென்றாள். அயிராவதம் அவளைத் தூக்கிக்கொண்டு போகக் கருதி தும்பிக்கையாற் சுற்றிப் பிடித்தது. அரம்பை பயந்து சிவலிங்கப்பெருமானைக் கட்டிப் பிடித்தாள். யானை பலாத்காரமாயிழுத்தது. அவள் சிவலிங்கப் பெருமானை விடவேயில்லை. அயிராவதம் சிவலிங்கப் பெருமானோடு அரம்பையைத் தூக்கிக்கொண்டு போக எண்ணங்கொண்டு தன் கோட்டாற் சிவலிங்கப் பெருமானைக் கல்லிப் பிடிக்கையில் சிவபெருமானுடைய ஆணையினால் அயிராவதஞ் சின்னபின்னமாகி மண்டையோரிடத்திலும், கொம்போரிடத்திலும் மணியோரிடத்திலுமாகப் பலவிடங்களில் விழுந்து உதிரம் பொழிந்து கொண்டு கிடந்தது. இவற்றைப் பார்த்த நாரதர் இந்திரனிடம் போய்த் தெரிவித்து,நீ சமீவனஞ் சென்று சிவபெருமானருள் பெற்று அயிராவதத்தையும் அரம்பையையு மழைத்துக்கொண்டு வாவென்றார். இந்திரன் சமீவனம் வந்து சிவபெருமானை வணங்கித் தோத்திரம் பண்ணினன். பரமபதி தேவியாரோடு இடப வாகனத்திலும், சண்முகக்கடவுள் வள்ளி தெய்வானை சமேதராய் மயில் வாகனத்திலும், விநாயகர் மூஷிக வாகனத்திலுந் தோன்றினார்கள். இந்திரனும் அரம்பையும் பன்முறை பணிந்தெழுந்து துதித்தார்கள். அயிராவதம் உயிர்பெற்றெழுந்து துதிசெய்தது. அயிராவதத்தின் மண்டை விழுந்தவிடம் ஒரு தீர்த்தமாகி மண்டைத் தீர்த்தமெனப் பெயர் பெற்றும், அயிராவதம் கோட்டாற் கல்லியதால் ஒரு தீர்த்தமுண்டாகி நாகதீர்த்தமெனப் பெயர் பெற்றும் விளங்குகின்றன. அயிராவதம் பரமபதியைப் போற்றியதால் அயிராபதேச்சுரமென வொருபெயரும், அயிராவதங் கோட்டாற் கல்லியதால் கோட்டூரென வொரு பெயரும் அத்தலத்திற் குண்டாயின. யானையின் மணிவிழுந்த தானம் மணியம்பல மென்னுமொரு தலமாயிற்று. சிவபெருமான் அயிராவதத்தைப் பார்த்து உன்னுடைய மணிவிழுந்த தானத்தில் நாம் உமையவளோடு எந்நாளுமிருப்போம், அந்தத் தானத்தில் எம்மைப்

பூசை செய்யென்றார். அயிராவதம் திருக்கயிலை சென்று அமுதலிங்க மென்னும் ஓர் சிவலிங்கங் கொணர்ந்து, மணிவிழுந்த தானத்தில் பிரதிட்டை செய்து, பூசித்தது. அயிராவதம் பூசித்ததால் அப்பெருமானுக்கு அயிராபதேசுவரர், நாகநாதேசுவரர் என்னுந் திருநாமங்களுண்டாயின. பின்பு அயிராவதம் ஓர் தடாகந் தோண்டிற்று. அதிற் சிவபெருமான் தன்னுடைய சடையிலிருந்த கங்கையைப் பெய்தார். அங்ஙனம் அயிராவதந் தோண்டியதால் நாகதீர்த்தமெனவும், சிவபெருமான் கங்கையைப் பொழிந்ததால் சிவகங்கை யெனவும் பெயர் பெற்றது; அத்தீர்த்தம் புசிக்கத்தகாவிடத்தில் புசித்த பாவம், மாதரைக் கற்பழித்தபாவம், கோயிற்பொருளைக் கொள்ளை யிட்டபாவம், தெய்வப் புராணம் பழித்த பாவம், கொலைசெய்த பாவம், அன்னமிடாதிருந்த பாவம் முதலிய பாவங்களையெல்லாம் போக்கும். கார்த்திகை மாசம் பவுரணையில் சிவகெங்கையில் மூழ்கினுல் ஆயிரந்தடவை கங்காநதிக்குப் போய் மூழ்கிய பலனுண்டாம். அரம்பையும் இந்திரனும் அயிராபதேசனை அநேககாலம் பூசைசெய்துகொண்டிருந்தனர். இந்திரன் திருவிழாச் செய்யக் கருதி வைகாசி மாசம் புனர்பூச நக்ஷத்திரத்திலே துவஜாரோகணமும், அஸ்த நக்ஷத்திரத்திலே மஹாரதா ரோகணமும், விசாக நக்ஷத்திரத்திலே சிவகங்கை தீர்த்தோத்ஸவமுமாகப் பத்துநாள் பிரமோத்ஸவஞ் செய்து வணங்கினுன். அயிராவதஞ் சிவபெருமானை வணங்கித் தான் செய்த துரோகங்கள் நீங்கிப் பேரின்பம் பெற்றது இமையவர், தாபதர், யோகியர், சித்தர், கந்தருவர் முதலியோர்கள் பரமபதியை வணங்கி வாழ்த்தினுர்கள். இத்தலத்தை வலம் வந்தால் ஏழுலகத்தையும், மேருமலையையும் வலம் வந்த பலனுண்டாம். அந்தி வேளையில் தேவர்கள் வந்து அயிராவதங் கயிலையிலிருந்து கொணர்ந்து பூசித்த அமுதலிங்கேசனை வணங்குவா; அவ்வேளையில் அப்பெருமானை வணங்குவோர் சிவலோகமடைவர்.

ஸ்ரீ சிவபெருமான் திருநடனங் காட்டியருளிய திருவம்பலங்கள் அறுபத்து நான்கு. அவற்றுள் இத்தலத்திலுள்ள (திருக்கீழ்க்கோட்டூர்) மணியம்பலமு மொன்றும். இவ்வம்பலத்துள் வியாதர், கௌசிகர் காசிபர், கௌதமர், ரோமசர், போதாயனர், அகத்தியர், புலத்தியர்

சனகர், கார்க்கியர், சனற்குமாரர், மாண்டவர், வைசம்பாயனர், கில்லி யர் முதலிய மகருஷிகள் தரிசித்துப் பேரானந்தமடையவும்; சித்தர், கின்னரர், இயக்கர், கந்தருவர், வித்தியாதரர் முதலியவர்கள் வாழ்த்தி வணங்கவும்; பன்னிரு சூரியர், வருணன், வாயு, குபேரன், உருத் திரகணங்கள், மற்றுள்ள வானவர், தாபதர் முதலியோர்கள் புஷ்ப மாரி சிந்தவும்; பூதகணங்கள் சூழ்ந்து நின்று துதிக்கவும்; நந்தி தேவர் ஒரு புறத்திலும், பிரமதேவர் ஒரு புறத்திலும் நின்று மத்தள மடிக்கவும்; விஷ்ணும், அம்மையும் முறைமுறை தாளம் போடவும்; தும்புருநாரதர் யாழ் மீட்டவும்; ஆனிமாசம் பூரணையில் சபாநாயகர் தாண்டவஞ் செய்தருளினர். அங்கு நின்ற யாவரும் பேரின்பக் கடலில் மூழ்கினர்கள். ஆனிமாசம் பவுரணையில் சபாநாயகரைத் தரிசிப்போர் விரும்பிய பேற்றை யடைவர். பரமபதி திருத்தொண்டர்கள் காண, திருச்சிற்றம்பலத்துள் திருநடங் காட்டியும் நீங்காத அன்பினல், ஆங்காங்கு தொண்டர்கள் தரிசித்துய்யும்பொருட்டு திருவருள்சுரந்து, அறுபத்துநான்கு சபைகளில் நடித்தருளினர். அவற்றுள் இம்மணி யம்பலத்தைத் தரிசிப்போர் சாரூப பதமடைவர். கொழுந்தீசுவரர், அயிராபதேசுவரர், இந்திரேசுவரர், விசுவகன்மேசுவரர், அரம்பேசு வரர் இப்பஞ்ச மூர்த்திகளும் விளங்காநின்ற இத்தலத்திற் கொப்பான தலம் எத்தேயத்திலு மில்லையென்று சூதமுனிவர் சொல்லியருளலும்,

சவுனகாதி முனிவர்கள் சூதமுனிவரோடு சமீவன மடைந்து ஒன்பது தீர்த்தங்களிலும் மூழ்கிப் பரமபதியை வணங்கிப் பஞ்ச குரோசம் வலம்வந்து கொழுந்தீசுவரப்பெருமானை வணங்கித் துதித்து, மணியம்பலஞ்சென்று சபாநாயகரையும் அயிராபதேசரையும் வணங் கிப் பலவிதமாகத் தோத்திரஞ் செய்தார்கள்.

பின்பு சூதமுனிவர் சவுனகாதியரைப் பார்த்துச் சொல்கின்றார். இச்சமீவனத்தைத் தரிசிப்போர் சிவலோகமடைவர். அயிராவதம் கோட்டாற் கல்லிய வாவியைத் தேவர்கள் சிவதீர்த்தமென்று கூறி னர்கள்; அதனல் அத்தீர்த்தத்துக்குச் சிவதீர்த்தமென்று பெயருண் டாயிற்று; அதில் மூழ்குவோர் கயிலாயமடைவர். அரம்பை ஆலயத் தின் தெற்கில் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதன் கரையில் புருடாகத்தி

ஞல் சிவலிங்கத் திருவுருவம் அமைத்துப் பூசித்தனள்; அத்தீர்த்தம் அரம்பாதீர்த்தம் எனவும், அவ்விலிங்கம் அரம்பேசனெனவும் பெயர்பெற்று விளங்குகின்றன. அரம்பை அவ்விலிங்கத்தைப் பல நாள் பூசைசெய்து, பஞ்சாக்கராஞ்செபித்துத் தவம்பண்ணினள்; அப்பெருமான் அவளுக்கு வேண்டிய வரமளித்து நாரதர் கொடுத்த சாபத்தை நீக்கியருளினர். அயிராவதம் கொழுந்தீசப் பெருமானைக் கோட்டாற் கல்லித் தும்பிக்கையாற் சுற்றிப் பிடுங்கின துரோகந் தொலைந்தது. கார்த்திகை மாசம் உரோகணி நக்ஷத்திரத்தில் சாயங்கால வேளையில் அரம்பேசனை வணங்கிஞல் ஆயிரம் அசுவமேதப் பலனுண்டாம். கார்த்திகை மாசம் ஞாயிற்றுக்கிழமையில் சிவதீர்த்தத்தில் மூழ்கிஞல் சர்வநோய்களும் சகல பாவங்களும் நீங்கும். இந்திரனும் அரம்பையும் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, அயிராவதத்தின்மேல் தேவலோகஞ் சென்றூர்கள். இந்திரன் கோட்டூரைவிட்டு நீங்குங்காலத்தில் தேவர்கள் பூமழைபொழிந்தமையால் அத்தலத்திற்குப் புஷ்பநகர் என்று ஒரு பெயருண்டாயிற்று. கால்விநாடிநேரம் இத்தலத்தில் தங்கிஞலும், சிவலோகமடைவர். பிரமதீர்த்தம், சிவதீர்த்தம், இந்திரதீர்த்தம், அமுதகூபம், சிவகங்கை, மண்டைத்தீர்த்தம், அரம்பாதீர்த்தம் இச்சத்த தீர்த்தங்களிலும் மூழ்கிச் சிவபெருமானைப் பணிவோர் முத்தியடைவர். இஃது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம். இந்திரசேனனென்னு மரசன் இங்கு வந்து பிரமராக்கது நீங்கப்பெற்றுன். இத்தலத்தை நினைப்போரும் முத்தியடைவர். முற்கூறிய சத்த தீர்த்தத்தையும் பார்த்தவுடன் பில்லி, சூனியம், பேய், பிரேதம், பூதம், முயலகன், குட்டம், முதலிய யாவும் நீங்கும் என்று சூதமுனிவர் சொல்லலும் சவுனகாதியர் எழுந்துசூதமுனிவரை வணங்கித் துதித்து இந்திரசேனனை வருத்திய பிரமராக்கது போன காதையைப் புகலவேண்டுமென சூதமுனிவர் சொல்கின்றூர்.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு.—வைகாசி மாசம் புனர்பூச நக்ஷத்திரத்திலே இடபக் கொடியேற்றி பத்துநாள் பிரமோத்ஸவம் செய்வது மிக்க விசேடமாம். அவற்றுள் அஸ்த நக்ஷத்திரத்திலே இரதோத்ஸவமும்; விசாக நக்ஷத்திரத்திலே சிவகங்கா தீர்த்தோத்ஸவமும் நடாத்துவது உத்தமோத்தமமாம்.

## ஆறாவது

## இந்திரசேனச் சருக்கம்

*திருச்சிற்றம்பலம்*

கோடகக் கலிப்புந் தானக் குஞ்சரத் துவைப்பு மின்னார்
பாடகத் தருகிற் சூட்டும் பரிபுரச் சிலம்புந் தெய்வ
நாடகத் தமுத வீணை நாதமு முதறி யேய்க்கு
மாடகத் தமைந்த வீதி யடர்ந்தகாம் பீலி நாட்டில். (1)

இரவிதன் குலத்து வந்த விந்திர சேன னென்னு
நரபதி மனுநூ னீதி நடத்தியே யுலகை யாண்டோ
னரனுயர் * தோழ னென்ன வலகிலா வெறுக்கை பெற்றோன்
பரவரும் புதல்வர் வெள்ளம் பவுத்திர வெள்ள முள்ளோன் (2)

தனுமுது வேத மெய்ம்மை தணப்பிலா வாயுள் வேதம்
மனுமுறை முழுதும் வல்லோன் வந்தவந் தணர்கட் கெல்லாங்
கனகமுந் துகிலுங் காசுங் கரிபரி முதலாந் தானந்
தினமினி தெனவே காம தேனுவொத் துதவுங் கையான். (3)

அறப்பொருள் கவர்ந்து வைய மளிப்பதே யலது மற்று
மறப்பொருள் கவரான் யார்க்கும் வஞ்சமு நினையான் செவ்வேல்
விறற்படை யரசர் நட்பு மிகவும்பெற் றுடையோன் யாண்டுஞ்
சிறப்பொடு வலாரி யைப்போற் றிசையெலாம் புரக்கு நாளில். (4)

வேந்தர்தம் முறைமை யெண்ணி வேட்டைமே லெழுந்து கானிற்
போந்துவெங் கடமை பன்றி புலிபிணை கலையே யாதிக்

---

* துணைவனென்ன என்றும் பாடம்.

காந்திய மிருகமெல்லாங் கலைத்துயிர் கவர்ந்து வேனி
னீந்தரும் வெயிலான் மேனி நெகிழ்ந்திளைப் பெய்தி னானல். (5)

வனமெலாந் திரிந்த தாலும் வான்வெயி லுருப்ப தாலும்
புனலுகர் வேட்கை யாலும் புரவிவிட் டிழிந்து வேந்தன்
றனதுள மயங்கி யாங்கோர் தருவின்கீழ்த் துயிலும் போதிற்
சினவிய வரைபோ னெஞ்சந் திடுக்கிடக் கனவிற் கண்டான் (6)

பிடித்ததெண் டாயு தத்தாற் பிரமராக் கதந்தா னென்று
மடித்தவெள் ளெயிற்றுப் பேழ்வாய் வழிபுகை கதுவ முன்வந்
தடித்தது நிருப னஞ்சி யாரை நீயாரை முன்ன
முடித்திடும் பகைய துண்டேன் மொழிகென முனிந்து சொன்னான் .()

அப்பொழு துரைக்குங் கூளி யவரவர் செய்த பாவ
மெப்படி யெனினும் போகா திருணர கிருத்து நீதா,
னொப்பரும் பாவஞ் செய்த துரைக்கக்கேண் மனுநூ னூஞ்
செப்பிய வகையெட் டெட்டாஞ் செனனத்தோர் நிருப னாகி. (8)

அவனிவந் தானா னாளி லடல்பெறு மகத நாட்டி
னவமிக விளங்கு செங்கோ னடத்துமோ ரரசன் றன்பால்
† நிவவிய நட்ப தாகி நெடிதமு தருந்தும் போதுந்
தவமுடன் றருமந் தானந் தம்மினு நீங்கா யாகி. (9)

இருவரா யுயிரு மொன்றா யிருந்தனை யந்த நாளின்
மருவரு மகத தேய மன்னவன் செனம நன்னாட்
பொருவருஞ் சனிவா ரத்திற் புக்கதத் தோடம் போகத்
தருநிகர் தடக்கை நீராற் றானமே நல்க வெண்ணி. (10)

சதுமறை யந்த ணாளர் தமையழைத் தவர்க்குத் தான
முதவவே முயலுங் காலை யுடனிருந் துதவா வண்ண
மதனைநீ தடுத்தா யாங்கே யறுபத்து நால்வர் தம்மை
யிதமுறை யாது பின்னு மிகழ்ந்துரைத் தனைநீ மன்னோ. (11)

† நிவர்பெரு நட்பதாகி என்றும் பாடம்.

ஆயதீ வினையிப் பால்வந் தடைந்ததிவ் வளவு நீயே
தூயநல் வினையாற் காலந் தொலைத்தனை யினிநீ யந்தத்
தீயவெவ் வினையெட் டெட்டாஞ் செனனமுந் தொடா வெம்மாற்
காயமுங் கறுத்து நொந்து கடும்பவத் தந்தந் தன்னில். (12)

நிரையமுற் றுழல்வை யென்றே நிகழ்த்திக்கண் பொறிகள் சிந்த
வரையெனப் படிவங் காட்டி வளைத்தது மன்னன் றானு
முறைமறுத் துரையான் மெய்யு முள்ளமு நடுங்கித் துன்பத்
திரையகத் தழுங்கி யாவி திகைத்தெழுந் துரைப்ப தானான். (13)

மந்திரத் துணைவர் தம்மை வம்மினென் றரச னோக்கிச்
சிந்தனைக் கனவும் பேயின் செய்கையு முரைத்து மேனி
நொந்திளைத் துரைவெவ் வேறாய் நுவறலும் வெருவி யாரும்
புந்தியுட் கலங்கிக் கோவைப் புரத்திடைக் கொண்டு புக்கார். (14)

என்னசெய் திடுவோ மென்றே யெண்ணியிவ் வவனி காக்கத்
தன்னிகர் தானே யாய சந்திர சேன னென்னு
மன்னவன் புதல்வன் றன்னை மணிமுடி சூட்டி யாரு
மன்னவ னேவல் பூண்டே யமைவர வரசு செய்தான். (15)

பெருந்துய ருழக்கச் செய்த பிரமராக் கதுதான் கோவை
யருந்துதல் புரிய வொட்டா தயனிழ லிருக்க வொட்டா
திருந்துயில் கொள்ள வொட்டா தெவரொடும் பேசி யன்பு
பொருந்துதல் செய்ய வொட்டா தலைத்துழிப் புழுங்கி மேனி. (16)

பார்த்திபன் றேவி மார்கள் பதுமநன் முகத்தார் முத்தே
கோத்தவெண் ணகையார் தெங்கின் குரும்பையங் கொங்கை நல்லார்
காத்தடு மாறி யுள்ள நடுங்கினர் நகரின் மாக்கள்
காத்தில னிவனே யென்னிற் கனல்புகக் * கடவ தென்றார். (17)

உன்மத்த னாகி நின்ற தந்தையை யுளைந்து நோக்கித்
தன்மத்தா லுலகு காத்தோன் றவறிலை † யெட்டோ டெட்டாஞ்

* கடவமென்றார் என்றும் பாடம்.

† யெட்டுமெட்டாம் என்றும் பாடம்.

சென்மத்துச் செய்த பாவஞ் செய்ததிப் பரிசே யென்றாற்
கன்மத்தைக் கடக்குஞ் செய்தி கடவுள ரிடத்து மில்லை. (18)

என்னவே யிரங்கி மூன்று விருபிறப் பாளர்க் கெல்லாஞ்
சொன்னமுந் துகிலுங் காசுஞ் சுரபியுந் தான நல்கிப்
பின்னரும் பெயரக் காணன் பெருகுபல் கிருது செய்தா
னன்னவை தனிலுந் தீர்ந்த தன்றென விடரின் மூழ்கி. (19)

அரசனே யசுவ மேதத் தகலுமென் றெண்ணி மைந்தன்
குரவரைக் கொணர்மி னென்னக் கோதமன் விசாக சன்மன்
விரவுசங் கிருதி சேந்தன் வேதபா ரகன்வி ரூபன்
திரமுறு வேத கெற்பன் சடாதரன் வாம தேவன். (20)

புனைசடை முனிவ ராய புரோகிதர் முதுநூல் வல்லா
ரனைவரும் வருத லோடு மரசன்சென் றவர்தாட் டாழ்ந்து
முனையட னிருபன் செய்தி மொழிதலு மிரங்கித் தீய
வினையிது தருமோ வென்று விளம்புவான் வேத கெற்பன். (21)

தருமமே செய்யும் வேந்தன் றானுநற் றலமும் வாய்மை
மருவிய கிருது செய்யு மறையவ ரிடமும் வன்னி
துருமமே யரசு வில்வந் துளசிதா மரைகள் வைப்பும்
பொருவிலா வேதந் தெய்வப் புராணமே படிக்கும் பாங்கும். (22)

தேடிய தேயத் துள்ள தீர்த்தமு நதியின் காறுங்
கூடிய பதியும் வார்கோட் டிரலைவாழ் கின்ற கானு
நீடிய சுயம்பு லிங்க நிலவிய வயினு நீறு
சூடிய ருத்தி ராக்கத் தொடையின ருறையு மெல்லாம். (23)

வெவ்வினை நீக்கத் தக்க வியலிட மிவையி னெல்லா
மிவ்வினை நீங்கா தென்றே யிதனைநீக் குதற்குக் கேண்மோ
பௌவமே தினியின் மேலாம் பாரத வருடந் தன்னி
லௌவிய நீக்கும் பொன்னி யதனுக்குத் தென்பா லாக. (24)

அகத்திய நதிக்குக் கீழ்பா லமுதத்தி லெழுந்த வன்னி
மிகப்படர் நிழலின் பூமேல் விரிஞ்சனுல் விளங்கி யார்க்கு

மிகத்தினும் பரத்து மின்ப மினிதரு ளிலிங்க மொ:ன்று
தசப்பெருஞ் சுடர்போல் வைகுந் தலத்துக்குக் கீழ்பா லாக. (25)

அருஞ்சிவ கங்கை யொன்றுண் டதனுக்குக் கீழ்பா லாக
விரிஞ்சனுர் பெயரி னுலே விளங்கிய தீர்த்த மொன்று
தருஞ்சிவ கதியைப் பொல்லாத் தறுகணே யெவையும் போக்கு
மிருஞ்சிலை யரச னேடு மேகுவம் வருதி யென்றான். (26)

முப்பொழு துணரத் தக்க முனிவரன் வேத கெற்ப
னிப்பரி சுரைப்பக் கேளா விருஞ்செவி குளிர்ந்தெல் லோரு
மப்பக ருனே யெண்ணி யரசனே டெழுந்திவ் வாறு
செப்பிய நெறியி னேடு சென்றனர் சிவன்கோட் டூரில். (27)

கண்டனர் கொழுந்தின் கோட்டூர் கண்குளிர்ந் தமுதை யள்ளி
யுண்டனர் போல நெஞ்ச முவந்தனர் துயர மெல்லாம்
விண்டனர் வனமே கண்டு வியந்தனர் ஞான மெய்யுட்
கொண்டனர் கொழுந்தின் கோயிற் கோபுரத் தருகு சார்ந்தார். (28)

தாயினு மினியான் வாழுஞ் சந்நிதி முன்னர்த் தாழ்ந்து
கோயிலிற் புகவொட் டாதிக் கொடுவினை யென்று வேந்தை
வாயிலி னிறுவி யந்த வரமுனி தீர்த்தந் தன்னி
லேயின புனலைச் செங்கை யிருந்தகுண் டிகையி னெண்டு. (29)

அஞ்செழுத் தோதி நன்னீ ராட்டலு மஞ்சி யாங்கே
மஞ்சினிற் கரிய வெம்பேய் மன்னனை விட்டுப் போக
வெஞ்சினப் புயங்கங் கவ்வி விடுநெடும் பருதி போன்று
னெஞ்சினிற் களிப்புக் கொண்டா னிருபன்சேய் முனிவ னேடும்.

புண்ணிய பிரம தீர்த்தப் புதுப்புனற் பரிசத் தாலே
பண்ணிய பாவ நீங்கப் பசாசுருத் தொலைந்து பொன்ஞன்
மண்ணிய மணியான் முத்தான் வயங்கிய விமான மேறி
நண்ணிய திமையா நாட்ட நயந்துமே லுலக முற்ற. (31)

அனைவரு நோக்கி நோக்கி யதிசய முற்றூர் வேந்தன்
றனையனு முனிவன் றானுஞ் சத்ததீர்த் தத்து மூழ்கி

நினைவரன் சரண தாக நீறுகண் டிகையுஞ் சாத்தி
வினைசெல வெழுத்தைந் தோதி விண்டொடுங் கோயில் புக்கார். (32)

மோனம தாக நந்தி முன்னின்று பணிந்து முக்கால்
வானள வுலாவுங் கோயில் வலம்வந்து மழைபோற் சிந்துந்
தானமா முகனைப் போற்றிச் சண்முகன் றிருத்தாள் வாழ்த்தி
ஞானநா யகியை யாவு நல்கின கொடியைத் தாயை. (33)

முதல்வியைப் பவள வாய்த்தேன் மொழியைமுன் வணங்கி மாலு
மதுமல ரவனும் போற்ற வருங்கொழுந் தீசன் முன்னின்
மதுமலர்ச் சுருதி பாடி யாடியே வணங்கி யன்பி
னிதமுறு சண்ட னீறு வெவரையுந் தொழுதார் மாதோ. (34)

மூவெழு மாத மாக முதல்வனை நோவு செய்ய
மேவிய கொடிய கூனி விடுத்துநீங் கியதெட் டெட்டா
யாவியை வருத்துஞ் சென்மத் தந்தத்தி னரகில் வீழ்த்தும்
பாவமு மகன்ற தன்பு படைத்துமன் னவனு முய்ந்தான். (35)

இந்திர சேன னென்னு மிகலுடைக் குரிசி றானுஞ்
சந்திர சேன னென்னுந் தனையனு முனியுந் தீராச்
சிந்தனை தீரச் செல்வன் றிருக்கோவில் வலமாய்ச் சூழ்ந்து
வந்தனை புரிந்து மற்றோர் மாதமங் கிருந்தார் மன்னோ. (36)

மதிபுனை கொழுந்துக் கேற்க வைகாசி விசாகந் தன்னிற்
கதலிமாப் பலாமற் றுள்ள கனிதயிர் நெய்பா றீந்தேன்
பதவிய விசையங் கூட்டிப் பரிந்தபி டேகஞ் செய்து
முதிர்பல சுகந்தஞ் சேர்த்து முழுதுஞ்சந் தனத்தாற் சாத்தி. (37)

பலபல விதங்க ளாய பண்ணியங் கருணை யன்ன
மலகிலா மதுரங் கூட்டி யமுதுசெய் வித்திவ் வாறே
நலனுற நாளு நாளு நாதனை வழிபட் டாங்கே
நிலவிய முத்த மாலை நிறையிழை பலவு நல்கி. (38)

கொடிவிடை கவரி யீந்து கோடிபொன் கொடுத்துத் தெய்வப்
படிமிசை தனக்குச் செல்லும் பதியுமைந் தளித்துக் கெற்ப

னடிதொழு தெழுந்து செம்பொ னவனுக்குங் கோடி நல்கி
முடிவிலாப் பசும்பொன் றூன முதுமறை யவர்க்கு நல்கி. (39)

சிகரமு மதிளுஞ் செம்பொற் றிருப்பணி புதுக்கிப் பூக
மகருமா வருக்கை தாழை யார்ந்தன சோலை செய்து
நகரியின் பாங்க ரெல்லா நந்தன வனமுண் டாக்கி
மகரநீர் போலத் தெய்வ வாவியுந் தூர்வை தொட்டான். (40)

அன்புட னருச்சித் தாங்கே யமர்ந்தபி னருள்பெற் றுய்ந்து
துன்பமு மகற்றி யெங்கள் சுடர்க்கொழுந் தினையும் போற்றி [தித்
முன்புபோய்ப் பவள வாய்த்தேன் மொழியையும் விடைகொண் டேத்
தன்பதி யடைந்தான் வேந்தன் றனையனு முனியுஞ் சூழ. (41)

வந்துதன் பதியிற் பின்னும் வளர்கொழுந் தீசன் றூளே
சிந்தையி லுணர்ந்து செங்கோல் செலுமுறை செலுத்திப் பன்னு
ளந்தமி லுலகை யாண்டே யதன்பின்னுஞ் சிவலோ கத்திற்
சந்தத மிமையோர் வாழ்த்தச் சாரூபம் பெற்று வாழ்ந்தான். (42)

அரசனை நலிய வந்தே யடைந்தராக் கதுதா னுய்ந்து
பரகதி புகுந்த தென்றூற் பார்த்திப னலகை நோய்போய்த்
திரமுடன் சிவலோ கத்திற் சேர்ந்ததென் வியப்ப திந்தப்
பிரமதீர்த்தத்தின் மேன்மைப் பெருமையார் பேச வல்லார் (43)

மேதினி வகுத்தோன் றீர்த்த மேன்மையை விரித்துச் சொல்வ
தேதினி யொருவன் காயத் தென்பெலா மிலிங்க மாக
வாதிநா ளளித்த தென்றே யமரரு முனிவர் தாமுந்
தீதிலா வரமே வேண்டித் தினமுமே படிவார் திண்ணம். (44)

எத்தனை யுலகிற் றீர்த்த மென்னினு மவைக ளெல்லா
முத்தியே யுதவு மிம்மை முழுப்பல னுதவும் பின்னுஞ்
சத்தியஞ் சிவலோ கத்திற் சாரூபங் கொடுக்கு மிந்த
வுத்தம தீர்த்த மென்றே யோதினன் சூதன் மாதோ (45)

சவுனகன் வினவ விந்தச் சரிதையா லுய்ந்தோ முய்ந்தோம்
பவமெலாங் கடந்தோ மென்றே பலபல முகமன் கூறி

யெவர்களு மதிக்க வென்பன் றிலிங்கமா யிருந்த காதை
புவனியி லெவரு முய்யப் புகலுதி முனிவ வென்றார். (46)

ஒருகாலத்திலே, காம்பீலி நாட்டிலே, சூரிய குலத்தரசனாகிய இந்திரசேனனென்பவ னொருவனிருந்தான். அவ்வரசன் நீதியில் மனுவையும், செல்வத்தில் குபேரனையும், புத்தியில் பிரகஸ்பதியையும், ஈகையில் காமதேனுவையும் ஒப்பானவன் ; எண்ணிறந்த புத்திர பௌத்திரர்களை யுடையவன். அவன் ஒருநாள் காட்டிற்குப் போய் வேட்டையாடிக் களைத்து ஒரு விருக்ஷத்தினடியிற் படுத்துத் தூங்கினான். அவன் கனவில் ஒரு பிரமராக்கதந் தோன்றி யவனை யடித்தது. அவன் பயந்து நீ யார் உனக்கு என்னிடத்தில் பகையிருந்தால் சொல்லென்றான். பிரமராக்கதம் நீ இதற்கு முன் அறுபத்து நான்காஞ் சனனத்தில் ஒரு அரசனாகி யுலகத்தை யாண்டனை ; அக்காலத்திலே உன்னோடு மகததேசத்தரசன் சிநேகமாயிருந்தான்; அவனுடைய சென்ம நக்ஷத்திரம் சனிவாரத்தில் வந்தது; அந்தத் தோஷம் நீங்கும்பொருட்டு அவன் வேதோத்தமர்களை வரவழைத்துத் தானங் கொடுத்தான் ; நீ அதைத் தடுத்து அறுபத்து நான்கு விப்பிரோத்தமர்களை இகழ்ந்து பேசினை ; அப்பாவமானது நீ செய்த புண்ணியத்தினால் இதுவரையில் உன்னை வந்தணுகவில்லை ;

இச்சனன முதல் அறுபத்துநான்கு சனனம்வரையில் என்னால் உன்னுடைய சரீரங்கறுத்து, கொடிய துன்பத்தை யனுபவித்து முடிவில் நிரையத்தி லுழல்வையென்று அரசனைப் பிடித்துக்கொண்டது. அவன் திடுக்கிட்டுப் பதைபதைத்தெழுந்து, துன்பசாகரத்தழுந்தி, கனவையும் பேயின் செய்கையையும் மந்திரிகளிடந் தெரிவித்து மூர்ச்சையாகி விழுந்து, பலவிதமாகப் புலம்பினான். மந்திரிகள் முதலிய யாவர்களும் பயந்து கலங்கி, அரசனை யழைத்துக்கொண்டு நகரஞ்சென்று அவனுடைய புத்திரனாகிய சந்திரசேனனுக்கு முடிசூட்டி யரசனாக்கினார்கள். பிரமராக்கதம் இந்திரசேனனைப் பேசவொட்டாமலும், இருக்கவொட்டாமலும், சாப்பிடவொட்டாமலும், தூங்கவொட்டாமலுந் தொந்தரவு செய்தது. அதை யவனுடைய தேவிமார்களும்,

நகரிலுள்ள ஜனங்களும் பார்த்து வருத்தமடைந்தார்கள். சந்திர சேனன் தன் தந்தையைப் பிடித்திருக்கும் பிரமராக்கது நீங்கும்பொருட்டு அன்னதானம், சுவர்ணதானம், இரத்தினதானம், கோதானம் பூதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம் முதலிய தானங்கள் யாகங்கள் செய்தும் அஃது நீங்காமையால் அசுவமேதஞ் செயக்கருதி கோதமன், விசாகசன்மன், சங்கிருதி, சேந்தன், வேதபாரகன், விரூபன், வேதகெற்பன், செடாதரன், வாமதேவன் என்னும் புரோகிதர்களை வரவழைத்து தந்தைபடுந் துன்பங்களைத் தெரிவித்தான். வேதகெற்பன் தருமசீலர்களால் பரிபாலிக்கப்படுஞ் சிவதலங்கள், யாகாதிகள் வழுவின்றிச் செய்யும் வேதப்பிராமணர்கள் வசிக்குந் தானங்கள், வன்னி கற்பகம் அரசு வில்வம் துளசி தாமரை இவைகள் பொருந்திய தானங்கள், வேதாகமபுராணங்க ளோதுந் தானங்கள், புண்ணியத்தீர்தங்கள், கலைமான் வசிக்கும் வனங்கள், நதிக்கரையிலுள்ள தலங்கள், சுயம்புலிங்கமுள்ள தலங்கள், விபூதி ருத்திராக்கமணிபவர்கள் வசிக்குந் தானங்கள், இவ்விடங்களில் சகல பாவங்களும் நீங்கும்; அங்கு நின் தந்தையைப்பற்றிய பிரமராக்கது நீங்கா. பாரத வருடத்திலே, காவிரி நதிக்குத் தெற்கிலே, அகத்திய நதிக்குக் கீழ்பால் வன்னிவனமென்றொரு வனமுண்டு அவ்வனத்தில் பிரமதேவனால் பூசிக்கப்பெற்ற கொழுந்தீசர் திருக்கோவிலின் கீழ்பால் சிவகங்கையென்று ஒரு தீர்த்தமுண்டு, அதன் கீழ்பால் பிரமதீர்த்தமென்று ஒரு தீர்த்தமிருக்கிறது, அஃது எல்லாப் பாவங்களையும் போக்கும்; நின் றந்தையோடு அங்கு போவோம் வாவென்றார். சந்திரசேனன் தந்தையை யழைத்துக் கொண்டு புரோகிதர்களோடு கோட்டூரை யடைந்து, திருக்கோவிலுக்கு வெளியில் கொழுந்தீசர் சந்நிதானத்தில் இந்திரசேனனை நிறுத்தி, பிரமதீர்த்த நீரைக் கையிலிருந்த குண்டிகையில் மொண்டுவந்து, பஞ்சாக்கரமோதி, இந்திரசேனன்மீதிற் பெய்தார்கள். அந்த நீர் பட்டவுடன் இருபத்தொரு மாதமாகத் தொந்தரவு செய்துகொண்டிருந்த, பிரமராக்கது அவனைவிட்டு நீங்கி, கரியபசாசுருத் தொலைந்து, பொன்மயமாகிய விமானத்திலேறிச் சிவலோகஞ் சென்றது. இந்திரசேனன் பரம் புண்டமிழ்ந்த சூரியனைப்போல் பிரகாசித்தான். அங்கு நின்ற யாவர்

களும் ஆச்சரியமடைந்தார்கள். இந்திரசேனன், சந்திரசேனன், வேத கெற்பன் முதலியோர்கள் தீர்த்தங்களெல்லாவற்றிலு மூழ்கி, விபூதி ருத்திராக்கமணிந்து, பஞ்சாக்கரமொழிந்து, கொழுந்தீசரை வணங்கிக் கொண்டு ஒருமாதம் அத்தலத்திலிருந்தார்கள். இங்ஙனமிருக்கு நாளில் வைகாசி மாசம் விசாக நக்ஷத்திரத்தில் பால், தயிர், நெய், தேன், சர்க் கரை என்பனவோடு வாழை, மா, பலா முதலிய கனிவர்க்கங்கள் கூட்டி யபிடேகஞ் செய்து ; குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, பச் சைக்கர்ப்பூரம், புழுகு, சவ்வாது, பன்னீர் என்பன நிறைந்த சந்தனக் குழம்பு சாத்தி ; மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன்குழல், அதி ரசம், இட்டலி முதலிய பணிகார வகைகள் சுத்தான்னம், பருப்புப் பொங்கல், சர்க்கரைப்பொங்கல், மிளகோதனம், புளியோதனம், ததி யோதனம், கடுகோதனம், எள்ளோதனம், உழுந்தோதனம் முதலிய அன்னவகைகள் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், நெய், காய்ச் சுப்பால், தேங்காய்க்கீறு, சர்க்கரை, கறியமுதுகள், பானகம், பானீ யம், வெற்றிலைபாக்கு, முகவாசம் என்பவைகள் இவைகள் வைத்து நிவேதனம் புரிந்து உபசாரஞ்செய்து வணங்கினார்கள். கொழுந்தீச ருக்கு முத்துமாலைகள், கவரி, கோடிபொன், இடபம், தன்னுட்டில் ஐந்தூர் இவை கொடுத்து ; வேதகெற்பனுக்குக் கோடி திரவியங் கொடுத்து ; மற்றப் பிராமணர்களுக்கு அளவற்ற சுவர்ண தானங் கொடுத்து ; கோபுரங்கள், மதில்கள் முதலியவற்றை புதுக்கி ; கமுகு, தெங்கு, மா, பலா, அகில் முதலிய விருக்ஷங்கள் நிறை ந்த சோலைகள் அமைத்து ; வில்வம், பாதிரி, கோங்கு, பன்னி, கொன்றை, புலிநகக்கொன்றை, பொன்னுவிரை, மந்தாரை, சண் பகம், குரா, குருந்து, மகிழ், புன்னை, சுரபுன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி, பவளமல்லிகை, வன்னி, பலாசு, மாவிலிங்கை நுணு, விளா, (முக்) கிளுவை, நெல்லி, நாவல், இலந்தை, பலா, மா, எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, குளஞ்சி, மாதுளை, நொச்சி, அகில், சந்தனம், அசோகு, வெள்ளெருக்கு, மருது, அலரி என் பனவாகிய கோட்டுப்பூ வகைகள், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக்கொன்றை, கருமுகை,

தாளி, வெற்றிலை, குருக்கத்தி என்பனவாகிய கொடிப்பூவகைகள். செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பனவாகிய நீர்ப்பூவகைகள். நந்தியாவர்த்தம், குடமல்லிகை, செம்பரத்தை, கொக்கிறகுமந்தாரை, துளசி, செங்கீரை, பட்டி, நாயுருவி, கருவூமத்தை, பொன்னூமத்தை, கத்தரி, தகரை, செவ்வந்தி, தும்பை, வெட்டிவேர், இலாமச்சை, தருப்பை, மருக்கொழுந்து, மருவு, சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, மாசிப்பச்சை, விபூதிப்பச்சை, பொற்றலைக் கையாந்தகரை, எள்ளு, பூளை, அறுகு என்பனவாகிய நிலப்பூவகைகள், பலவித வாழைகள், செவ்விளநீர், சந்திரகேளி யிளநீர், சூரியகேளி யிளநீர் இவைகள் நிறைந்த நந்தனவனங்கள் அமைத்து; தீர்த்தங்களை யெல்லாந் தார்வை யெடுத்து; தேன்மொழி யம்மையையுங் கொழுந்தீசரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு காம்பீலி நகரஞ் சென்றார்கள். இந்திரசேனன் சிலகாலஞ் செங்கோல் செலுத்திச் சந்திரசேனனுக்கு முடிசூட்டிச் சிவலோகஞ் சென்று சாரூபம் பெற்று வாழ்ந்தான். பிரமதீர்த்தத்தின் பெருமையை எவராலுஞ் சொல்லமுடியாது. இத்தீர்த்தத்தில் ஒருவனுடைய என்பு சிவலிங்கமாயிற்று. தேவர்களும் முனிவர்களும் தினம் வந்து மூழ்குவர். உலகத்திலுள்ள தீர்த்தங்கள் முத்தியை மாத்திரங் கொடுக்கும்; பிரமதீர்த்தம் அப்படி யல்ல. இம்மையில் எல்லாப் பேற்றையுமளித்து மறுமையில் சாரூப பதத்தைக் கொடுக்குமென்று சூதபுராணிகர் திருவாய் மலர்ந்தருளினார். சவுனக முனிவரெழுந்து சூதமுனிவரை வணங்கி இப்புண்ணிய சரிதையைக் கேட்டுப் புனிதமாயினோம்; என்பு இலிங்க வுருவாகிய சரிதையைச் சொல்லவேண்டுமென்றார். சூதமுனிவர் சொல்கின்றார்

திருச்சிற்றம்பலம்.

---

சாமிநாதையர் அடையாறு சென்னை-20

## ஏழாவது

## சாலிகச்சருக்கம்

*திருச்சிற்றம்பலம்*

*விதிமுறை நெறிபுரி வேத வேதிய*
*னுதவிசெய் துயிரொலா முவப்ப நண்பமைத்*
*திதமுறு சாலிக னென்னும் புங்கவன்*
*பதுமமே நிறைந்ததன் பதியை நீங்கியே.* (1)

*நீந்தரு நெடும்புன னெரும தைக்கரைப்*
*போந்துமெய்த் தவம்பல புரிந்து வைகுநா*
*ளாய்ந்துதன் றந்தையை யன்னை யைத்தொழு*
*தேந்திய மூப்பின ரிவரென் றெண்ணியே.* (2)

*வேண்டிய நல்கியே விடாது காத்தலும்*
*பூண்டெழு நல்வினை போகத்தந் தைபோய்*
*மாண்டனன் மனைவியு மாழ்கி யன்பினாற்*
*காண்டரு பதியொடு கனலிற் போயினாள்.* (3)

*தனதருந் தந்தையாந் தரும சீலனும்*
*வினவுதா யென்னுமவ் விரத சீலையுங்*
*கனலுழிப் புக்கது கண்டு சாலிகன்*
*மனமனன் மெழுகென வருந்தி னானரோ.* (4)

*செய்தில ரருந்தவஞ் சென்று நற்கதி*
*யெய்திலர் செய்வகை யேதென் றுங்கவ*
*ருய்திற மென்பினை யுவந்து கங்கையிற்*
*பெய்தன மெனில்வரும் பேறென் றெண்ணியே.* (5)

*என்பினை யொருகுடத் தெடுத்துச் சிட்டர்தா*
*மன்புட னவன்வனத் தகலுங் காலையின்*
*முன்புற நாரத முனிவந் தெய்தலும்*
*தன்பெருந் தவமெனச் சரணம் போற்றினான்.* (6)

அம்முனி நோக்கினின் நடவி நீந்தியே
யிம்முறை புகுந்தவா றேதென் றோதலுந்
தம்மனை தந்தையின் சார்ந்த சேதியும்
விம்மவில் லறமவர் விடுத்த சேதியும். (7)

'பாகதி யவர்பெறும் படிக்கின் றென்பினை
வாரதி தனிலிட வந்த செய்தியு
முரனுடைச் சாலிக னுரைப்ப யாழிசை
தாவரு முனிவரன் சாற்று வானரோ. (8)

சானவி முதலவாச் சலதி போய்ப்புகு
மானதன் னதிகளுண் டனேகந் தானவர்
வானவர் முனிவரர் வகுத்த தீர்த்தமாம்
பானலந் தடங்களே பலவு முண்டரோ. (9)

சிலதலந் தம்முழிச் சென்மித் தார்க்கெலா
நலனுடைப் பாக்கிய நல்குஞ் சிற்சில
தலனுயிர் விடுப்பரோற் றவாத வின்பமாம்
பலபல பாகதி பரிந்து நல்குமால். (10)

தேறிய தீர்த்தத்துத் தெரிச னத்தினும்
வேறுயர் பாகதி விளைக்குஞ் சிலதல
மாறிலா விவ்வகை வகுத்து மாமறை
கூறிய தலமொரு கோடி யுண்டரோ. (11)

எங்கணு முளதல மெவையுந் தீர்த்தமு
மங்கையி னெல்லிபோ லறிவம் யாவையு
முங்குமுக் காலமு முணர்ந்து கொள்வம்யாம்
பங்கமி லொருமொழி பகரக் கேட்டியால். (12)

காவிரி நதிக்குத்தென் கரையின் முத்தமிழ்
நாவலன் றிருமுனி நதிக்குக் கீழ்புறம்
பூவிரி சோலைசூழ் புட்ப நன்னக
ராவதோர் தலமெவர்க் கறியொ ணாததால். (13)

தலத்திஞற் றீர்த்தத்தாற் றருமலிங் கத்தி
னலத்திஞற் புவிதிரு ளளினன் பூசைசெய்
வலத்திஞல் வேண்டிய வரமெ லாந்தரும்
பலத்திஞ லில்லையிப் பதிக்கொப் பாகவே. (14)

பண்ணிய தவமெலாம் பலிக்கும் பான்மையாற்
கண்ணுத லுமையொடு களிக்குந் தன்மையா
லெண்ணிய விகபர மிரண்டு நல்கலா
லண்ணறன் காசியி னதிக மென்பரால். (15)

நகமயி ரென்புவா னதிநன் னீருழிப்
புகுமெனிற் றீவினை போக்கி நற்பிறப்
பிகலறப் பெற்றுவந் தீச னன்னகர்
மகிழ்வுடன் வைகியே வரைப்பிற் றுஞ்சியே. (16)

எய்துவர் கயிலையி லென்று மெம்பிரான்
* மெய்திகழ் சமீவன விரிஞ்சன் றீர்த்தத்திற்
பெய்தன ரெனிலந்தப் பிறப்பி லேதொல்லைக்
கைதவ நீங்கியே கயிலை வாழ்வரே. (17)

இத்தலப் பெருமையை யீசன் வெள்வளை
யத்தனம் புயனிவ ரறிவர் யாமத
னுத்தம மறிந்துநெஞ் சுவந்து நாடொறும்
பத்தியி லடைந்துடன் பணிந்து மீள்வமால். (18)

புதுமையொன் றின்னமும் புகலக் கேளொரு
முதியனென் பதனையே முகந்து வெம்பருந்
திதனுழி யிடுதலு மேழு நான்கெனும்
விதமுறு நரகினை விடுத்து நீங்கியே. (19)

வேதியன் மணியொளிர் விமானத் தேறியே
நாதன் வெண்கயிலையை நண்ண நாதனு

* எய்திய என்றும் பாடம்.

மாதிய கணங்களுக் கதிக நல்கின
னீதுநாங் கயிலையி லிருந்து நோக்கினேம். (20)

கொண்டுபோய் நீயுநின் குரவ ரென்பினைத்
தெண்டிரை யெறியயன் றீர்த்தத் துள்ளிடிற்
பண்டுசெய் கொடுவினை பலவு நீங்கியே
யண்டர்கோன் கயிலையி லமர்ந்து வாழ்வரே. (21)

இன்னவை பொய்மையே யென்னிற் றன்சிரம்
பின்னநூ றுமெனப் பேசி ஈசனு
மன்னவ னறியவே யாணை யாணையென்
றுன்னிநா ரதனிவை யுரைத்துப் போயினன். (22)

கூறிய வாய்மையாற் குளிர்ந்து சாலிக
னூறிய வுவகைய னுள்ள நன்றெனத்
தேறியே சமீடனுஞ் சென்று செண்பக
நாறிய சோலையு நகரு நோக்கினன். (23)

வள்ளறன் கோயிலை வணங்கி வாழ்த்திப்போய்க்
கள்ளவிழ் பொருட்டுமேற் கமலன் றீர்த்தநீர்
கொள்ளவே யருகொரு குழிதொட் டென்பினைத்
தள்ளருங் குடத்தொடத் தலத்து வைத்தலும். (24)

அத்தனை யென்புமவ் வளவை யத்தனை
யுத்தம லிங்கமா யுருக்கொண் டெய்தின
வித்தனை யதிசய மெங்கு மில்லெனும்
பத்தியி னுளங்களிப் படைந்துக் கூறுவான். (25)

முன்புவந் திவைசொலு முனிவன் வாய்மையோ
தன்புகழ் நிறுத்திய தலத்தின் மேன்மையோ
துன்புறு மயன்கரந் தோண்டுந் தூய்மையோ
† என்பொருங் கிலிங்கமா யிருந்த பெற்றியே. (26)

---

† என்பொரு விலிங்கமாங்கிருந்த என்றும் பாடம்.

ஒருத்தனை யெதிர்புகுந் துரைக்கப் பண்ணுந்தங்
கருத்தினி லாவது*காட்டு நெஞ்சினைத்
திருத்தியே திருப்பினுந் திருப்புஞ் சிந்தியா
வருத்தினும் வருத்துந்தன் மகிமையென் சொல்கேன். (27)

என்னவே கும்பத்தை யெம்பி ரான்பத
முன்னியே குழியிடை மூடிமே வினோர்
மன்னிய வரசினை வைத்துத் தந்தைதாய்க்
கந்நிலை செய்கட னனைத்து மாற்றினன். (28)

இருமுது குரவரு மெம்பி ரான்றிரு
வருளினல் விமானமீ தடைந்து நல்லொளி
தருபெருங் கயிலையைச் சார்ந்து திவ்விய
வுருவின்சா ரூபம்பெற் றுய்ந்து வாழ்ந்தனர். (29)

சாலிக னப்பதி தனிலி ருந்துடன்
சேலெதி ரெதிர்பொருந் தீர்த்த மொன்பதுங்
காலையின் மூழ்கிநங் கடவுண் மேவுநல்
லாலயம் வலம்புரிந் தருளிற் போற்றினன். (30)

## வேறு

கோண வெண்பிறைச் சடையனைச் செழுஞ்சுடர்க் கொழுந்தைத்
தாணு வைப்பங்கிற் பவளவாய்த் தேன்மொழித் தாயைக்
காணு நீலமார் கண்டனைக் கந்தனைக் களிற்றைப்
பூணு மன்பொடு பணிந்தன னெழுத்தைந்தும் புகன்று. (31)

இந்த வாறனே கம்பக லருச்சனை யியற்றி
முந்து மன்புடன் முடிக்கரும் பலமெலா முடித்துச்
சிந்தை யொன்றவே தரிசன வேதியாஞ் சிவன்பா
லந்த மாம்பதம் புகுந்துசா யுச்சிய மடைந்தான். (32)

அன்ன தாலிந்தச் சமீவனத் துக்கிணை யாமென்
றுன்ன வேயொரு தலமிலை யுபநிட மறைநூற்

பன்னு புங்கவன் றீர்த்தத்துக் கிணையெனப் பகரப்
பின்னர் வேறொரு தீர்த்தமுங் கண்டிலம் பெரிதும். (33)

இரவி நாண்மதி கதிருட னெழுந்துமேன் மேலும்
விரவு நாள்சிவ ராத்திரி கேதார விரதம்
பரவி யொன்றினின் றனுட்டித்தா ரெனினுமிப் பதிதா
னுரவி லொவ்வொன்றோர் கோடிநாட் செய்தபே றுதவும். (34)

திலமு நீருமாத் தருப்பித்துத் தாய்தந்தை தினத்திற்
குலவு வேதியர்முதலி னோர்க் கன்னமே கொடுத்தா
லலகில் வெந்நர கழுந்தினும் பிதிர்க்களங் ககன்று
புலவர் வாழ்த்தவே சிவபதத் துறைவரெப் பொழுதும். (35)

இந்த நற்புரத் திடபமே பொறித்தினி தாகச்
சிந்தை செய்துடன் விடுப்பரேற் * பிதிரர்தாந் திகழ்ந்து
வந்த மெய்ம்மயி ரொன்றினுக் கொவ்வொரு வருட
மந்த மில்லவன் புரத்திடை வாழ்வுபெற் றமர்வார். (36)

வேறு வேறொரு தலத்துழி முடிந்தவர் மெய்யி
லூறு மென்பெலா மிலிங்கமா மெனிலந்த வூரி
லீறி லின்பமுற் றிருந்துபின் முடிந்தவ ரெய்தும்
பேறு மின்பமும் பேசவே யரிதினிப் பெரிதும். (37)

முன்பு நான்மறை வியாதனார் மொழிந்தவா றிவையென்
றென்பி லிங்கமா மான்மியஞ் சூதனுங் கிசைப்பத்
தன்பெருந் தவ மிவையெனச் சவுனக முனிவ
னன்பு கூரவே கேட்பதொன் றுண்டென வமைந்தான். (38)

ஒருவ னென்பினைப் பருந்துகொண் டித்தலத் துய்ப்பத்
தரும மேவியே கயிலைவெற் பெய்திய சரிதை
வெருவு சாலிகன் றனக்கு † முன் னாரதன் விளம்பும்
பருவம் யாவையும் பகரெனச் சூதன்றான் பகர்வான். (39)

---

* பிதிர்க்கடாந் திகழ்ந்து என்றும் பாடம்.

† நாரதன் முனம் விளம்பும் என்றும் பாடம்.

சாலிகனென்னும் வேதியன் நருமதையாற்றங்கரையில் தவம் புரிந்துகொண்டிருந்தான். அவனுடைய தந்தை வயோதிகத்தினு லிறந்தான். தாயுந் தன் புருஷனோடு அக்கினிப் பிரவேசமாயினள். சாலிகன் தன்னுடைய அன்னை தந்தையர் அரிதாகிய தவஞ் செய்யா மையால் நற்கதி யடையார்களெனக் கருதி, அவர்களுடைய என்புகளை யெடுத்து ஒரு குடத்துள் வைத்து, கங்கையிற் போடக் கொண்டு போகுங்காலத்தில் எதிரே நாரதமுனிவர் வந்தார். அவன் அம்முனி வரை வணங்கினன். நாரதர் சாலிகனைப் பார்த்து நீ தவஞ்செய்வதை விட்டுவந்த காரணம் யாதென்றார். சாலிகன் தாய் தந்தையர் விண்ணுலகடைந்தமையால் அவர்களுடைய என்புகளைக் கங்கையி லிடக் கொண்டுவந்தேனென்றான். நாரதர் உலகத்தில் சமுத்திரத்தில் சங்கமமாகும் நதிகள் அநேகமுண்டு ; தேவர்களாலும், முனிவர்களாலும் உண்டாக்கிய தடாகங்கள் கணக்கில்லை. சில தலங்கள் பிறந்தோர்க்குப் பெருஞ்செல்வமளிக்கும்; சில தலங்கள் இறந்தோர்க்கு இன்பமளிக்கும்; சில தலங்கள் தீர்த்த தரிசனத்தால் முக்தியளிக்கும். இவ்வகை வேதாக மங்கள் வகுத்துக்கூறுந் தலங்கள் ஒருகோடியுண்டு. உலகிலுள்ள தலங்கள், தீர்த்தங்கள் யாவுமறிவம். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலமென்னு முக்காலங்களு முணர்வம். யாம் சொல்வதைக் கேள். காவிரிநதிக்குத் தென்கரையில், அகத்திய நதிக்குக் கீழ்பக்கம், புஷ்ப நகராகிய வன்னி வனத்தலமிருக்கின்றது. அதற்கொப்பான தலம் வேறில்லை. வேண்டிய வரமளிக்கும். காசியைப்பார்க்கினும பெருமை பொருந்தியது. நகம், மயிர், என்பு இவற்றைக் கங்கையிலிட்டால் இறந்தவர் உயர்வாகிய சென்மத்தைப்பெற்று, திவ்வியக்ஷேத்திர வாசஞ்செய்து, சிவபெருமானை வழிபட்டுக் கயிலையடைவர் ; சமீவன க்ஷேத்திரத்திலே, பிரமதீர்த்தத்திலிட்டால் அந்தப் பிறப்பிலேயே சகல பாவங்களும் நீங்கிக் கயிலாயமடைவர். இன்னொரு அதிசயமு முண்டு. அதனையுங்கேள்-ஒரு விருத்த வேதியனுடைய என்பைப் பருந்து எடுத்துவந்து, பிரமதீர்த்தத்திலிட்டது ; அவ்வேதியன் இரு பத்தெட்டுக்கோடி நரகங்களும் நீங்கி, விமானத்திலேறிக் கயிலாயஞ் சென்று, சிவகணங்களுக்கு மேலாகிய பதம் பெற்றான். இதை யாம்

கயிலாயத்திலிருந்து பார்த்தோம். உன்னுடைய அன்னைதந்தைய ரென்பைப் பிரமதீர்த்தத்திலிட்டால் அவர்கள்செய்த பாவங்கள் பலவும் நீங்கி விமானத்திலேறிக் கயிலாயமடைவர். இப்போது யாம் சொன்னவை பொய்யென்றால் சிரம் நூறுதுண்டாகும் இது சிவனரிய சத்தியம், சத்தியமென்று சொல்லிப்போயினர். சாலிகன் என்புக் குடத்தை யெடுத்துக்கொண்டு சமீவனஞ் சென்று, திருக்கோயிலை வணங்கி, பிரமதீர்த்தத்தையடைந்து, அதன் நீர் கொள்ளும்படி, அருகில் ஒருகுழி தோண்டி, அதில் என்புக்குடத்தை வைத்தான்; அவ்வென்பு அத்தீர்த்தநீர் பட்டவுடன் இலிங்கவுருவாயின; சாலிகன் அதிசயமுற்று, அக்குழியை மூடி, அதன்மேல் ஓர் அரசவிருக்ஷத்தை வைத்து, தந்தைதாய்க்கு அங்கு செய்யவேண்டிய கருமங்களைச் செய்தான். அவனுடைய அன்னைதந்தையர் சிவபெருமானுடைய திருவருளினலே, விமானத்திலேறி, திருக்கயிலைசென்று, சாரூபம் பெற்று வாழ்ந்தனர். சாலிகன் தினந்தோறுங் காலையில் ஒன்பது தீர்த்தங்களிலும் மூழ்கி, சிவபெருமானை வணங்கி, அருச்சனை செய்துகொண்டு அநேககாலமிருந்து, சாயுச்சியபத மடைந்தான். இவ்வுலகில் சமீவனத்துக்கிணையாகிய தலமும் பிரமதீர்த்தத்துக் கிணையாகிய தீர்த்தமுமில்லை. அத்தலத்தில் ஞாயிற்றுக்கிழமை விரதம், அமாவாசிவிரதம், சிவராத்திரி விரதம், கேதாரவிரதம் முதலிய விரதங்களை ஒருநாள் அனுட்டித்தாலும் கோடிநாள் அனுட்டித்த பேறுண்டாம்; பிதிர்தினத்தில் திலதருப்பணஞ்செய்து பிராமணர்களுக்கு அன்னமளித்தால் பிதிர்கள் சிவலோக மடைவார்கள். இடபத்துக்குச் சூலம் பொறித்து விடில் அந்த விடபத்தின் மயிரொன்றுக்கு ஒவ்வொரு வருடமாக பிதிர்க்கள் கயிலாசத்திலிருப்பார்கள். சமீவனத்தின் பெருமையை யொருவராலுஞ் சொல்லமுடியாதென்று சூதமுனிவர் சொன்னார். சவுனகர் வணங்கி, பருந்து ஒருவனுடைய என்பை எடுத்துவந்து பிரமதீர்த்தத்திலிட்டதினல் அவன் கயிலை யடைந்ததாக நாரதர் சாலிகனுக்குச் சொல்லிய சரிதையை எங்களுக்குச் சொல்லி யருளல் வேண்டுமென்றார். சூதர் சொல்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

# எட்டாவது

## சோமசருமச்சருக்கம்

திருச்சிற்றம்பலம்

கஞ்சமுங் கரும்புஞ் செந்நெற் காடும்வெண் கோடும் வான
மஞ்சினு ளுமிழ்ந்த முத்தும் வாரிவெண் டிரையால் வீச
வஞ்சமு மதனிற் பேடு மாழியம் புள்ளும் விண்ணோர்
நெஞ்சமு முவப்பச் சூழ்ந்து நிறைந்ததிப் பாலி நாட்டில். (1)

உற்பல மென்றே யோரூ ருண்டதிற் பனவர் தாமும்
பற்பல ராதி யந்தப் பதியிலோர் பனவன் மேலா
மிற்பெருஞ் சோம சன்மா வென்பவ னநேக காலம்
பொற்புறு மனைவி யோடு புதல்வர்நால் வருமாய் வாழ்ந்தார். (2)

அதிதியர் முகமும் பாரா னானதோர் விரத மில்லை
விதியுறு சந்தி யில்லை வேதமந் திரமு மில்லை
புதல்வருந் தானும் வாழ்வைப் பொருளென மதித்து மேலைக்
கிதமுறு தவமுஞ் செய்யா திருந்தன ரநேக காலம். (3)

வெய்யதாம் வினைதான் வந்து விளைதலுஞ் செல்வ மெல்லாம்
பொய்யென நீங்கித் தாயும் புதல்வரும் போகப் பின்ன
ரையமூர் தோறும் புக்கேற் றவண்கடந் தடவி போந்து
கையறு துயராற் சின்னாட் காய்கிழங் கிலைதுய்த் துய்ந்தான். (4)

வந்தது செல்வ மென்றான் மறுத்தினிப் போகா தென்னுஞ்
சிந்தைசெய் திருப்பர் செய்யுஞ் செய்கையு மறிந்து செய்யார்
பந்தமாஞ் செல்வம் போனாற் பதைபதைத் தன்றே யையோ
வந்தமி றருமஞ் செய்யா தழிந்தன மென்பர் மாதோ. (5)

அப்பரி சிவனு நொந்தே யடவியிற் றிரிந்தோ ரூரிற்
செப்பிய மறைகண் முற்றுந் தெளிந்தவந் தணன்பா லெய்தி
யிப்பக லருந்த வன்ன மிடுதியென் றுரைப்ப நேர்ந்தே
யொப்பிலா விமலன் பூசை யுளங்கனிந் தியற்றி னானால். (6)

தங்கிய பசியாற் சோம சன்மனு மெழுந்து வேதப்
புங்கவன் வரவு காணப் போதலும் புட்ப மேந்தி
யெங்களேம் முசுனைப் பூசை யியற்றுத லெதிரே கண்டா
னங்கவ னுடனே கூடி யத்தனை வலமுஞ் செய்தான். (7)

அருந்தின னவனே டன்ன மவண்விடுத் தகன்று கானிற்
றிரிந்தனன் பசியா லெந்து திகைத்தனன் மனம் வெவ்வேறாய்
வருந்தினன் சிலநாட் போக மற்றொரு வைகன் மேகம்
விரிந்திருள் பறந்து மின்னி வியப்புறப் பொழிந்த தன்றே. (8)

கண்டனன் ளெளிந்தே நெஞ்சங் கலங்கின னிதுவோ கெட்டேன்
பண்டினி தறஞ்செய் யாத பாவிகள் படுபா டென்றுட்
கொண்டன னுடல மெல்லாங் குறைந்தொரு மரத்தின் கீழே
யுண்டிலை யுயிரென் றன்ன வுளைந்துளைந் துறைந்தான் மன்னே. (9)

அங்கிலை யுருமு வீழ்ந் வாவியை விடுத்தான் காலர்
றன்னினர் கொடிய வேலாற் றுளைத்தரு நரகில் வீழ்த்தார்
பின்னவன் வுடலைச் செந்நாய் பெருநரி கழுகு காக
மின்னவை யிறைச்சி மாந்தி யெலும்பைவிட் டகன்ற தன்றே. (10)

ஆங்கொரு பருந்தோ ரென்பை யருந்தவே கொணர்ந்து செல்லப்
பூங்கொடி பாகன் பூசை புரிந்தது நோக்கி யன்பு
தாங்கிய பனவன் பின்னே தனிவலஞ் சன்மன் செய்த
பாங்கினு லதனை யிந்தப் பதியிடை வீழ்த்த தன்றே. (11)

பாற்றுழி யென்பு வீழப் பனவன்செய் பாவ மெல்லாம்
வீற்றுவீற் றுகப் போக்கி வீழ்ந்தவெண் ணிரையத் தேற்றி
யாற்றரும் பொன்னுன் முத்தான் மணியினுல் விளங்கும் பொற்றே
ரேற்றினர் கயிலை மீதே யிருத்தின ரிறைவன் றூதர் (12)

கிருதுகள் பலவு மாற்றிக் கிளக்குமா மறைநூ லோதி
விரதமே பலவு முற்றி வேறுள தவமுஞ் செய்து
வரமுறு தான மெல்லாம் வகுத்தளித் தவர்க்குங் கிட்டாப்
பரமன் வாழ் கயிலையாய பதம்பெற்றான் சோம சன்மன். (13)

எலும்பினைப் பருந்து வீழ்க்கு மிப்பலன் கயிலை யாய
தலம்புக வைத்த தென்ஞற் றணிச்சுடர்க் கொழுந்தின் கோயில்
வலம்புரிந் திந்த வூரின் வைகினேர் துஞ்சி லந்தப்
பலந்தனை மலர்மேல் வந்த பனவர்க்கும் பகர லாமோ (14)

எத்தலத் திருந்து மாய்ந்தோ ரெவருக்கு மிந்த வூரி
லுத்தர கிரியை செய்தா லுமையுமெம் பிரானு மெய்தித்
தத்தம தருளாற் பாவச் சலதியைக் கடந்து ஞானப்
புத்தமு தருந்தத் தங்கள் புரத்திடை வைப்பர் மாதோ. (15)

தூயதாந் தனுமா தத்திற் சுக்கில பக்கத் தாறு
நேயமாந் திதியில் விண்ணோர் நீணில வேந்தன் வேதன்
மாயவன் முதலோர் வந்து வரதனைப் பூசை செய்வா
ராயநாள் சேவித் தாரே லரன்பதத் தடைவர் திண்ணம். (16)

இப்படிச் சோம சன்மா வெய்திய பலனை யெல்லாஞ்
செப்பினன் சூதனச் சொற் செவிகளுக் கமுதம் பெய்வ
தொப்பென வினவி யாங்கே யுடனுறை முனிவ ரெல்லாந்
தப்பருந் தீர்த்த மேன்மை தனையினிப் புகறி யென்ருர். (17)

பாலி நாட்டிலே, உற்பலமென்றவூரிலே சோமசருமனென்னும் ஒரு பிராமணனிருந்தான். அவன் நிறை செல்வமும் நான்கு புதல்வர்களு முடையவன். இவன் அதிதியர் முகம்பாரான், விரத மனுட்டியான், நித்தியகருமஞ் செய்யான், வேதமோதான், மந்திரஞ் செபியான், தவம்புரியான், வாழ்வையே பொருளென மதித்தவன். வினைவயத்தால் செல்வத்தை யிழந்து, மனைவி மக்களைப் பிரிந்து, ஊரூராய்ச் சென்று, பிச்சை யெடுத்துண்டு, காட்டிற் புகுந்து, காய் கிழங்காதிகளைத் தின்று காலங்கழித்தான். இங்ஙனந் திரியுங் காலத்திலேயொருநாள் ஒரு கிராமத்திற்குப் போய், ஒரு பிராமணனைக் கண்டு, இன்றைக்கு அன்னம் போடவேண்டுமென்ருன். அப்பிராமணன் அதற்குடன்பட்டுப் போய் சிவபூசை செய்தார். சோமசருமன் பசி மிகுதியால் அவர் வரவைப் பார்க்கப் போய்ச் சிவபூசை செய்வதைப் பார்த்து, அவரோடு சிவபெருமானை வலஞ்செய்தான். பின்பு அவ

ரோடு போசனஞ் செய்துகொண்டு கானகஞ் சென்று, அங்கு சிலநாள் திரிந்தலைந்தான். ஒருநாள் வானங்கறுத்து, மின்னி மழை பொழிந்தது. சோமசருமன் அம்மழையில் நனைந்து, தேகங்குன்றி, உபாதி பட்டுக்கொண்டு, ஒரு மரத்தடியில், உயிருண்டோ இல்லையோ வென்னும் நிலைமையிலிருந்தான். அச்சமயத்தில் அவன்மேல் இடிவிழுந்தது. அவன் உயிர்துறந்து, நரகில் வீழ்ந்தான். அவனுடைய வுடலிலிருந்த மாமிசத்தை நாய், நரி, கழுகு, காகம் முதலியன பிடுங்கித் தின்றுவிட்டுப் போயின. அவன் என்புகளிலொன்றை ஒரு பருந்து தான் தின்ன வெடுத்துக்கொண்டு சென்றது. சோமசருமன் சிவ பூசை செய்த பிராமணனோடு சிவபெருமானை வலஞ்செய்த புண்ணியத்தினால், அவ்வென்பு தவறி சமீவனத்திலே, பிரமதீர்த்தத்தில் விழுந்தது. அதனால் சிவகணங்கள் வந்து, சோமசருமன் செய்த பாவங்களெல்லாம் போக்கி, அவனை நிரையத்திலிருந்து கரையேற்றி, பொன்மயமாகிய விமானத்தி லேற்றிக்கொண்டு கயிலை சென்றார்கள். சோமசருமன் யாகம், விரதம், தவம், தானம் முதலியன செய்தவர்களுக்குங் கிட்டாத பெரும்பேற்றைப் பெற்றான். இறந்தவர்களுக்கு சமீவனத்தில் உத்தரகிரியை செய்யில் அவர்கள் கயிலாசமடைவர். மார்கழி மாசம் பூர்வபக்கஞ் சஷ்டித்திதியில் விஷ்ணு, பிரமன், இந்திராதி தேவர்கள் முதலியோர் வந்து கொழுந்தீசனைப் பூசை செய்வர். அன்று தரிசிப்போர் சிவபதமடைவரென்று சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளினார். சவுனகாதியர் சூதமுனிவரை வணங்கி தீர்த்த மான்யத்தைச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். சூதமுனிவர் சொல்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

---

குறிப்பு.—மார்கழி மாசம் பூர்வபக்கஞ் சஷ்டித்திதியில் கொழுந்தீசருக்கு விதிப்படி அபிஷேகாதிகள் செய்வித்து அன்றிராத்திரி இடப வாகனத்தில் சந்திரசேகர முகூர்த்தத்தை வீதியில் எழுந்தருளப்பண்ணுவது உத்தமோத்தமமாம்.

# ஒன்பதாவது

## தீர்த்தச்சருக்கம்

திருச்சிற்றம்பலம்

ஒப்பரும் வன்னிக் கானத் தொன்பது தீர்த்த முண்டென்
றப்பரி சுரைத்த சூத னருந்தவ முனிவர் கேட்கச்
செப்புவன் றீர்த்தம் வைகுந் திசைகளு மவற்றின் பேருங்
கைப்படு|தானத் தோடு காலமும் பிறவு மெல்லாம். (1)

முனிநதி யமுத கூப முளரியோன் றீர்த்த மண்டைப்
புனல்சிவ தீர்த்தம் போகிப் பொய்கைநன் ஞாக தீர்த்தம்
வினவிய வரம்பை தீர்த்தம் விசுவகன் மன்மெய்த் தீர்த்த
மெனவினி யொன்பான் றீர்த்த மிசைப்பவர்க் கில்லை பாவம். (2)

சினகரந் தனக்குக் கீழ்பாற் சிவகங்கை யதற்குக் கீழ்பான்
மனமகிழ் பிரம தீர்த்தம் வைகுமத் தீர்த்தந் தன்னில்
வினவுமெத் தினத்தி லேனும் விளங்கிய கமலப் பூமேற்
பனவன்மெய்ம் மனுவை யோதிப் படிந்துமேல் கரையின் வைகி. (3)

பரவிய கஞ்சத் தாய பாத்திரத் தினிய பாலால்
விரவிய வடிசில் சேர்த்து மென்கனி நிறைத்து வேதத்
தூரனுடைப் பனவர்க் கீந்தா லோங்கிய பிதிர்க்கள் சூழ
வரனுறை கயிலை மீதி லவனுருப் பெற்று வாழ்வார். (4)

சிவனுறை யிடனிற் கீழ்பாற் சிவகங்கை வைகு மாங்கே
நவமிகு மாக மாத நாளொழி லைந்திற் பானு
தவமுறு முதய நேரந் தனிலுருத் திரனர் மேன்மை
நிவர்தரு மனுவை யோதி நீராடி நீரி னின்று. (5)

தவனன்மந் திரத்தி னாலே தருப்பித்துப் பின்னு மெங்கள்
சிவமனு வதனு லீசன் றிசைநோக்கித் தருப்பித் தாங்கே
மவுனமாய்க் கரையிற் சுத்த வத்திர முடுத்துத் தூய்ய
சுவணமே முதல்வெவ் வேறாய்த் தோற்றுமட் கலமீ ரூக. (6)

ஒன்றுழி யரிசி பெய்தே யுயர்ந்ததாம் பூலத் தோடு
நன்றுசெதக் கணையி னோடு ஞானவே தியருக் கீந்தாற்
றுன்றிய பாவ முற்றுந் தொலைந்துடன் சுத்த ராகித்
தென்றிசை விபுதர் போற்றச் சிவசாயுச் சியத்திற் சேர்வார். (7)

நிலவிய வெள்ளை வேழ நிருமித்த கங்கை நீரா
லிலகிய சிவகங் கைக்கே யிந்திரன் மந்தி ரத்தாற்
குலவுநீ ராடி நல்ல கோசிக தான மீந்தாற்
பலர்தொழச் சிவலோ கத்திற் பரனுருப் பெற்று வாழ்வார். (8)

சந்நிதி நிருதி மூலைச் சசிமண வாளன் கண்ட
மன்னிய வமுத கூப வயின்விருச் சிகமா தத்திற்
பன்னரும் பவுர ணைக்கட் பாகசா தனன்பே ராகத்
துன்னுமந் திரமு மோதித் தோய்ந்துதென் கரையி னின்று. (9)

கனகமாந் தானம் வேதங் கற்றவர் தமக்கு நல்கிற்
சினவிய பூதங் கூளி செறிந்தவெண் குட்டம் வாதம்
வினவிய குமா கண்ட மெய்யிநோய் முழுதுந் தீரு
மனமகிழ் மலடி யேனு மைந்தரும் வாழ்வு முண்டாம். (10)

இன்னமு நினைந்த வெல்லா மெளிதினில் வந்தே யெய்துஞ்
சொன்னமுந் துகிலுங் காசுஞ் சொற்றபே றறிவுங் கூடும்
பின்னருஞ் சிவலோ கத்திற் பிதிர்க்குல முழுதுஞ் சூழ
முன்னவ னருளி னாலே முத்தரின் முதன்மை யாவார். (11)

அதனுக்குத் தென்பா லாக வம்பிடை யிடனுக் கப்பால்
விதமொத்த வாவி யாய விசுவகன் மியதீர்த் தத்தின்
முதமுறட்டுத் தனுமா தத்தின் முப்பது நாளு மாங்கே
யிதமிக்க வுருத்தி ரன்ற னினியமந் திரமு மோதி. (12)

வி ரதயாம் பரிசு மூழ்கி விசுவகன் மேசன் முன்னர்ச்
சரதமா மறையோர்க் காய தானிய தான நல்கி
னிரதமீ திமையோர் சூழ வெம்பிரான் கயிலை நண்ணி
வரதன தருகு நீங்கா வாழ்வுபெற் றுயர்வர் மன்னோ. (13)

அத்தடந் தனக்குத் தெற்கே யம்பிடைக் கப்பால் யார்க்குஞ்
சித்தமே மகிழ ரம்பா தீர்த்தங்கார்த் திகைமா தத்திற்
சுத்தமாஞ் சோம வாரந் தோய்ந்துயர் வாழை யீன்ற
பத்திகூர் கனியைத் தானம் பாலிப்ப ராகின் மன்னே. (14)

இந்திர னுலகந் தன்னி லிந்திர னேவல் கேட்பச்
சந்திர பானுவுள்ள காலும் வாழ்ந் திருப்பர் மற்று
மிந்திர தீர்த்தந் தன்னி லியல்புடன் மூழ்கி னோரே
லந்தமில் சிவலோ கத்தி லமர்ந்தினி திருப்பார் மாதோ. (15)

தங்கிய சிராத்த மிந்தத் தடங்கரைச் செய்தா ராகிற்
கங்கையின் கரை கயாவின் கரையினிற் கிரியை செய்தோ
ரங்குள பலனி லீதே யதிகமாந் திலந்தர்ப் பித்தா
லெங்குள பிதிர்க்க டாமு மெய்துவர் சிவலோ கத்தில். (16)

இந்திர தீர்த்த மேல்பா லிறையவன் றனக்குத் தென்பாற்
சந்தத முனிவர் தோய்ந்து தரும்படி வைகும் பானு
பந்தமாங் கிரணந் தன்னிற் படிந்தன ராயிற் றீராச்
சிந்தனை தீர்வர் நாளுஞ் சிவபதத் திருப்பர் திண்ணம். (17)

நந்தன வனமே யிந்த நன்னகர் தன்னில் வைத்தா
லந்தமி லொருபூ வுக்கோ ராயிரம் வருட மன்பர்
பந்தவல் வினைதீர்த் தாளும் பராபரன் கயிலை மீதே
சந்தத முனிவோர் வாழ்த்தச் சாரூபம் பெற்று வாழ்வார். (18)

வளமுறு குளமொன் றிந்த வளநகர் தன்னிற் றொட்டா
லுளமகிழ் குருக்கொன் றுரு முதகமாத் திரத்துக் காங்கே
யிளமதி யணிந்த வேணி யீசனார் சிவலோ கத்தின்
முளரிமே லயனுந் தெய்வ முகுந்தனும் வாழ்த்த வாழ்வார். (19)

எனமுனஞ் சூத னோதி யிருடிகட் குரைத்த காதை
தனிலொரு கவிதை நாவிற் றரிக்கினுஞ் செவிக்கே யன்பாய்
வினவினுங் கற்ற பேர்க்கு வேண்டுவ தீந்தா ரேனுந்
தினகர னுள்ள காலஞ் சிவலோகந் தன்னில் வாழ்வார். (20)

உத்தம புராணந் தன்னி லுரைக்குமோ ரெழுத்தானாலும்
பத்தியிற் கேட்போ ராகிற் பராபரன் சிவலோ கத்தின்
மூத்தராய் வாழ்வ ரென்று முனிவரர் கேட்கச் சூதன்
சத்திய மென்றே தெய்வச் சதுமறை யுரைத்த தென்றான். (21)

## வாழ்த்து

மன்னுகா விரிதான் வாழி வளவன்சோ ணாடு வாழி
கன்னலங் கழனி சூழுங் கமழ்திருக் கோட்டூர்வாழி
முன்னிய பவள வாய்த்தேன் மொழிகொழுந் தீசர் வாழி
பன்னிய புராணம் வாழி பார்முழு தாழி வாழி. (22)

வன்னிவனத்தலத்திலே முனிநதி, சிவகங்கை, பிரமதீர்த்தம், சிவதீர்த்தம், மண்டைத் தீர்த்தம், அமுதகூபம், இந்திரதீர்த்தம், விசுவகன்ம தீர்த்தம், அரம்பா தீர்த்தம் என ஒன்பது தீர்த்தங்களிருக்கின்றன; அவற்றுள்,

1. முனிநதி—இஃது அகத்திய ருண்டுபண்ணியது; முள்ளியாறு அல்லது முள்ளிநதி யென்பர். இதில் கோவிலுக்கு எதிரே சிங்கமண்டபத்துக்கு மேல்புறமுள்ள தீர்த்தக்கட்டத்தில் தினம் மூழ்குவோர் எல்லாவிதப் பேற்றையு மெளிதிலடைவர்.

2. சிவகங்கை.—இஃது ஆலயத்தின் கீழ்புறமுள்ளது; அயிராவதமுண்டாக்கியது; சிவபெருமான் சடையிலிருந்த கங்கையைப் பெய்தது; நாகதீர்த்தமென்னும் பெயருமுடையது. இதில் மாசிமாதம் ஐந்து, ஏழு இத்தேதிகளில் உதயத்தில் உருத்திர மந்திரஞ் செபித்து மூழ்கி, நீரில் நின்று சூரிய மந்திரத்தினாலே தருப்பணஞ்செய்து, பின்பு ஈசான திசையை நோக்கி நின்று சிவமந்திரத்தினாலே தருப்பணஞ்செய்து, மவுனமாய்க் கரையேறி சுத்தவஸ்திரந் தரித்து பொன் பாத்திரம், வெள்ளிப் பாத்திரம், செப்புப் பாத்திரம் மண் பாத்திரம் என்பவற்று ளியன்றதொன்றில் அரிசி நிறைத்து; வெற்றிலை பாக்கு, தக்ஷிணைவைத்து வேதோத்தமர்களுக்கு அளிப்போர் சிவசாயுச்சியம் பெறுவர். இந்திர மந்திரஞ் செபித்து மூழ்கி பட்டுச் சேலை அல்லது பழுக்காச் சேலையோடு வெற்றிலை பாக்கு தக்ஷிணை

வைத்து அந்தணருக்களிப்போர் சிவலோகஞ்சென்று சிவனுருப் பெறுவர்.

குறிப்பு.—வைகாசி மாசம் விசாக நக்ஷத்திரம், கார்த்திகை மாசம் பூரணை, மாசிமாசம் ஐந்து ஏழாந்தேதிகள் இத்தினங்களில் சிவகங்கைக் கீழ்கரையில் பந்தற்போட்டு, வைகாசி மாசம் விசாகநக்ஷத்திரத்தில் சோமாஸ்கந்த முகூர்த்தத்தையும் மற்றத்தினங்களில் சந்திரசேகர முகூர்த்தத்தையும் இடபவாகனத்திலெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து அப்பந்தலுள் வைத்து அஸ்ததேவரை தீர்த்தமாட்டுவித்து இராத்திரிக்கு மண்டபப்படிசெய்து, எழுந்தருளப்பண்ணிக் கோவிலுக்குக் கொண்டுபோவது மிக்க விசேடமாம்.

3. பிரமதீர்த்தம் —இஃது சிவகங்கையின் கீழ்புறமுள்ளது ; பிரமதேவருண்டாக்கியது ; திரிலோகங்களிலுமுள்ள தீர்த்தங்களை யெல்லாமுடையது ; சிவலிங்கத் திருவுருவஞ் செயமணலெடுத்தது ; இறந்தவர்களுடைய வெலும்பை யிலிங்கவுருவமாக்கி யவர்களைச் சிவலோகத்திற் குடிவைப்பது ; பிரமகுண்டம், முளரியோன் பொய்கை, முளரியோன் றீர்த்தம், கமலன் றீர்த்தம், விரிஞ்சன் றீர்த்தம், வேதன் றீர்த்தம், நான்முகன் றீர்த்தம், அயன் றீர்த்தம், மலரோன் றீர்த்தமென்னும் பெயர்களையு முடையது ; எத்தினத்திலேனும் 'பிரம மந்திரஞ் செபித்து மூழ்கி, மேல் கரையிலிருந்து, வெண்கலப் பாத்திரத்தில் பாற்சாதம் நிறைத்து, அதனோடு வாழைப்பழம், பாக்கு வெற்றிலை, தக்ஷிணை இவைகள் வைத்து வேதோத்தமருக்களிப்போர் பிதிர்க்கள் சூழ கயிலையில் சிவனுருப் பெற்று வாழ்வார்.

குறிப்பு.—பிரமதீர்த்தத்தின் மேல்கரையாயுஞ் சிவகங்கையின் கீழ்கரையாயுமிருந்த கீழவீதியின் கீழ்புறம் மேற்குமுகமாக வீடுகளேற்பட்டு விட்டதினால் பின்புறமிருந்த பிரம தீர்த்தம் நாளடைவிலே கொஞ்சங்கொஞ்சமாகத் தூர்ந்து (அவ்வீடுகளில் ஒன்றிலிருந்தவனுடைய பெயரால்) சொரணக்காளன் குட்டையென்று வழங்குகின்றது. வீடுகளிருக்குமிடத்தை வாங்கி, அத்தீர்த்தத்தைப் பெரிதாக வெட்டி மேல்புறம் படித்துறை கட்டுவோர் அந்தத்தில் சிவலோகமடைந்து

சிவசொரூபம் பெறுவர். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம்; இதைப் பொய்யென்போர் மீளாநரக மடைவர்.

மாசிமாசம் மகநக்ஷத்திரத்தில் பிரம தீர்த்தம் மேல்கரையில் பந்தற்போட்டு, இடபவாகனத்தில் சோமாஸ்கந்த முகூர்த்தத்தை யெழுந்தருளப்பண்ணிக் கொணர்ந்து, அப்பந்தலுள் வைத்து, அஸ்ததேவரைத் தீர்த்தமாட்டுவித்து, இராத்திரிக்கு மண்டபப்படி செய்து, அப்பெருமானை யெழுந்தருளப்பண்ணிக் கோவிலுக்குக் கொண்டுபோவது மிக்க விசேடமாம்.

4. **சிவதீர்த்தம்.**—இஃது ஆலயத்துக்குஞ் சிவகங்கைக்குந் தென்புறம் தெற்கு வீதிக்கு வடபுறம் நடுவிலுள்ளது; அயிராவதம் சிவலிங்கப் பெருமானைக் கோட்டாற் கல்லியதாலுண்டாகியது; நாகதீர்த்தமெனவும் கூறுவர்; இதில் மூழ்குவோர் எது விரும்பினாலுங்கொடுக்கும்.

குறிப்பு.—இத்தீர்த்தத்தில் பெரும்பாகம் நந்தவன முதலிய புன்செ யாகியும் சிறிது பாகம் புன்செ யாகக்கூடிய பள்ளமாகியு மிருக்கின்றது; இதை வெட்டி தென்புறம் படித்துறை கட்டுவது பெரும் புண்ணியமாகும்.

கார்த்திகைமாசம் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தீர்த்தம் தென்கரையில் பந்தற்போட்டு, இடபவாகனத்தில் சந்திரசேகர முகூர்த்தத்தை யெழுந்தருளப்பண்ணிக் கொணர்ந்து, அப்பந்தலுள் வைத்து அஸ்ததேவரைத் தீர்த்த மாட்டுவித்து, இராத்திரிக்கு மண்டபப்படி செய்து, அப்பெருமானை யெழுந்தருளப்பண்ணிக் கோவிலுக்குக் கொண்டுபோவது உத்தமோத்தமமாம்.

5. **மண்டைத் தீர்த்தம்.**—இஃது மேலக்கோட்டூருக்கும் கீழக்கோட்டூருக்கும் நடுவில் சாலைக்கு வடபுறமுள்ளது; அயிராவதத்தின் மண்டை விழுந்ததனாலுண்டாகியது; மண்டைப் புனல், நாகதீர்த்தமென்னும் பெயர்களையுமுடையது; மண்டாகுளமெனவுங் கூறுவர்; இதில் மூழ்குவோர் எல்லாப் பேற்றையுமடைவர்.

6. **அமுதகூடம்**—இஃது சந்நிதிக்குத் தென்புறம் ஆலயத்தினிருதிமூலையிலுள்ளது; இந்திரன் அமுதகடம் வைத்ததனா லுண்டா

இயது; வெண்சுதைக்கூபம், சுதைக்கிணறு என்னும் பெயர்களையு முடையது; இதில் கார்த்திகை மாசம் பௌரணையில் இந்திரமந்திரஞ் செபித்து மூழ்கி, தென்கரையிலிருந்து சுவர்ண தானஞ் செய்தால் பேய், பூதம், வெண்குட்டம், வாதம், குமாரகண்டம் முதலிய நோய் களெல்லாந் தீரும்; மலடிக்குப் புத்திரப்பேறுண்டாம்; சுவர்ணம், இரத் தினம், வஸ்திரம், அறிவு முதலிய யாவுமுண்டாம்; சிவலோகத்தில் பிதிர்க்கள் சூழ வீற்றிருப்பர்.

குறிப்பு.—இத்தீர்த்தம் நான்கு புறத்திலுமிருந்த மதில்களிடிந்து விழுந்து தூர்ந்து பாசி நிறைந்து ஸ்நானபானத்திற்குபயோகப்படாத நிலைமையிலிருக்கின்றது. அதை வெட்டி நான்கு புறமும் படித்துறை கட்டி அத்தீர்த்த நீரைத் தினந்தோறும் சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்யும்படி செய்விப்போர் தேவலோகத்திலிருந்து தேவாமிர்தங் கொணர்ந்து கொழுந்தீசருக்கு அபிஷேகஞ் செய்த பலனை அடைவர்.

கார்த்திகை மாசம் பௌரணையில் அமுதகூபந்தென்கரையில் பந் தற்போட்டு, இடபவாகனத்தில் சந்திரசேகர முகூர்த்தத்தை யெழுந் தருளப் பண்ணிக் கொணர்ந்து, அப்பந்தலுள் வைத்து, அஸ்த்ர தேவ ரைத் திருமஞ்சன மாட்டுவித்து, இராத்திரிக்கு மண்டபப்படி செய்து, அம்மூர்த்தியை யெழுந்தருளப்பண்ணிக் கோவிலுக்குக் கொண்டு போவது மிக்க புண்ணியமாகும்.

7. இந்திரதீர்த்தம்.—இஃது மேலவீதிக்கு மேல்புறம் சந்நிதிக்கு தென்புறம் தேர்நிலைக்குச் சமீபத்திலுள்ளது; இந்திரன் உண்டாக்கி யது; போகிப்பொய்கை, வாசவன்றீர்த்தமென்னும் பெயர்களையு முடையது; இதில் மூழ்குவோர் சிவலோக மடைவர்; இதன் கரையில் சிராத்தஞ் செய்தால் கங்கைக்கரை, கயாக்கரைகளில் செய்த பலனி லும் அதிகப் பலனுண்டாம்; திலதர்ப்பணஞ் செய்தால் பிதிர்க்கள் சிவ லோகமடைவர்; இத்தீர்த்த மேல்பாகத்தில் சூரிய கிரகணப் பரிசகாலத் தில் மூழ்குவோர் சிவலோகத்திலேயே குடியிருப்பர்.

குறிப்பு.—இத்தீர்த்தம் மேல்கரையில் சூரிய கிரகண முண்டாகுங் காலத்தில் பந்தற் போட்டு, இடபவாகனத்தில் சந்திரசேகர முகூர்த்

த்தை எழுந்தருளப் பண்ணிக் கொணர்ந்து, அப்பந்தருள் வைத்து, அஸ்த தேவரைத் திருமஞ்சன மாட்டுவித்து, இராத்திரிக்கு மண்டபப் படி செய்து, சுவாமியை யெழுந்தருளப் பண்ணிக் கோவிலுக்குக் கொண்டுபோவது மிக்க விசேடமாம்.

இத்தீர்த்தம் வடகரையில் இந்திரன் அமைத்த ஆலயஞ் சிதைந்து, அவன் பூசித்த சிவலிங்கப் பாணம் வன்னி விருக்ஷத் தினடியிலும் பீடம், விநாயகர், பலிபீடம் இவைகள் அத்தீர்த்தக் கரையிலு மிருக்கின்றன.

8. விசுவகன்மதீர்த்தம்.—இந்த அமுதகூபத்துக்குத் தெற்கே ஒரு அம்புவிழுந்தூரத்தில் (ஐயனார்கோவில் சந்நிதியில் சாலைக்கு மேல் புறமுள்ளது); விசுவகன்மனுண்டுபண்ணியது ; இதில் மார்கழிமாதம் முப்பதுநாளும் உருத்திரமந்திரஞ் செபித்து மூழ்கி தானியதானஞ் செய்வோர் கயிலாயமடைவர்.

குறிப்பு.—இத்தீர்த்தத்தை ஐயனார் கோவிற்குளம் அல்லது ஐயனார் குளமென்பர். இந்து நன்செ யாகக்கூடிய நிலைமையிலிருக் கின்றது. அதனை வெட்டுவது பெரும்புண்ணியமாகும்.

இத்தீர்த்தக்கரையில் விசுவகன்மன் பூசித்த ஆலயஞ் சிதைந்து இருந்தவிடந் தெரியாமற் போயிற்று ; பாணம் வன்னி விருக்ஷத்தி னடியிலிருக்கின்றது.

9. அரம்பா தீர்த்தம்.—இந்த விசுவகன்ம தீர்த்தத்துக்குத் தெற்கே ஒரு அம்புவிழுந் தூரத்தில் (முள்ளியாற்றுக்கு வடபுறம் தெற்குத்தெரு வென்னுமிடத்திலுள்ளது); அரம்பை யுண்டாக்கியது ; இதில் கார்த்திகைமாசம் திங்கட்கிழமைகளில் மூழ்கி, வாழைப்பழந் தானஞ்செய்வோர் இந்திரனுலகத்தில் சந்திரசூரியருள்ளளவும் வசிப்பர்.

குறிப்பு.—இத்தீர்த்தத்தைக் கருப்புட்டியாள் குளமென்பர் ; இந்து நன்செய்யாகும் நிலையிலிருக்கின்றது ; அதனை வெட்டுவது மிக்க விசேடமாம்.

இத்தீர்த்தக் கரையில் அரம்பை பூசித்த ஆலயஞ் சிதைந்து இருந்தவிடந் தெரியாமற் போயிற்று ; பாணம் வன்னி விருக்ஷத்தி னடியிலிருக்கின்றது.

வன்னி வனத்தலத்திலே திருநந்தவனம் வைப்போர் ஒரு பூவுக்கு ஆயிர வருஷம் கயிலாயத்தில் சாரூபம் பெற்று வாழ்வர். அத்தலத்திலே குளம் வெட்டினால் குருவைக் கொன்ற பாவம் முதலியன நீங்கும் ; கயி லாயமடைவர். இவ்விதம் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக் குத் திருவாய்மலர்ந்தருளினார். இக்கதை படிப்போர், கேட்போர், எழுதுவோர் இவர்கள் கயிலாசமடைவர்.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.

# நாற்பொருள் விளக்கம்

## 1. பசு மகிமை

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாசத்திலே ஆயிரக்கால் மண்டபத்திலே சிவபெருமானது திருச்சந்நிதானத்திலே இடபத்துக்குப் பக்கத்திலே இருக்கும் கபிலநிறமுடைய நந்தை, கருநிறமுடைய பத்திரை, வெண்ணிறமுடைய சுரபி, புகைநிறமுடைய சுசீலை, செந்நிறமுடைய சுமனை என்னும் ஐவகைப் பசுக்களும் சிவனது திருவருளினாலே திருப்பாற்கடலிலிருந்து சிவபூஜையின் பொருட்டும், யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன.

பசுக்களின் சிரத்தில் சிவபெருமானும், அடிக்கொம்புகளில் பிரமவிஷ்ணுக்களும், நுனிக்கொம்புகளில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும், நடுநெற்றியில் உமாதேவியும், மேல்நாசியில் சண்முகக் கடவுளும், உள்நாசியில் நாகேசரும், காதுகளில் அசுவனிதேவரும், கண்களில் சந்திரசூரியரும், பற்களில் வாயுவும், நாவில் வருணனும், ஊங்காரத்தில் சரசுவதியும், இருதயத்தில் இயமனும், கெண்டைத்தலத்தில் இயக்கர்களும், உதட்டில் உதயாஸ்தமன சந்திகளும், கழுத்தில் இந்திரனும், நெரியில் அருக்கர்களும், மார்பில் சாத்தியரும், கால்களில் அனிலவாயுவும், முழந்தாள்களில் மருத்துவரும், நுனிக்குளம்புகளில் நாகலோகத்தாரும், நடுக்குளம்புகளில் கந்தருவரும், மேற்குளம்புகளில் தேவமாதர்களும், முதுகில் உருத்திரரும், சந்திகளில் வசுக்களும், அரைப்பலகையில் பிதிர்க்களும், பெண்குறியில் சத்தமாதர்களும், அபானத்தில் இலக்குமியும், அடிவாலில் நாகேசரும், வால்மயிரில் சூரியனொளியும், மூத்திரத்தில் கங்கையும், சாணத்தில் யமுனையும், உரோமத்தில் முனிவர்களும், அடிவயிற்றில் பூமிதேவியும், முலையில் சமுத்

திரமும், வயிற்றில் காருகபத்தியமும், இருதயத்தில் ஆகவனீயமும், முகத்தில் தக்கணாக்கினியும், எலும்புகளிலும் சக்கிலத்திலும் யாகங்களும், எல்லா அவயவங்களிலும் கற்புடை மகளிரும் வசிப்பனவாம்.

பசுக்களை ஓட்டும்போது கொஞ்சமேனும் வருத்தாமல், இரக்கத்தோடு பலாசங்கோலினால் மெல்ல ஓங்கி போ போ என்று ஓட்டல் வேண்டும். பசுக்களுக்குச் சாலையை விதிப்படி இயற்றி, ஆற்றுமண் ஓடைமண் புற்றுமண் வில்வத்தடிமண் அரசடிமண் என்பவைகளால் நிலப்படுத்து, ஈனும்பசுக்கள் சூலுடைய பசுக்கள் இளங்கன்றுப்பசுக்கள் முதிர்கன்றுப்பசுக்கள் கன்றிழந்த பசுக்கள் கிழப்பசுக்கள் நோயுற்ற பசுக்கள் முதிர்கன்றுகள் இளங்கன்றுகள் நோயுற்ற கன்றுகள் என்னும் இவைகளுக்கு இடங்கள் தனித்தனி யமைத்தல் வேண்டும். தினந்தோறும் கோசல கோமயங்களைத் தூரத்தே அகற்றிச் சுத்திசெய்து, கொசுகு உண்ணி முதலியன வந்து, துன்பஞ் செய்யாவண்ணம், தூபதீபங் காட்டல் வேண்டும். சாலையெங்கும் பூமாலை கட்டல்வேண்டும். பசுக்களைச் சாலையினுள்ளே சுவத்தி என்னும் சொல்லைச்சொல்லி மெல்ல மெல்லப் புகுவித்து, சிரத்தையோடு புல்லாவது வைக்கோலாவது வைத்தல் வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கும் நோயுற்ற கன்றுகளுக்கும் மருந்துகொடுத்துக் காப்பாற்றல் வேண்டும். அஷ்டமிதோறும் பசுக்களை நீராட்டிப் பூச்சூட்டி அன்னமுந் தண்ணீரும் ஊட்டித் தூபதீபங்காட்டி வணங்கல் வேண்டும். பசுக்களை வெயிற் காலத்திலே சோலைகளிலும், மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும், பனிக்காலத்திலே வெயில் மிகுந்த வெளிகளிலும் இடர் உறுவண்ணம் மேய்த்தல்வேண்டும். பசுக்கள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் சிவபெருமானுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். கன்றீன்று இரண்டுமாசஞ் செல்லும்வரையில் பாலைக் கன்று பருகும்படி விட்டுப் பின்பு கறத்தல்வேண்டும். கன்று பால் உண்டு விடுத்த முலையை ஜலத்தினால் கழுவிக் கறத்தல்வேண்டும். கபிலநிறப் பசுவின் பாலைச் சிவனுக்கே கொடுத்தல் வேண்டும். பசுக்களைப் பகைவர் கவரின் அவரை எதிர்த்துக் காத்தல்வேண்டும். காத்தல் அரிதாய வழி உயிர் துறந்தோர் சிவபதம் பெறுவர்.

பசுக்களைக் காணினும் தீண்டினும் தீவினைகள் நீங்கி நல்வினைகள் ஓங்கும். பசுக்கள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத்தரும். பசுக்களின் பெருமையை உணர்ந்து அவைகளை வலஞ்செய்து துதித்து வணங்கிப் புல்லுக் கொடுப்போர் சிவலோகத்தை யடைவர். பசுக்கள் தங்குமிடங்களில் ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், சிவனுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத் தானஞ் செய்தலும், குற்றமற்ற இலட்சணங்களையுடைய இடபத்தைச் சிவசந்நிதானத்திற்குத் தானஞ்செய்தலும், சிவபெருமானது திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவை வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்.

பசுக்களை இடர் நீங்கக் காக்காதவர்களும், காக்காத பாவிகளைத் தண்டியாத அரசனும், பூசை செய்யாதவர்களும், கோபித்து அதட்டி அடித்தவர்களும், இருப்புக்கோலை நெருப்பில் பழுக்கக்காய்ச்சிச் சுட்டவர்களும், சுடுவதற்கு உதவிசெய்தவர்களும், காதறுத்தவர்களும், காதறுத்தற்கு உதவிபுரிந்தவர்களும், வால்மயிர் அறுத்தவர்களும், கன்றிழந்த பின்பு கறந்தவர்களும், கன்றீன்று இரண்டுமாதமாவதற்குட் கறந்தவர்களும், மறுசுரப்பிட்டுக் கறந்தவர்களும், கறந்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யாமல் உண்டவர்களும், புல்லும் தண்ணீரும் அருத்தாமல் கட்டிவைத்தவர்களும் நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர். மலட்டுப்பசு இடபம் இவற்றின்மேல் பாரமேற்றினவர்களும், இடபத்தின்மேல் ஏறினவர்களும் நரகத்தில் வீழ்ந்தமிழ்ந்துவர். கன்றுக்குப் பால்விடாமற் கறந்தவர்கள் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்திப் பின்பு பூமியிலே பிறந்து பசி மிகுதியினாலே இரந்துண்டு வருந்துவர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின் எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்தில் வீழ்ந்துழல்வார்கள் ; அவர்களுக்குப் பரிகாரமில்லை.

திருச்சிற்றம்பலம்

## ௨. விபூதி மகிமை

திருச்சிற்றம்பலம்

சர்வசங்கார காலத்திலே ஸ்ரீ சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணெருப்பினாலே எல்லாப் பொருள்களையும் நீறாக்கி, அந்நீறு தமது திருமேனி முற்றுந்தோயுமாறு திருநிர்த்தனஞ்செய்து, முடிவில் முன்போல் உலகத்துள்ள யாவற்றையுந் தோற்றுவித்து, தமது திருமேனியிற் படிந்திருந்த திருநீற்றைத் தம் கரத்தால் வழித்து, தமது வாகனமாகிய இடபத்தின் முன் எறிந்தனர். அந்த இடபம் அந்நீற்றையுட்கொண்டு தனக்குப் பக்கத்திலே யிருக்கும், நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் பசுக்களிடம் விட்டது. அப்பசுக்கள் சிவனது திருவருளினாலே திருப்பாற்கடலில் இருந்து, சிவபூசையின் பொருட்டும் யாகாதிகளின்பொருட்டும் பூமியில் தோன்றின. இதனால் பசுக்களின் சாணம் விபூதிக்கு மூலமாயிற்றெனவும்; சர்வசங்காரகாலத்திலே சிவபெருமான் எல்லாத் தேவர்களையும் சகல அண்டங்களையும் நெற்றிக் கட்பொறியினாலே சாம்பலாக்கி, அந்தச்சாம்பலைத் தமது திருமேனி முற்றும் பூசிக்கொண்டு திரும்ப முன்போல் எல்லாத் தேவர்களையும் சகல அண்ட சராசரங்களையுந் தோற்றச்செய்து, அந்த நீற்றுக் கறிகுறியாகச் சகல தேவர்களும் அவயவங்களில் வசிக்கப்பெற்ற பசுக்களின் சாணத்தை நீறாக்கி யாவரும் பூசிக்கொள்ளும்படி விதித்தருளினர். இதனால் பசுக்களின் சாணம் விபூதிக்கு மூலமாயிற்றெனவுங் கூறுவதால் விபூதி சிவசின்னங்களு ளொன்றாயிற்று.

இது வைதிகவிபூதி இலௌகிகவிபூதி என இருவகைப்படும் பெரும் பிரிவினையுடையது. இவற்றுள் வைதிகவிபூதி புராதனி, சத்தியோசாதையென இருவகைப்படும். புராதனி பிரமன் யாககுண்டத்திலும், சத்தியோசாதை அந்தணர்கள் யாககுண்டத்திலும் உண்டாவது. இவ்விருவகை விபூதியும் மறையோர் முதலிய மூன்றுவருணத்தவர்களும் அணியத்தக்கது.

இலௌகிகவிபூதி சைவவிபூதி, அசைவவிபூதி என இருவகைப்படும். இவற்றுள் சைவவிபூதி கற்பம், அநுகற்பம், உபகற்பம் என

மூன்று பிரிவினையுடையது. அதாவது (1) ஈன்றணிமையதும், ஈனு தலும், சூலுடையதும், இருகன்றீன்றதும், முதிர்ந்த கன்றுடையதும், கன்றிழந்ததும், நோயுடையதும், மலடும், மலந்தின்பதும், வளைந்த காதுள்ளதும், கொம்பொடிந்ததும், வாலற்றதும், வயது முதிர்ந்தது மாகிய இவைபோன்ற குற்றங்களின்றி வயலில் நெற்றாள் மேய்ந்து வரும் பசுக்களின் சாணத்தைப் பங்குனிமாசத்து அஷ்டமி, சதுர்த்தசி, பௌர்ணமி என்னுந் திதிகளிலே, பூமியில் வீழ்வதன் முன்னர் சத்தி யோசாத மந்திரஞ்சொல்லித் தாமரையிலையில் வாங்கி வழும்பு போக்கி, வாமமந்திரங்கூறிப் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் * பஞ்சகவ்வியம் வார்த்து, அகோரமந்திரமோதிப் பிசைந்து, தற்புருடமந்திரஞ் செபித்துக் கைகொண்ட அளவு உருட்டி, வெயிலில் உலர்த்தியாயினும் உலர்த்தாமலாயினும் ஓமத்தீயாகிய சிவாக்கினியில் நன்றாக வேகவைத்து, சூடு தணிந்து ஆறிய பின்பு ஈசானமந்திரம் புகன்று எடுத்து, புது வஸ்திரத்தினால் வடித்துப் புதுப்பாண்டத்தி லிட்டுக் காயத்திரிமந்திரம் நவின்று சுத்தமான இடத்தில் வைத்து, மல்லிகை முல்லை சிறுசண்பகம் பாதிரி முதலிய சுகந்த புஷ்பங்களைப் பெய்து, புதுவஸ்திரத்தினால் வாயைக் கவசஞ்செய்து வைத்துக்கொள் வது கற்பமாகும்; (2) வனத்திலும் பசுமந்தையிலும் தானே விழுந்து உலர்ந்து கிடக்கும் சாணத்தை, சித்திரை மாசத்திலே, சத்தியோசாத மந்திரஞ் செபஞ்செய்து எடுத்துவந்து பொடித்து, வாமமந்திரம் நவின்று பஞ்சகவ்வியம் வார்த்து, அகோரமந்திர மொழிந்து பிசைந்து, தற்புருடமந்திரம் புகன்று கைகொண்ட உண்டைகள் செய்து, வெயி லில் உலர்த்தியேனும் உலர்த்தாமலேனும் சிவாக்கினியிலிட்டு, நன்றாக வேகவைத்து, சூடு முழுதுந் தணிந்து ஆறியபின்பு, ஈசானமந்திர மோதி எடுத்து, புதுவஸ்திரத்தினால் வடிக்கட்டி, புதுப்பாண்டத் தினுள்ளிட்டு, காயத்திரி மந்திரஞ் செபித்துச் சுத்தமான இடத்தில் வைத்து, மல்லிகை முதலிய சுகந்த புஷ்பங்களிட்டு, புது வஸ்திரத்தி

---

* பஞ்சகவ்வியம்—பால் ஐந்து பங்கும், தயிர் மூன்று பங்கும், நெய் இரண்டு பங்கும், கோசலம் ஒரு பங்கும், சிறிது சாணமுங் கொண்டது.

ஞல் கவசஞ்செய்து வைத்துக்கொள்வது அநுகற்பமாம் ; (3) வனத்தில் காட்டுத்தீயால், இயல்பாகவே வெந்து கிடக்குஞ் சாம்பலை, சத்தியோசாதமந்திரங் கூறி யெடுத்துவந்து, வாமமந்திரமோதிப் பஞ்சகவ்வியம் பொழிந்து, அகோரமந்திர மொழிந்து பிசைந்து, தற்புருட மந்திரஞ் செபித்து உண்டைகள் செய்து, சிவாக்கினியிலிட்டு விளைவித்து, ஈசானமந்திரம் புகன்று எடுத்து, புதுவஸ்திரத்தினுல் வடிக்கட்டி, புதுப்பாண்டத்தினுள் வைத்து, அந்தப் பாண்டத்தைக் காயத்திரிமந்திரம் நவின்று சுத்தமான தானத்தில் வைத்து, அதனுள் சுகந்த புஷ்பங்களைப் போட்டு, புதுவஸ்திரத்திஞல் வாயைக் கட்டிவைத்துக் கொள்வது உபகற்பமென்பர் ; இந்த மூன்றுவகை விபூதியும் சிவதீக்கையையுடைய எல்லா வகுப்பினரும் அணியத்தக்கது.

அசைவவிபூதி.—இதை அகற்பமெனவுங் கூறுவர். இது இருவகைப்படும். அதாவது (1) தை மாசி மாதங்களில் செந்நெற்றுள் மேய்ந்துவரும் பசுக்களின் சாணத்தை யெடுத்துவந்து, கோசலம் பெய்து பிசைந்து, கைகொண்ட அளவு உண்டைகள் செய்து, வெயிலில் உலர்த்தி, மாசிமாதத்து அபரபக்கஞ் சதுர்த்தசி திதியிலேனும் வேறு தினத்திலேனும் நெற்பதர் அல்லது உமியோடு சேர்த்து, அக்கினியிட்டுத் தகித்து, சூடு தணிந்து ஆறியபின்பு எடுத்து, பாண்டத்திலேனும் சுரக்குடுக்கையிலேனும் வைத்துக்கொள்வதும் ; சிவாலயத்து மடைப்பள்ளியிலும், சிவனடியார் மடைப்பள்ளியிலும் விளைவதுமாம். இந்த விபூதி சிவதீக்ஷையில்லாதவர்கட்குரியது. (2) காடுகளில் தாஞக விளைந்து கிடப்பதாம். இவ்விபூதி சங்கர ஜாதியார்கட்குரியது

விபூதி.—ஆன்மாக்களுக்கு ஐசுவரியத்தைத் தருதலால் பூதியெனவும், சிவத்துவத்தை விளக்குதலால் பசிதமெனவும். மலத்தைக் கழுவுதலால் சாரமெனவும், பேய் பிணி முதலியவற்றுல் வருந்துன்பங்களை நீக்குதலால் காப்பு எனவும், சகல பாவங்களையும் தகித்தலால் பற்பம் அல்லது நீறு எனவும் பெயர்பெறும்.

விபூதியைப் பன்னிரண்டு விரல் உயரமும் எட்டு விரல் அகலமுமுடையதாய் மான்றேல், புலித்தோல், பட்டு முதலியவற்றில் தைத்த

பைகளிலேனும், சம்புடத்திலேனும், வில்வக்குடுக்கையிலேனும் எடுத்து வைத்துத் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

விபூதிப்பையை விபூதிக்கோயிலென்று கூறுவர். விபூதியைச் சதாசிவமென்றும், விபூதிக்கோயிலை உமாதேவியென்றும், விபூதிக் கோயில் தைத்துள்ள நூலைப் பிரமதேவனென்றும், விபூதிக்கோயில் கட்டுங்கயிற்றை விஷ்ணுமூர்த்தி யென்றும் வேதாகமங்கள் கூறுகின்றன.

கரியநிற விபூதி கொடிய ரோகத்தைக் கொடுக்கும். சிவந்தநிற விபூதி கீர்த்தியைப் போக்கும். புகைநிற விபூதி ஆயுளைக் குறைக்கும். பொன்னிற விபூதி வறுமையைத் தரும். வெண்ணிற விபூதி எண்ணில்லாத புண்ணியப்பேற்றை யளிக்கும். இதினின்று சித்தசுத்தியும் அதினின்று ஞானப்பிரகாசமும் அதிலிருந்து முத்தியு முண்டாம். இதனால் கருநிற விபூதி, செந்நிற விபூதி, புகைநிற விபூதி, பொன்னிற விபூதி இவற்றைத் தரிக்கலாகா. வெண்ணிற விபூதியே தரித்தல் வேண்டும்.

சந்தியாகால மூன்றினும், சூரியோதயத்தினும், சூரியாஸ்தமயனத்தினும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசலமோசனஞ் செய்து சௌசம்பண்ணி ஆசமித்த பின்னும், பூனை முதலிய அசுத்த பிராணிகள் தீண்டியபோதும் விபூதி அவசியம் தரித்தல் வேண்டும்.

விபூதி தரிக்குமுறை உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகையாம். அதாவது (1) கிழக்கு முகமாக வேனும் வடக்குமுகமாகவேனும், நின்றாயினும் இருந்தாயினும், பைகள் சம்புடம் வில்வக்குடுக்கை சுரைக்குடுக்கை என்பவற்றுளொன்றில் வைத்திருக்கும் விபூதியை வலக்கையால் எடுத்து, நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து, "சிவ சிவ" என்று சொல்லி நடுவிரல் மூன்றினாலும், சிரம் நெற்றி மார்பு வயிறு கைகள் முதலிய தானங்களெங்கும் ஏகமாய்த் தரித்துக்கொள்வது உத்தூளனமாம். (2) சரீரசுத்தி செய்துகொண்டு, முழந்தாளுக்குக் கீழ்பட்ட தண்ணீரில் நின்றுகொண்டேனும், சுத்தமான இடத்திலிரு

ந்துகொண்டேனும், சிவத்தியானத்துடன் வலக்கரத்தால் விபூதியை எடுத்து, இடக்கரத்தில் வைத்து, விதிப்படி சுத்திசெய்து, சம்ஹிதா மந்திரத்தால் அபிமந்திரித்து, நீரிற் குழைத்துச் சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், இரண்டு முழந்தாள்கள், இரண்டு புயங்கள், இரண்டு முழங் கைகள், இரண்டு மணிக்கட்டுகள், இரண்டு விலாப்புறங்கள், முதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களிலும், முறையே நெற்றியில்இரண்டு கடைப்புருவ நீளமும், மார்பிலும புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும் மற்றைத் தானங்களில் ஒவ்வோரங்குல நீளமுமாக வளையாமலும், இடையறுமலும், ஒன்றையொன்று தீண்டாமலும், அதிகம் அகலாம லும், இடைவெளி ஒவ்வோரங்குல மிருக்கும்படி தரித்துக்கொள்வது திரிபுண்டரமாம்.

உத்தூளனம் தரித்துக்கொண்டு அதன்மேல் திரிபுண்டரமணிதல் வேண்டும். தீட்சையுடையவர்கள் சந்தியாகால மூன்றினும் சலத்திற் குழைத்தும், மற்றைய காலங்களில் சலத்திற் குழையாமலும் தரிக்க லாம். தீக்ஷையில்லாதவர்கள் மத்தியானத்திற்குமுன் சலத்திற் குழைத் தும், மத்தியானத்திற்குப்பின் சலத்திற் குழைக்காமலும் அணியலாம். திரிபுண்டரந் தரித்துக்கொள்ளும்போது விலாப்பக்கங்க ளிரண்டை யும் நீக்கிக் காதுகளிரண்டையுங் கொள்வதும், முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானமாகக் கொள்வது முண்டு. திரிபுண்டரம் அளவுக்குக் கூடும்படி தரித்தாலும், அளவுக்குக் குறை யும்படி தரித்தாலும் குற்றமாம்.

சிவசந்நிதியிலும், ஆசிரியரும், சிவனடியார்களும் கொடுக்கும் விபூதியை எந்தக் காலத்திலும் அணிந்துகொள்ளலாம். சிவசந்நிதி யிலும், குருசந்நிதானத்திலும், சிவனடியார் திருமுன்னிலையிலும், சிவாக்கினிக்கெதிரிலும் விபூதி தரித்துக்கொள்ளாமல் கொஞ்சந்திரும்பி நின்று தரித்துக்கொள்ளல் வேண்டும். ஆசாரியராயினும், சிவனடியா ராயினும் விபூதி தந்தால் மூன்றுதரமாயினும் ஐந்து தரமாயினும் நமஸ் கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி, இடக்கையின் மீது வலக்கையை வைத்து, வாங்கித் தரித்துக்கொண்டு மீட்டும் நமஸ் கரித்தல் வேண்டும்.

திருக்கோயில்களிலிருந்து விபூதிப் பிரசாதம் தீக்ஷை முதலிய வற்றால் தம்மிலும் மேம்பட்டவர்கள் கொண்டுவந்தால், அவர்களுடைய திருவடிகளில் மூன்று தரம் நமஸ்கரித்து, வாங்கித் தரித்துக் கொள்ளல் வேண்டும். தம்மிலும் தாழ்ந்தவர்கள் கொண்டுவந்தால், அந்த விபூதிப்பிரசாதத்தை, சுத்தமான ஒரு ஆசனத்தில் வைக்கச் செய்து, சுகந்த மலர்களால் அருச்சித்து, வணங்கி யெடுத்துத் தரித்துக்கொள்ளல் வேண்டும். நிலத்தில் விபூதி சிந்துமபக்ஷத்தில் அந்த விபூதியை யெடுத்துவிட்டு அந்தத் தலத்தைச் சுத்திபண்ணல் வேண்டும்.

ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக்கொண்ட விபூதியும், தீக்ஷையில்லாதவர்கள் தந்த விபூதியும் அணியலாகாது. தலையை நடுக்கிக்கொண்டும், தலையைக் கவிழ்ந்துகொண்டும், சிரித்துக்கொண்டும், நடந்துகொண்டும், படுத்துக்கொண்டும், அசுத்த நிலத்திலிருந்து கொண்டும், ஒரு விரலாலும், சண்டாளர் முன்னும், சிவநிந்தகர் முன்னும் விபூதி தரிக்கலாகாது. வட்டமாகவும், சதுரமாகவும், சூலம் போலவும் விபூதி தரிக்கக்கூடாது. மங்கையர், சந்நியாசி, வானப்பிரத்தன் மனைவி, பிரமசாரி இவர்கள் நீரிற் குழைத்து அணியலாகாது.

விபூதியிற் பெரிதான தீர்த்தங்களும், செல்வங்களும், ஔஷதங்களுமில்லை. விபூதி சகல வியாதிகளையும், நல்வினை தீவினைகளையும், பிறப்பிறப்புக்களையும், பைசாச பீடிதத்தையும் நீக்கும். விபூதி சகல தீர்த்தங்களில் மூழ்கிய பலனையும், நூறு யாகங்களியற்றிய பலனையும், மூன்று லோகங்களையுந் தானஞ்செய்த பலனையுந் தரும். விபூதி தரிப்போர் சிவசொரூபமேயாவர். அவர் பின்னே சிவபெருமான் உமாதேவியோடு திரிவர். முத்தியைத் தரக்கூடிய மருந்து விபூதியே யென்பது நிச்சயம்.

திருச்சிற்றம்பலம்.

## 3-உருத்திராக்க மகிமை.

திருச்சிற்றம்பலம்.

தாரகன், தாரகாக்ஷன், வித்துன்மாலி என்னும் மூன்று அசுரர்களும் பிரமதேவனை நோக்கி, கோடி வருஷம் அரிதாகிய தவம் புரிந்து, பொன் வெள்ளி இரும்புகளாலாகிய மூவரண்கள் முறையே, சுவர்க்கம் அந்தரம் பூமியென்னும் மூன்று இடங்களிலும் நிலைபெற்றிருந்து, வேண்டுமிடங்கட்கு உடன்வரவும், அவை ஆயிரம் வருஷத்திற்கொரு முகூர்த்தகாலம் ஒன்றுசேரவும், அந்தக் காலத்தில் ஒரே பாணத்தால் மூன்றையும் அழித்தாலன்றி அழியாதிருக்கவும், விஷ்ணு முதலிய தேவர்கள் தம்மோடெதிர்க்கில் அவர்கள் தோற்றோடவும் வரம்பெற்று, மயனால் பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று லோகங்களால் மூன்று மதில்களையுடைய (திரிபுரமென்னும்) மூன்று நகரங்களை முறையே சுவர்க்கம், அந்தரம், பூமியென்னும் மூன்று இடங்களிலும் அமைத்து, அவற்றிலிருந்துகொண்டு பிரமன் முதலிய எல்லாத் தேவர்களையுந் துன்பப்படுத்தி வந்தனர். இவர்களியற்றுந் துன்பத்திற்காற்றாத பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் பரமேசுவரனை நோக்கி ஆயிரந்தேவவருஷம் அரிதாகிய தவம் புரிந்தனர். பரமேசுவரன் தேவர்கள் புரிந்த அருந்தவத்துக்கிரங்கி அங்கு எழுந்தருளினர். தேவர்கள்சிவபெருமானுடைய திருவடிகளில் அடியற்ற மரம் போல்விழுந்து நமஸ்கரித்து, தேன்நிறைந்த வாசனையையுடைய கொன்றைமாலை யணிந்த சிவந்த சடாபாரத்தையுடைய எம்பெருமானே? அடியேங்களுக்கு முப்புரத்தசுரர்களால் நிகழுந் துன்பங்களை நீக்கியருள வேண்டுமென விண்ணப்பஞ் செய்தனர். சிவபெருமான் அஞ்சேல் அஞ்சேல் என மூன்று திருக்கண்களாலும் † ஆயிரந்தேவ வருஷம் தேவர்களைப் பார்த்தருளினர். அப்போது அக்கண்களிலிருந்து நீர்த்துளிகள் தோன்றின. அவற்றுள்,

---

கமலாக்ஷன் எனவுங் கூறுவர்.

† ஆயிரந்தேவ வருஷம்—சிவபெருமானுக்குச் சிறிது காலம்.

சூரியவடிவாகிய வலக்கண்ணிற்றோன்றிய நீர்த்துளிகளில் பன்னிரு கபிலநிற உருத்திராக்க மரங்களும், சந்திரவடிவாகிய இடக்கண்ணிற்றோன்றிய நீர்த்துளிகளில் பதினாறு வெண்ணிற உருத்திராக்க மரங்களும், அக்கினிவடிவாகிய நெற்றிக்கண்ணிற்றோன்றிய நீர்த்துளிகளில் பத்து கருநிற உருத்திராக்க மரங்களுமாக முப்பத்தெட்டுவித மரங்கள் உற்பவித்தன. இவற்றுள் கபிலநிற உருத்திராக்க மரத்திலிருந்து செந்நிற உருத்திராக்க மரமும், அந்த செந்நிற உருத்திராக்க மரத்திலிருந்து பொன்னிற உருத்திராக்க மரமும் உண்டாயின.

இந்த ஐந்துவகை மரங்களிலும் கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி, வெண்ணிறமணி, கருநிறமணி யென ஐவகைப் படும் உருத்திராக்க மணிகள் உற்பவித்தன. சிவபெருமான் அந்த உருத்திராக்க மணிகளை தேவர், முனிவர் முதலிய யாவரையும் அணிந்துகொள்ளும்படி கட்டளையிட்டருளினர். பிரமன் விஷ்ணு இந்திரன் முதலிய அனைவோரும், அவற்றைப் புனைந்து துன்பம் நீங்கிச் சிவபுண்ணியப்பேற்றைப் பெறுவாராயினர். இதனால் உருத்திராக்கமணி சிவசின்னங்களுளொன்றாயின.

முற்கூறிய மரங்களில் (நேபாள தேசத்திலே) விளைகின்ற உருத்திராக்கமணிகளில் உன்னதமுடைய பக்கமே முகமெனவும், உன்னதமில்லாத பக்கமே யடியெனவுங் கூறுவர். அந்த மணிகளின் முககணிதங்களை அவற்றிலுள்ள இரேகைகளால் அறியவேண்டும். இந்த மணிகளின் மூலம் பிரமதேவரும், நாளம் விஷ்ணுமூர்த்தியும், முகம் உருத்திரமூர்த்தியும், கேசரங்கள் சகல தேவதைகளுமாம்.

வெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி, கருநிறமணி என்னும் ஐவகை மணிகளுள்ளும் ஒருமுகமணி, இரண்டுமுகமணி, மூன்றுமுகமணி, நான்குமுகமணி, ஐந்துமுகமணி, ஆறுமுகமணி, ஏழுமுகமணி, எட்டுமுகமணி, ஒன்பதுமுகமணி, பத்துமுகமணி, பதினொருமுகமணி, பன்னிரண்டுமுகமணி, பதின்மூன்றுமுகமணி, பதினான்குமுகமணி, பதினைந்துமுகமணி, பதினாறுமுகமணி யென பதினாறு வகையுண்டு. இரண்டுமணி ஒன்றுசேர்ந்திருந்தால்

அதைச் சத்தியும் சிவமும் ஒன்றென்னும் உண்மையை விளக்கும் வடிவு வாய்ந்த கௌரிசங்கமணி யென்பர்.

வெண்ணிறமணி அந்தணசாதியெனவும், பொன்னிறமணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியசாதியெனவும், கபிலநிறமணி வைசியஜாதி யெனவும், கருநிறமணி சூத்திரசாதியெனவும் நூல்கள் கூறுகின்றன. வெண்ணிறமணி பிராமணரும், கபிலநிறமணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியரும், பொன்னிறமணி வைசியரும், கருநிறமணி சூத்திரரும் அணிந்துகொள்ளவேண்டுமாம்.

ஒருமுகமணிக்குத் தற்பரசிவனும், இருமுகமணிக்குச் சீகண்ட பரசிவனும் சிவசத்தியும், மும்முகமணிக்கு மும்மூர்த்திகளும் அக்கினி தேவனும், நான்முகமணிக்குப் பிரமதேவரும், ஐம்முகமணிக்குக் காலாக்கினியுருத்திரனும், ஆறுமுகமணிக்குச் சண்முகக்கடவுளும், எழுமுகமணிக்கு ஆதிசேஷனும் சத்தமாதர்களும், எண்முகமணிக்கு விநாயகக்கடவுளும் அஷ்டவித்தியேஸ்வரர்களும், ஒன்பதுமுக மணிக்கு வைரவக்கடவுளும் கங்கை முதலிய நவதீர்த்தங்களும், பத்துமுகமணிக்கு விஷ்ணுமூர்த்தியும் பத்துத்திக்குப் பாலகர்களும், பதினொருமுகமணிக்குப பதினொரு ருத்திரரும், பன்னிரு முகமணிக்குப் பன்னிரு சூரியரும் விஷ்ணுமூர்த்தியாகிய வசு தேவர்முதலிய பன்னிருமூர்த்திகளும், பதின்மூன்று முகமணிக்குச சிவபெருமானும் முருகக்கடவுளும் சதருத்திரர்களும், பதினான்குமுக மணிக்குச் சிவமும் சத்தியும் மநுக்களும், பதினைந்துமுகமணிக்குச் சதாசிவமூர்த்தி சந்திரன் வருணன் முதலியோர்களும், பதினாறுமுக மணிக்குச் சிவபெருமான் விஷ்ணுமூர்த்தி பிரமதேவர் முப்பத்துமுக் கோடிதேவர் முதலிய அனேவோர்களும் அதிதேவதைகளாவர்.

ஒருமுகமணி பிரமஹத்தியைத் தீர்க்கும்,இருமுகமணி கோஹத்தி யைப் போக்கும், மும்முகமணி ஸ்திரீஹத்தியை நீக்கும், நாலு முகமணி நரஹத்தியைத்தொலைக்கும், ஐம்முகமணி புணரத்தகாதவர் களைப் புணர்ந்த பாவத்தையும் புசிக்கத்தகாதவற்றைப் புசித்த பாவத் தையுந் தவிர்க்கும், ஆறுமுகமணி பிரமஹத்தியை யொழிக்கும், எழுமுகமணி பொன்திருடிய பாவத்தையும் பசுஹத்தியையும் தகிக்கும்,

எண்முகமணி குருபீத்தினியையப்புணர்ந்த பாவத்தையும் பொன்திரு டியபாவத்தையும் பிறரீனனங்கவர்ந்துண்ட பாவத்தையும் (துலாபுருட தானம், இரணியகருப்பதானம், திலபதுமதானம், சொன்னபூமிதானம், சொன்னதேனுதானம், இலக்குமிதானம், திலதேனுதானம், சகத்திர கோதானம். இரணியவசுவதானம், இரணியகன்னிகாதானம், சொன்ன கசதானமுதலிய) தானங்கள் வாங்கிய பாவத்தையுங் களையும், ஒன்பது முகமணி ஆயிரம் உயிர்வதைப்பாவத்தையும் நூறுபிரமவதைப் பாவத்தையும் பூதப்பைசாசபீடிதத்தையும் சர்ப்பம் முதலிய விஷதோஷத்தை யும் போக்கும்; (அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும்) அஷ்டமாசித்திகளை யும் முத்தியையும் கொடுக்கும், பத்துமுகமணி நக்ஷத்திரதோஷத்தை யும் கிரகதோஷத்தையும் விஷதோஷத்தையும் பேய்பீடிதத்தையும் பிரமராக்கதத்தீங்கையுந் தொலைக்கும், பதினொருமுகமணி ஆயிரம் அசுவமேதப்பலனையும் நூறுவாசபேயப்பலனையும் இலட்சங் கோமே தப்பலனையும் அளிக்கும், பன்னிருமுகமணி துன்பத்தையும் மிருகபயத் தையும் நீக்கும்; அசுவமேதப்பலனையும் பசுமேதப்பலனையும் சுவர்ண தானப்பலனையும் இஷ்ட சித்தியையுந் தரும், பதின்மூன்றுமுகமணி மாதா பிதா சகோதரர் கருவாதியவற்றின் கொலைப்பாவத்தைப்போக் கும்; சர்வாபீஷ்டத்தையும் சகல சித்தியையும் நல்கும், பதினான்குமுக மணி தேவர் முனிவர் முதலியோர்களை வசப்படுத்தும்; சிவபதத்தைத் தரும், பதினைந்துமுகமணி தீங்கனைத்தும் அகற்றும்; விஷ்ணு பிரமன் இந்திரன் முதலினோரது பதவிகளிலுள்ள போகவின்பங்களைத்தரும், பதினாறுமுகமணி சாயுச்சியம் முதலிய எல்லாவிதப்பேற்றையும் எளி தில் நல்கும் என்று நூல்கள் முறையிடுகின்றன.

பரமசிவனது கிருபாநோக்கமானது ஆன்மாக்களிடத்துற்ற, (ஆணவம், மாயை, காமியம் என்னும்) மும்மலங்களையுந் தொலைத்து, அருளுருவாக்கி, முத்தியை யளிப்பதுபோல் பாசபந்தத்தை யறுத்து, அருளொளியை விளைவித்து, முத்தியைத் தருதலால் அக்கம் எனவும்; மனத்திலுற்ற இருளையுந் துன்பத்தையுங் கண்டித்தலால் கண்டி அல் லது கண்டிகை யெனவும்; (சூரியனொளியைக் கவர்ந்து, மணதினிடங்

கொடுத்து விளக்குங் கண்ணொளி மணிபோல்) சிவபெருமானின் அருளொளியைக் கவர்ந்து ஆன்மாக்களிடங் கொடுத்து, அகவிருளைத் தொலைத்து, ஞானவொளியை வளர்த்தலாலும், சிவபெருமானுடைய திருக்கண்களிற் றோன்றிய நீர்த்துளிகளி லுற்பவித்தமையாலும் கண்மணியெனவும் பெயர்பெறும், உருத்திராக்கமணிகளை அணிந்துகொள்ளாமல் சந்தியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணம் படித்தல், சிவபுராணங் கேட்டல், தேவார திருவாசகமோதல், வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்கள் படித்தல், தீர்த்தமாடல், யாத்திரைபோதல், சிவவிரதமநுட்டித்தல், யாகமியற்றல், சிராத்தாதி தானமளித்தல் முதலியவை செய்யின் அவற்றின் பலன் சித்தியாகாவென்பது திண்ணம்.

குடுமி, சிரசு, இரண்டு காதுகள், உட்கழுத்து, கழுத்து, இரண்டு புயங்கள், இரண்டு மணிக்கட்டுகள், மார்பு, பூணூல் என்னுந் தானங்களுள் குடுமியில் ஒன்றும், சிரசில் இருபத்திரண்டு அல்லது முப்பத்தாறும், காதுகளில் ஒவ்வொன்று அல்லது அவ்வாறும், உட்கழுத்தில் ஒன்று அல்லது மூன்றும், கழுத்தில் முப்பத்திரண்டும், புயங்களில் தனித்தனி பதினாறும், மணிக்கட்டுகளில் தனித்தனி பன்னிரண்டும், மார்பில் ஐம்பது அல்லது நூற்றியெட்டும், பூணூலில் ஒன்றும் (குடுமியும் பூணூலும் நீங்கலாக மற்றைய தானங்களில் அந்தந்தத் தானங்கொண்ட அளவும்) இருபத்தேழிழையாலாகிய வெண்பட்டு நூற்கயிறு, பருத்திநூற்கயிறு, பொன்சரடு, வெள்ளிச்சரடு என்பவற்றுள் இயன்ற தொன்றில் முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்த இடையிடையே பொன்வில்லை, வெள்ளிவில்லை, தாமிரவில்லை, முத்துமணி, பவளமணி, பளிங்குமணி, வில்வக்குடுக்கையின் ஓட்டுவில்லை என்பவற்றில் கிடைக்கக்கூடியதை யிட்டுக்கோர்த்து நுனி இரண்டையுஞ் சேர்த்து அதில் முகமணி கோர்த்து முடிச்சிட்டுப் புனைந்து கொள்ளல் வேண்டும்.

சிகைக்கு ஒரு முகமணி அல்லது பதினொருமுக மணியும், தலைக்கு இரண்டு பதினொன்று பதினான்கு முகமணிகளும், காதுகளுக்கு ஐந்து எழு பத்து பன்னிரண்டு முகமணிகளும், கண்டத்

துக்கு எட்டு முகமணிகளும், புயங்களுக்குப் பதின்மூன்று முகமணிகளும், (அப்புயங்களுள்) வலப்புயத்துக்கு ஆறு முகமணிகளும், இடப் புயத்துக்கு ஒன்பதுமுகமணிகளும், மணிக்கட்டுகளுக்கு ஒன்பதுமுக மணிகளும், மார்புக்கு ஏழ்முகமணிகளும், பூணூலுக்கு நான்குமுக மணி அல்லது பதினான்குமுகமணியும் உரித்தாகுமென்பர்.

சிகை, காதுகள், உட்கழுத்து, பூணூல் இந்தத் தானங்களில் எப் போதும் நீக்கமில்லாமலும் ; மற்றைத் தானங்களில் சந்தியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூஜை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவ புராணம் படித்தல், சிவபுராணங்கேட்டல், சிவவிரதம் அநுட்டித்தல், தீர்த்தமாடல், யாகாதி கருமமியற்றல், சிராத்தாதி தானங்கொடுத்தல் முதலியவை செய்யுங்காலங்களிலும் உருத்திராக்கமணிகள் அவசியந் தரித்திருத்தல் வேண்டும். சிகை, காதுகள், உட்கழுத்து, பூணூல் இவை நீங்கலாக மற்றைய தானங்களில் நித்திரையிலும், மலசல மோசனத்திலும், நோயிலும், சனனசௌச மரணசௌசங்களிலும் உருத்திராக்கமணிகள் புனைந்திருத்தல் கூடாது.

எந்தச் சாதியிற் பிறந்தோராயினும், எத்தன்மை யுடையோராயினும்,எத்தொழிலைச் செய்வோராயினும் உருத்திராக்கமணிவார்களாகில் அவர்கள் சீவன் முத்தர்களேயாம். ஆயிரம்உருத்திராக்கமணிந்தவர் சிவ சொரூபமேயாவர். உருத்திராக்க மணிந்தவர்களின் பின்னே பிரம விஷ்ணுக்கள் முதலிய தேவர்கள் திரிவார்களாம். உருத்திராக்கமணிகளணிந்துகொண்டு ஸ்நானஞ்செய்யின் அவ்வுருத்திராக்கங்களிற்பட்டுக் கீழே விழுஞ்சலம் (சிவபெருமானுடைய சடாபாரத்திலிருந்து பூமியில் விழும்) ஆகாய கங்கையேயாம்.

உருத்திராக்கம் புனைந்தவர்கள் மூன்றரைகோடி தீர்த்தங்களில் மூழ்கிய பலனையும், அசுவமேத முதலிய எண்ணில்லாத யாகங்கள் செய்த பலனையும், எழுகோடி மஹாமந்திரங்களைச் செபித்த பலனையும், (நான்கு பக்கத்திலுஞ் சுவாலிக்கின்ற நான்கு அக்கினிக்குண்டமும் மேலே அதிக வெப்பத்தோடு பிரகாசிக்கின்ற சூரியனுமாகிய) பஞ்சாக்கினி மத்தியிலிருந்து அரிதாகிய தவம்புரிந்த பலனையும்விட எட்டுப்பங்கு அதிகமாகிய பலனை யடைவார்கள்.

சுத்தமாகிய ஆசனத்தில் உருத்திராக்கமணிகளைச் சிவலிங்க வடிவமாக வமைத்து, பத்திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்து, வெற்றிலை பாக்கு வாழைப்பழம் தேங்காய் மூடிகள் முதலியன வைத்து, நீர் மாற்றித் தூபதீபங்காட்டுதலாகிய பூசை செய்துவரின் அது சிவ பூசைப்பலனைத் தரும். ஒன்று, ஐந்து, பதினொன்று, பதினான்கு, பதினாறு முகமணிகளைத் தினம் பூசிப்பது உத்தமோத்தமமாம்.

உருத்திராக்கமணிகள் கிடைக்காவிடில் மண், கல், மரம் என்பவற்றுள் உருத்திராக்கமணிகளைப்போல் முகமும், இரேகையும், அடியுந் தோன்றச்செய்து அணிந்துகொள்ளலாம். இவ்விதஞ் செய்யு மணிகள் பார்த்திவ ருத்திராக்கமணிகளெனப் பெயர்பெறும் ; பொன்னிலும் உருத்திராக்கமணிகள்போற் செய்து புனைந்துகொள்வது முண்டு. அஃது ஆக்கினேய ருத்திராக்கமணியெனப் பெயர் பெறும் ; இந்த இருவித மணிகளணிந்தவர்களின் இருபத்தொரு வமிசத்தாரும் முத்திபெறுவர். செய்து அணிந்துகொள்ளும் மணி தரும் பலனே யித்தகையதாயின் தானே உற்பத்தியான மணிகள் அணிந்து கொள்ளின் அம்மணிகள் தரும்பலனை அளவிட்டுக்கூற முடியாதென்பது நிச்சயம்.

உருத்திராக்க வடப்பொதி சுமக்கப்பெற்ற புண்ணியத்தால் கழுதை நூறு கற்பகாலம் கைலாசத்திலுற்றதென உபதேசகாண்டமும் ; உருத்திராக்கந் தரிக்கப்பெற்ற புண்ணியத்தால் குரங்கு இராஜகுமாரனுகவும், உருத்திராக்கமணியைப் பெற்ற புண்ணியத்தால் சேவற்கோழி மந்திரிகுமாரனுகவும் பிறந்தார்களெனப் பிரமோத்தரகாண்டமும் கூறுகின்றன. பாவம் புண்ணியம் என்பதைப்பகுத்தறியும் அறிவில்லாத பறவையும் மிருகங்களும் விருப்பமின்றி வெறுப்போடு உருத்திராக்கந் தாங்கப்பெற்ற புண்ணியம் இத்தகையதென்றால் விருப்பத்தோடு உருத்திராக்க மணிந்துகொள்வோரின் புண்ணியத்தை யாவர் கூறவல்லவர்.

நெல்லிக்கனி, இலந்தைக்கனி, கடலை இவைபோன்ற பருமனுள்ளதாய் (சிங்கப்பூர்த்தீவிலே) விளைகின்ற உருத்திராக்கமணிகளிலே ஒருவகை மணிகளாக நூற்றியெட்டு, நூற்றியைந்து, ஐம்பது,

முப்பத்திரண்டு, முப்பது, இருபத்தெட்டு, இருபத்தேழு, இருபத்தாறு, இருபத்தைந்து, ஆறு, ஐந்து என்னும் கணக்குப்படி பொன்கம்பி, வெள்ளிக்கம்பி, தாமிரக்கம்பி என்பவற்றுள் இயன்றதொன்றில் முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக்கோர்த்து ஒன்றை யொன்று தீண்டாவண்ணம் இடையிடையே பூட்டிட்டுக்கட்டி இருதலை யுஞ் சேர்த்து மேருவென்னும் முகமணி வைத்துச் செய்துகொள்வ தாகிய மாலைகளுள் செல்வத்தையும் புண்ணியத்தையும் விரும்பியவர் கள் நூற்றியெட்டு அல்லது முப்பது மணிகள் கொண்ட மாலையையும், போகமோட்சங்களைக் கருதியவர்கள் நூற்றியைந்து மணிகளடங்கிய மாலையையும், இஷ்டசித்தியைக் கருதியவர்கள் ஐம்பது மணிகளுள்ள மாலையையும், வெற்றியை விரும்பியவர்கள் முப்பத்திரண்டு மணிகள் கொண்ட மாலையையும், பலத்தை யிச்சித்தவர்கள் இருபத்தெட்டு மணி களடங்கிய மாலையையும், தேவபதவியை யுத்தேசித்தவர்கள் இருபத் தேழு மணிகளுள்ள மாலையையும், செல்வவிருத்தியை நினைத்தவர்கள் இருபத்தாறு மணிகளடங்கிய மாலையையும், சிவசாயுச்சியத்தை யபேட் சித்தவர்கள் இருபத்தைந்து மணிகள்கொண்ட மாலையையும், சாந்தி யைக் கோரியவர்கள் ஆறுமணிகள்கொண்ட மாலையையும், போகத்தை யுத்தேசித்தவர்கள் ஐந்துமணிகளுள்ள மாலையையும் செய்து வைத்துக் கொண்டு வீடு, மடம், பசுத்தொழு, நந்தவனம், மலை, தீர்த்தக்கரை, கோவில், சிவசந்நிதானம் முதலிய இடங்களிலிருந்து அந்த மாலையை வலக்கையிலுள்ள நடு மூன்று விரல்களிலிட்டுப் பிறர் காணாதபடி மேல் வஸ்திரத்தினால் மறைத்துப் பெருவிரலால் துறவிகள் மேனோக்கித் தள்ளியும் இல்லறத்தார் கீழ்நோக்கித் தள்ளியும் முகமணியாகிய நாயக மணியைக் கணக்கிற் சேர்க்காமல் ஸ்ரீ பஞ்சாக்கர முதலிய சிவமந்திர செபஞ் செய்யின் ஒன்றுகோடியாம்.

கிரகஸ்தன் நூற்றியெட்டு மணியும் ஐம்பத்து நான்கு மணியும் இருபத்தேழு மணியும், துறவி இருபத்தைந்து மணியும் வெண்பட்டு அல்லது பருத்தி நூலிலே இருபத்தேழிழையாலாகிய கயிற்றிலே முகத் தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக் கோர்த்து ஒன்றை யொன்று தொடாவண்ணம் இடையிடையே நாகபாசம், பிரமக்கிரந்தி,

சாவித்திரி என்னும் முடிச்சுகளுள் இயன்றதொன்றை யிட்டுக் கயிற் றின் நுனியிரண்டையுஞ் சேர்த்து நாயகமணி யென்னும் முகமணி கோர்த்து முடிச்சிட்டு வைத்துக்கொண்டு சிவமந்திரசெபஞ் செய்து வரின் மிக்க விசேடமாம்.

இரண்டுமுகமணியும், மூன்றுமுகமணியும், பன்னிரண்டுமுக மணியும், பதின்மூன்றுமுகமணியும் செபமாலைக்கு ஆகாவாம்; அன்றி யும் ஒரேவிதமாகிய முகங்களையுடைய மணிகளையே ஜெபமாலைக்குக் கொள்ளல்வேண்டும்; பலவிதமாகிய முகங்களையுடைய மணிகளைச் செபமாலைக்குக்கொள்ளலாகாது.

திருச்சிற்றம்பலம்

---

## 4. பஞ்சாக்கர மகிமை

திருச்சிற்றம்பலம்

"வேதமுடிபாகிய பஞ்சாக்கரம் "திரையக்கரம், மலாக்கரம், பதி யக்கரம், பரையக்கரம், சிவாக்கர" மென வைந்தாம்.

திரையக்கரமானது பிருதுவி தத்துவமாய் கந்தவிஷயமாய் வெண் ணிறமாய் பூமிமயமாய் நிவர்த்திகலையாய் சத்தியோஜாதமாய் கர்ம சாதாக்கியமாய் நான்முகரூபமாய் சிருஷ்டியைத் தருகின்ற மறைப்பை யுடையது.

மலாக்கரமானது அப்புதத்துவமாய் ரசவிஷயமாய் கருநிறமாய் ஜலமயமாய் பிரதிஷ்டாகலையாய் வாமதேவமாய் கர்த்துரு சாதாக்கிய மாய் விஷ்ணுரூபமாய் திதியைத் தருகின்ற மயக்கத்தை யுடையது.

பதியக்கரமானது தேயுதத்துவமாய் ரூபவிஷயமாய் சிவந்த நிற மாய் அக்கினி மயமாய் வித்தியாகலையாய் அகோரமாய் மூர்த்தி சாதாக் கியமாய் உருத்திர சொரூபமாய் சம்மாரத்தைத் தருகின்ற ஞானசூரியப் பிரகாசத்தை யுடையது.

பரையக்கரமானது வாயுதத்துவமாய் பரிசவிஷயமாய் புகைநிற மாய் காற்றுமயமாய் சாந்திகலையாய் தற்புருஷமாய் அமூர்த்தி சாதாக்

கியமாய் மஹேசுவர ரூபமாய் திரோபவத்தைத் தருகின்ற சத்தி வடிவத்தை யுடையது.

சிவாக்கரமான ஆகாயதத்துவமாய் சத்தவிஷயமாய் நீலநிறமாயீ சுத்தவெளியாய் சாந்தியாதீதகலையாய் ஈசானமாய் சிவசாதாக்கியமாய் சதாசிவ ரூபமாய் அநுக்கிரகத்தைத் தருகின்ற சிவவடிவத்தை யுடையது.

திரையக்கரத்தை—திரோபாக்கரம், திரோதாக்கர மெனவும்; மலாக்கரத்தை—ஆணவாக்கர மெனவும்; பதியக்கரத்தை—இறையக்கரமெனவும்; பரையக்கரத்தை—அருளக்கரமெனவும்; சிவாக்கரத்தை—ஆவியக்கரமெனவுங் கூறுவர்.

பிண்டத்தினுள் குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவே பவித்திரதானமாய் நாலிதழுடையதாய் முக்கோணமாயிருக்கும் மூலாதார நடுவிலே (அகாரம், உகாரம், மகாரம் என்னும்) பிரணவமும்; மூலாதாரத்திற்கு இரண்டங்குல மேலே ஆறிதழுடையதாய் நாற்கோணமாயிருக்கும் சுவாதிஷ்டான நடுவிலே திரையக்கரமும்; சுவாதிஷ்டானத்திற்கு எட்டங்குல மேலே பத்திதழுடையதாய் பிறைகோணமாயிருக்கும் மணிபூரக நடுவிலே மலாக்கரமும்; மணிபூரகத்திற்குப் பத்தங்குல மேலே பன்னிரண்டிதழுடையதாய் (இருதயத்தானமாய்) முக்கோணமாயிருக்கும் அனாகத நடுவிலே பதியக்கரமும்; அனாகதத்திற்குப் பத்தங்குல மேலே பதினாறிதழுடையதாய் அறுகோணமாயிருக்கும் விசுத்தி நடுவிலே பரையக்கரமும்; விசுத்திக்குப் பன்னிரண்டங்குல மேலே இரண்டிதழுடையதாய் வட்டமாயிருக்கும் ஆக்கினை நடுவிலே சிவாக்கரமும் விளங்குவனவாம்.

திரையக்கரம் பரையக்கரத்திலும், மலாக்கரம் சிவாக்கரத்திலும், பரையக்கரம் சிவாக்கரம் பதியக்கரத்திலும், பதியக்கரந் தானேயாயும் ஒடுங்குமென்பர்.

திரையக்கரம், மலாக்கரம், பதியக்கரம், பரையக்கரம், சிவாக்கரம் முறையே கூடியது (சுத்த பஞ்சாக்கரமென்னும்) தூலபஞ்சாக்கரமாம்; இதனை உபதேசிக்கத்தக்கவர் சமயாசிரியர்.

பதியக்கரம், பரையக்கரம், சிவாக்கரம், திரையக்கரம், மலாக்-

காம் முறையே கூடியது (ஒரு தலை மாணிக்கமென்னும்) சூக்கும பஞ்சாக்கரமாம்; இதனை ஆசிரியருபதேசித்தலும், உபதேசித்தபோதிலும் மாணுக்கர் செபித்தலு மரிதாம்; சற்கருமங்களாலும், சாதுசங்கத்தாலும், ஜீவன்முத்தர்களைத் தரிசித்தலாலும், ஜீவன்முத்தர்களின் பிரசாதத்தாலும் பக்குவமடைந்தமலபரிபாகிகளுக்கே யுபதேசித்தல் வேண்டும். உபதேசிக்கத் தக்கவர் ஞானசிரியர்.

பதியக்கரம், பரையக்கரம், சீவாக்கரம், பரையக்கரம், பதியக்கரம் முறையே கூடியது (இருதலை மாணிக்கமென்னும்) காரண பஞ்சாக்கரமாம். இதுவே முத்தி பஞ்சாக்கரம். இஃது பவமாகிய கடலைக்கடந்து முத்தியாகிய கரையிற் சேரத் தெப்பமாகும். இதனை அதிதீவாதர பரிபாகிகளுக்கே போதிக்கவேண்டும். போதிக்கத்தக்கவர் மௌனசிரியர்.

பரையக்கரம், பதியக்கரம், முறையே கூடியது மஹா காரணமாம். இதுவே பதியாகும். இப்பதியை யடையக்கூடியது சீவாக்கரமாகிய பசு. இப்பசுவாகிய ஆன்மாக்கள் திரையக்கரமு மலாக்கரமுமாகிய பாசத்தை நீக்கவேண்டும். பாசம் நீங்கிய ஆன்மாக்கள் பதியாகிய மஹாகாரணப்பொருளை யடையும். மஹாகாரணப் பொருளைப் பெற்றவர் ஏகாந்தமாயிருந்து, மனதைக் கண்டத்தில் அசைவற நிறுத்தி அப்பொருளை நினையாமல் நினைக்கின் மனமொடுங்கும். மஹாகாரணப்பொருளை மாணுக்கர்களின் பக்குவா பக்குவத்தை யொருவருக்ஷஞ் சோதித்து பதியக்கரத்தை மனதிலடக்கக்கூடிய (இருவினையொப்பு மலபரிபாகஞ் சதுர்த்தாசத்தினி பாகம் விளங்கிய) பக்குவர்களுக்கே யுபதேசிப்பது கிரமமாம். உபதேசிக்கத்தக்கவர் அருளிறைவடிவங்கொண்ட ஞானதேசிகர்.

பதியக்கரமாகிய நாயோட்டு மந்திரமே மஹாமனு. அஃதை இதயத்தில் அடக்கினவர் முத்தியும், செபிக்கின்றவர் ஆத்மவிசாரமும் பெறுவர். அவ்வக்கரத்தைக் கோபத்தினலாயினும், சந்தோஷத்தினலாயினும், பகைவனிடத்தாயினும், சிநேகிதனிடத்தாயினும், மனைவியினிடத்தாயினும், கழுதையினிடத்தாயினும், நாயினிடத்தாயினும், மற்றும் எத்தன்மைப்பட்ட விடத்தாயினும் மனத்தினலும் சொல்லினு

னும் சோரவிடாமல் செலுத்தத்தக்கவர் நினைத்தற்கரிய பரமபதியே யாவர் ; அவர் இத்தேகத்தோடிருந்து அந்நிலைப்படியே முத்தியடைவர். பதியக்கரத்தை விட்டவர்கள் செய்கின்ற பூசை, செபம், தவம், ஆத்மவிசாரம், தரும முதலியவை வீணாகுமென்பர்.

பஞ்சாக்கர செபம் வீடு, பசுத்தொழு, மடம், நந்தவனம்; நதிக்கரை, கடற்கரை, மலை, வனம், யாகசாலை, சிவாலயம், சிவசந்நிதானம் இந்தத் தானங்களிலிருந்து செய்தல்வேண்டும். வீட்டில் ஒருரு செபிக்கின் ஒருரு செபித்த பலனும் ; பசுத்தொழு, மடம், நந்தவனம் இவைகளில் ஒருரு செபிக்கின் நூறுரு செபித்த பலனும் ; நதிக்கரையில் ஒருரு செபிக்கின் ஆயிரமுரு செபித்த பலனும்; கடற்கரையில் ஒருரு செபிக்கின் பதினாயிரமுரு செபித்த பலனும் ; மலை, வனமிவற்றில் ஒருரு செபிக்கின் இலக்ஷமுரு செபித்த பலனும்; சிவாலயம், யாகசாலை இவைகளில் ஒருரு செபிக்கின் கோடியுரு செபித்த பலனும் ; சிவ சன்னிதானத்தில் ஒருரு செபிக்கின் எண்ணிறந்தகோடியுரு செபித்த பலனு முண்டாம்.

பஞ்சாக்கரஞ் செபிக்கும்போது மான்றோல், புலித்தோல், இரத்தின கம்பளம், வெண்பட்டு வெள்ளை வஸ்திரம் என்பவற்றுளியன்றதொன்றின்மீது வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் சுவத்திகாசனம், கோமுகாசனம், பதுமாசனம், வீராசனம், சிங்காசனம், பத்திராசனம், முத்தாசனம், மயூராசனம், சுகாசனம் என்பவற்றுளொன்றில் ஒருமை பொருந்திய மனத்தோடிருத்தல் வேண்டும்.

மான்றோல் ஞான விருத்தியையும், புலித்தோல் முத்தியையும், இரத்தின கம்பளம் துன்ப நிவர்த்தியையும், வெண்பட்டு வெள்ளை வஸ்திரம் உடற்பிணி நீக்கத்தையுங் கொடுக்கும். (மரப்பலகை, கல், தரை, சிகப்பு வஸ்திரம் இவற்றின் மீதிருந்து செபிக்கின் வறுமை, பிணி, துன்ப முதலியன வுண்டாம்.)

சுவத்திகாசனமாவது—வலக்கணைக்கால் வலத்தொடை இதற்கு நடுவில் இடப்பாதத்தையும், இட முழந்தாள் பொருத்தத்திற்கு நடுவில் வலப்பாதத்தையும் பொருந்தச் சேர்த்து (தொடைக்கு முழங்காலுக்

கும் நடுவில் இரண்டுள்ளங்கால்களையுஞ் செலுத்தி)' சமதேகமாக இறு மாந்திருப்பது.

கோமுகாசனமாவது—வாமபாகத்திற்கடியில் வலத்தாட் கரட்டினையும், வலத்தொடையின் பின்பக்கத்தில் இடத்தாட் கரட்டினையும் (சப்பளமாக) சேர்த்திருப்பது.

பதுமாசனமாவது—இடபாகத்தொடையில் வலத்தாளையும், இடது தாளை வலப்புறத் தொடையிலுமாகக் கால்மேல் கால்மாறி, இருகாற் பெருவிரல்களையும் இரண்டு கரத்தாலும் (பின்புறமாக) மாறிப் பிடித்துக்கொண்டு அசைவின்றி யிருப்பது.

வீராசனமாவது—இடப்பாதக் கரட்டை வலத்தொடையின் மேல் வைத்து உடல் தளர்ச்சியின்றிச் சமமாக நாட்டங்கொண்டு நிற்பது.

சிங்காசனமாவது—இடப்பாதக்கரட்டினை வலப்பீசத்தின் கீழும், வலப்பாதக் கரட்டினை இடப்பீசத்தின் கீழும் சேர்த்து; இரு கரத்தையும் முழந்தாளிரண்டின்மேல் விரல் நிமிர்த்து வைத்து நாசி நுனியில் பார்வை செலுத்தி நிற்பது.

பத்திராசனமாவது—இருபாதக் கரட்டினையும் இரண்டண்டங்களின் கீழ்வைத்து, இருதொடையின்மேல் இருகரத்தையும் ஊன்றி யிருப்பது.

முத்தாசனமாவது—இடப்பாதக் கரட்டை அண்டத்தின் கீழ் வைத்து, அதன்கீழ் வலப்பாதக்கரட்டைப் பொருந்த வைத்திருப்பது. (அல்லது குறியின் மேற்பாகத்தில் இடத்தாட்கரட்டினை வைத்து அதன்மேலாக வலத்தாட்கரட்டை வைத்திருப்பது.)

மயூராசனமாவது—இரு முழங்காலையும் இரு முழங்கையையும் பூமியிலூன்றி மேலெழும்பியவாறு தியானித்திருப்பது.

சுகாசனமாவது—எவ்விதத்தில் சுகமும் தைரியமும் உண்டாகுமோ அவ்விதமிருப்பது.

இவ்வாதனங்களுள் பத்திராசனம் விஷத்தையும் பயத்தையும் நீக்கும் ; மயூராசனம் பாவத்தைப் போக்கும், எத்தன காரியஞ் சித்தியாகும்.

பஞ்சாக்கரஜெபம் வாசகம், உபாஞ்சு, மானசமென மூவகைப்

படும். அருகிலிருக்கும் பிறர் செவிக்குக் கேட்கும்படி செபிப்பது (பாஷ்யமென்னும்) வாசகம். நாக்குநுனி உதட்டைத் தீண்ட மெள்ளத் தன் செவிக்குமாத்திரங் கேட்கும்படி செபிப்பது (மந்தமென்னும்) உபாஞ்சு. நாக்குநுனி உதட்டைத் தீண்டாமல் ஒருமைபொருந்திய மனத்தோடு பிறரறியாவண்ணம் செபிப்பது மானசம். வாசகம் நூறு மடங்கு பலமும், உபாஞ்சு பதினாயிரமடங்கு பலமும், மானசங் கோடி மடங்கு பலமுந் தரும்.

பஞ்சாக்கரஞ் செபிக்குங்காலத்தில் வலக்கையிலுள்ள பெருவிரலாகிய அங்குஷ்டம், சுட்டுவிரலாகிய தர்ச்சனி, நடுவிரலாகிய மத்திமை, ஆழிவிரலாகிய அனாமிகை, சுடைவிரலாகிய கனிஷ்டையென்னும் விரல்களின் இறையைக் கொண்டேனும், சங்கமணி, படிகமணி, பதுமமணி, புத்திரதீபமணி, பவளமணி, முத்துமணி, மாணிக்கமணி, மரகதமணி, குசக்கிரந்திமணி, பொன்மணி, வெள்ளிமணி, மாதிருகாக்ஷரமணி, இரசமணி, உருத்திராக்கமணி என்பவற்றுள் ஒருவகை மணிகளாலாகிய மாலையைக்கொண்டேனும் எண்ணிச்செய்தலுமுண்டு.

விரல்களுள் அங்குஷ்டத்தினல் மோக்ஷமும், தர்ச்சனியால் சத்துருநாசமும், மத்திமையால் அர்த்தசித்தியும், அனாமிகையால் சாந்தியும், கனிஷ்டையால் இரக்ஷணையுமாம்.

மணிகளுள் சங்கமணிகளால் ஐசுவரியமும், படிகமணிகளால் மோக்ஷமும், பதுமமணிகளால் புஷ்டியும் இலக்ஷ்மிகரமும், புத்திரதீபமணிகளால் புத்திரர் பசுதானியாதி அபிவிர்த்தியும், பவளமணிகளால் வசியமாதிகளும், முத்துமணிகளால் சர்வசித்தியாதிகளும், மாணிக்கமணிகளால் உலகவசியமாதிகளும், மரகத மணிகளால் சத்துருசய முதலியவைகளும், குசக்கிரந்திமணிகளால் பாவநாசமும் வித்தியாபிவிர்த்தியும், பொன்மணி வெள்ளிமணிகளால் காமிககன்மாதிகளும், மாதிருகாக்ஷரமணிகளால் வாக்குச் சித்தியும், இரசமணிகளால் சர்வகாரியசித்தியும், உருத்திராக்கமணிகளால் போகமோக்ஷங்களுமுண்டாம்.

உருத்திராக்கமணி கொண்டு ஒருரு செபிக்கின் அநந்தமுரு செபித்த பலனுண்டாம். இதனல் உருத்திராக்கமணியே சிறந்ததாகும்.

பஞ்சாக்கரத்தை வாசகமாகச் செபிப்பவர் சுட்டுவிரலிலும், உபாஞ்சுவாகச் செபிப்பவர் நடுவிரலிலும், மானசமாகச் செபிப்பவர் ஆழி விரலிலும் செபமாலையை வைத்து பிறர் கண்ணுக்குப் புலப்படாவண்ணம் வஸ்திரத்தினால் மறைத்து (சிவபெருமான் நமது சரீரமாகிய கோவிலினுள் இதயகமலமாகிய பதுமாசனத்தின் கண் கோடியிளஞ்சூரியப் பிரகாசமாய் விளங்குவதாகக் கருதி) பெருவிரலினாலே நாயகமணிக்கு அடுத்த முகமேனோக்கிய மணிமுதல் ஒவ்வொருமணியாக போகத்தை விரும்பியவர்கள் கீழ்நோக்கியும் மோக்ஷத்தை விரும்பியவர்கள் மேனோக்கியும் ஒன்றோடொன்று தாக்காவண்ணந் தள்ளி நாயகமணியைக் கடவாமல் செபித்தல் வேண்டும்.

செபிக்கும்போது நாயகமணி கைக்கெட்டியதாயின் அதனைக் கடவாமல் திரும்ப மறித்துவாங்கி முன்போல் கையில் ஏறிட்டுச் செபித்தல் வேண்டும்.

செபமாலையில் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப்படினும் நாயகமணியைக் கடக்கினும் பாவமுண்டாம்.

பஞ்சாக்கரத்தை பிராணவாயு இடப்பக்க நாடியாகிய இடைகலை † யிலே நடக்கும்போது செபித்தவர் போகத்தையும், வலப்பக்க நாடியாகிய பிங்கலை ‡ யிலே நடக்கும்போது செபித்தவர் மோக்ஷத்தையும் நடுநிற்கும் நாடியாகிய சுழுமுனையிலே நடக்கும்போது செபித்தவர் போக மோக்ஷங்களையும் பெறுவர்.

நூற்றெட்டுருவாயினும், ஐம்பதுருவாயினும், இருபத்தைந்துருவாயினும், பத்துருவாயினும் நியமமாகச் செபித்தல்வேண்டும்.

அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிருமாசப்பிறப்பு, கிரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து தியானம் செபம் முதலியன விசேஷமாகச் செய்தல்வேண்டும்.

---

† சந்திரகலை. ‡ சூரியகலை

சித்திரை ஐப்பசி என்னும் இவ்விரண்டு மாசப்பிறப்பும் விஷு எனப்படும்; இவைகளிலே, மாசம் பிறத்தற்குமுன் னெட்டுநாழிகையும், பின்னெட்டுநாழிகையும் புண்ணியகாலம்.

ஆடிமாசப்பிறப்பு தக்ஷிணாயனம் எனப்படும்; இதிலே, மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

தை மாசப்பிறப்பு உத்தராயணம் எனப்படும்; இதிலே, மாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாசப் பிறப்பும் விஷ்ணுபதி எனப்படும்; இவைகளிலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாசப் பிறப்பும் சடசீதிமுகம் எனப்படும்; இவைகளிலே மாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

சூரிய கிரகணத்திலே பரிசகாலம் புண்ணியகாலம். சந்திர கிர கணத்திலே விமோசன காலம் புண்ணியகாலம்.

மாசி மாசத்து அபரபக்கம் சதுர்த்தசி இரவில் வருங்காலம் (சிவ ராத்திரி) புண்ணியகாலம்.

மார்கழி மாசம் பூர்வபக்கஞ் சஷ்டித்திதியும் சதய நக்ஷத்திரம் விதிபாத யோகமுங்கூடிய காலம் (மஹாவிதிபாத) புண்ணியகாலம்.

தை மாசத்திலே, ஞாயிற்றுக்கிழமையும் அமாவாசையும் திரு வோண நக்ஷத்திரமும் விதிபாத யோகமுங் கூடியகாலம் (அர்த்தோ தயு) புண்ணியகாலம்.

தை மாசத்திலே, திங்கட்கிழமையும் அமாவாசையும் திருவோண நக்ஷத்திரமும் விதிபாத யோகமுங் கூடிய காலம் (மஹோதய) புண் ணிய காலம்.

பஞ்சாக்கரத்தை சட்டை யிட்டுக்கொண்டும், சிரசில் வேஷ்டி கட்

டிக்கொண்டும், போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், கௌபீனந்தரியாமலும், வேஷ்டி தரியாமலும், பேசிக்கொண்டும், இருளிலிருந்துகொண்டும் நாசி நுனியிற் பார்வை செலுத்தாமலுஞ் செபிக்கலாகாது.

பஞ்சாக்கரஞ் செபிக்கும்போது கோபம், சந்தோஷம், கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம்.

பொன்தகடு, வெள்ளித்தகடு, தாமிரத்தகடு என்பவற்றுளியன்றொன்றில் இருபத்தைந்து அல்லது நூற்றிருபத்தைந்து வீடு அமைத்து அதனுள் பஞ்சாக்கரத்தை விதிப்படி அடைத்து பூசித்துவரின் அது எல்லாவிதப் பேற்றையும் எளிதில் நல்கும்.

திருச்சிற்றம்பலம்

நாற்பொருள் விளக்கம்

முற்றிற்று

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

THE GUARDIAN PRESS, MOUNT ROAD, MADRAS.